கல்கி



KALKI ஆகஸ்ட் 21, 1955 4 அணா

ஹிமாலயா புக்கே உபயோகித்து அதன் அதிகப்படியான புதுப்பொலிவை உணருங்கள்

–நாள்முழுவதும்!



வதனத்திற்கு ஹிமாலயா
டாய்லெட் புக்கே
பவுடர் ஒரு சிறந்த இய
சரி அழகு சாதனம்—
மணமுள்ளது.
மிருதுவானது.
குளிர்ச்சியானது.





ஹிமாலயா புக்கே

டாய்லெட் அண்டு டால்கம்
பவுடர்ஸ்

சிவப்புக் கோடிட்ட ஹிமாலயா புக்கே
டாய்லெட் பவுடர் டின் ஒரு பவுடர்
பேடுடன் கூடியது.

HBP. 13A-50 TM இராஸ்மிக் கம்பெனி லிட. மனடதுக்காக இந்தியாவில் செய்தது.

மலர் 15 இதழ் 3
கல்கி
பொருளடக்கம்
மன்மத ஆவணி ௫

1955 ஆகஸ்டு 21

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.


வெற்றி!
வெற்றி!!
வெற்றி!!!
.... ஆர். ஆர். பிக்சர்ஸ் ....
குலேபகாவலி
டைரக்ஷன்: ராமண்ணா
இப்பொழுது நடைபெறுகிறது
சென்னை : ஸ்ரீ கிருஷ்ணா - கெயிட்டி
ராஜகுமாரி - உமா
மற்றும் தென்னாடெங்கும்



மலர் 15 | இதழ் 3

தமிழ்த்திரு நாடு தன்னைப் - பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மன்மத ஸு | ஆவணி 5

வீரத் தியாகிகளை மறவோம்

பாரத மக்கள் நாடெங்கும் சுதந்திர விழாவைக் குதூகலமாகக் கொண்டாடி வந்த சமயத்தில், கோவாவிலிருந்து வந்த பயங்கரமான செய்தி எல்லோரையும் அதிர்ச்சி அடையும்படி செய்து விட்டது.

கோவாவின் விடுதலைக்காக, சாத்துவீக சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்ட தேச பக்தர்கள் மீது போர்ச்சுகல் துருப்புகள் சுட்டதால் ஏராளமானவர்கள் பலியாயினர் என்ற செய்தி அகில இந்தியாவையும் திடுக்கிடச் செய்து விட்டது.

போர்ச்சுகல் அதிகாரிகள் செய்த படுகொலைகளை நேரில் பார்த்த அமெரிக்கப் பிரமுகர்கள், நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகள் சாத்வீகமாகவே கோவா எல்லைக்குள் சென்றனர் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

டில்லி செங்கோட்டையில் தாயின் மணிக்கொடியை ஏற்றி வைத்த ஜவாஹர் லால் நேரு கோவாவில் நிராயுதபாணிகளான சத்தியாக்கிரகிகள் பலியான செய்தியைக் கேட்டுத் துடிதுடித்து விட்டார்.

"ஆயுதங்கள் எதுவும் வைத்துக் கொள்ளாத சத்தியாக்கிரகிகளைப் போர்ச்சுகல் அதிகாரிகள் சுட்டு வீழ்த்தியது சர்வதேசச் சட்டத்துக்கு முரணான, நாகரிகமற்ற காரியம்.

போர்ச்சுகல் அதிகாரிகள் அத்தகைய காட்டுமிராண்டித்தனமான முறைகளைக் கைக்கொள்வது அக்கிரமமாகும்.

கோவா இந்தியாவைச் சேர்ந்த ஒரு பாகம். அதை இந்தியாவிலிருந்து பிரிக்கும் சக்தி இவ்வுலகில் எவருக்கும் இல்லை. பாரத நாடு விடுதலையடைந்த பின், அதைச் சேர்ந்த ஒரு பிரதேசமான கோவா ஓர் ஐரோப்பிய அரசின் ஆட்சியில் இருப்பதென்பது கனவில்கூட சகிக்க முடியாத விஷயம்."

இவ்விதம் ஜவாஹர்லால்ஜி சுதந்திர தினத்தன்று உலகம் அறியப் பிரகடனம் செய்திருக்கிறார். காங்கிரஸ் மகாசபை அக்ராசனர் ஸ்ரீ தேபர் முதலிய பிரமுகர்களும் போர்ச்சுகல் அதிகாரிகளின் விபரீதத்தை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள்.

ஜவாஹர்லால்ஜியும் காங்கிரஸ் அக்ராசனரும் கோடிக்கணக்கான பாரத மக்களின் கண்டனத்தையும் உணர்ச்சியையுமே பிரதிபலித்திருக்கிறார்கள்.

* * * *

கோவா சத்தியாக்கிரக இயக்கம் நேற்றோ, இன்றோ திடீரென்று ஆரம்பமானது அல்ல. அந்த இயக்கத்துக்கு 1946-ம் ஆண்டிலேயே அஸ்திவாரம் அமைக்கப்பட்டது. அது மகாத்மா காந்தியின் ஆசியையும் பெற்றது என்பதை ஞாபகமூட்ட விரும்புகிறோம்.

"இந்தியாவுடன் கோவா சேருவதற்கு நான் எனக்குள்ள செல்வாக்கு அனைத்தையும் உபயோகிக்கத் தயாராக இருக்கிறேன். மன உறுதியையும் தைரியத்தையும் செயலில் காட்டுங்கள்."

இவ்விதம் காந்தி மகான் 1946-ம் ஆண்டில் அவரைத் தரிசித்து அவரது ஆசியைக் கோரிய கோவா இளைஞர் சங்கப் பிரதிநிதிகளுக்கு உற்சாகமூட்டினார்.

அவ்வாறு காந்திஜியின் ஆசியுடன் பிறப்புரிமையையும் அரசியல் தர்மத்தையும் அடிப்படையாகக் கொண்ட சத்தியாக்கிரக இயக்கமே இன்று உச்ச நிலையை

அடைந்துள்ளது. மக்களிடையே பொங்கி எழுந்துள்ள சுதந்திர உணர்ச்சிப் பிரவாகத்தை அடக்குமுறைகளாலும் துப்பாக்கிப் பிரயோகத்தினாலும் தடுத்து விடலாம் என்று கோவா அதிகாரிகள் இன்னும் தொடர்ந்து கனவு கண்டு வருவது ஆச்சரியமாக இருக்கிறது.

கோவா விடுதலைக்காக வீர சொர்க்கம் அடைந்த தியாகிகளைப் பாரத மக்கள் எக்காலத்திலும் மறக்க மாட்டார்கள்.

சங்கீத நாடக நாட்டியம்

சென்ற வாரம் சென்னையில் சங்கீத நாடக நாட்டிய சங்கம் தில்லி ஸ்தாபனத்துக்குக் கிளையாக கவர்னர் அவர்களால் மங்களத் தொடக்கம் செய்யப்பட்டது. பல்வேறு கலைத் தலைவர்களும் பிரசன்னமாகி யிருந்தார்கள். இப்போதுள்ள சங்கீத சங்கங்களுக்கு இந்தப் புது ஸ்தாபனத்தினால் ஆதரவும் உதவியும் ஏற்படுமே யன்றிப் போட்டி ஒன்றும் இல்லை என்று தெளிவாகக் கூறப்பட்டது. ஸ்ரீமதி பட்டம்மாளுடைய பிரார்த்தனைப் பாடலும், பேச்சுக்களுக்குப் பிறகு ஸ்ரீமதி பாலசரஸ்வதியின் நாட்டியமும் அபிநயமும், அதன் பிறகு டி. கே. ஷண்முகம் அவர்களின் அவ்வையார் நாடகத்தில் ஒன்றிரண்டு காட்சிகளும் பார்த்து அண்ணாமலை மன்றத்தில் நிரம்பிக் கூடிய மக்கள் ரஸித்தனர்.

'நுண்கலை' என்கிற பெயரில் வழங்கி வரும் நாடக நாட்டிய சங்கீதக் கலைகளுக்கும் மற்றக் கல்விக் கலைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை ராஜாஜி தம்முடைய பேச்சில் எடுத்து விளக்கினார். எழுதப் படிக்கத் தெரிந்தவர்களே இலக்கிய நூல்களையும் மற்றக் கல்விக் கலைகளையும் அனுபவிக்க முடியும். எழுதப் படிக்கத் தெரியாத பாமரர்கள் உள்பட நல்ல முறையில் அனுபவித்து மேன்மை யடையும் படியான கலைகளாகும் ஆடல் பாடல். கற்றோருக்கும் கல்லாதவருக்கும் பேதமின்றி மகிழ்ச்சியைத் தரும் கலைகளுக்குத்தான் நுண் கலை என்கிற பெயர் வழங்கி வருகிறது. இலக்கியத்தைப் படித்து அடையும் மகிழ்ச்சிக்கும், பாட்டைக் கேட்டு அடையும் மகிழ்ச்சிக்கும் வித்தியாசம் இதுவே. ஒன்று சிலருக்குத்தான் உண்டு. மற்றொன்று அனைவருக்கும் பயன்படும். "மகிழ்ச்சி தருவதுடன் பண்பும் இருக்க வேண்டும், ஆடல் பாடல்களில்" என்று ராஜாஜி வற்புறுத்தினார். பக்தியோடுதான் ஆடலும் பாடலும் இருக்க வேண்டும் என்பது பெரியோர்களுடைய கருத்து. பக்திக்குப் பாட்டின் பொருளை உணரும்படியான முறையில் பாட வேண்டும். இசையின் துணையும் இருக்க வேண்டும். இந்த விஷயங்களை நினைவில் வைத்துக் கொண்டால் மொழி விவாதங்களுக்கு இடமில்லை. பக்தியை விட்டு இசையில் ஒரு நல்ல பயனும் இல்லை. மகிழ்ச்சியோடு நற்பயனும் இருக்க வேண்டும். இதுவே ராஜாஜியின் உறுதியான கருத்து.

பி. ஸி. ஜி கோளாறு

சென்னை சுகாதார மந்திரிக்கு ராஜாஜி பின் வரும் கடிதத்தை ஆகஸ்ட் 11-ல் அனுப்பி யிருக்கிறார் :—

"உடனடியாகக் கவனிக்க வேண்டிய பி. ஸி. ஜி கோளாறு விஷயம் ஒன்று வந்திருக்கிறது. இதைப்பரிசீலனை செய்து எனக்குத் தெரிவித்தால் மிகுந்த நன்றியுடையவனாக இருப்பேன்.

திருச்சி ஜில்லா, மணச்சநல்லூரைச் சேர்ந்த உளுந்தங்குடியின் கிராமவாசியான வேலாயுத மூத்து ராஜா என்பவருடைய மகன் முருகேசன் என்ற பத்து வயதுச் சிறுவனுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு பி. ஸி. ஜி போடப்பட்டது. ஒரு வாரத்துக்குள் சிறுவனின் உடம்பு முழுதும் அரிப்பும், சீழும் கூடிய புண்கள் ஏற்பட்டன. அதை ஒட்டி அப்புண்களைச் சுற்றிக் கரை கட்டினாற்போல் தடிப்புகளும் ஏற்பட்டன. இந்த நிலை மூன்று அல்லது நான்கு வாரங்கள் நீடித்தது. பிறகு முகம், கைகால், வயிறு எல்லா இடங்களிலும் வீக்கம் ஏற்பட்டது. பத்து நாட்களுக்கு முன்பு இந்த நிலையில் சிறுவன் டாக்டரிடம் காண்பிக்கப் பட்டான். சிறுவனைச் சேர்ந்தவர்கள் பி. ஸி. ஜி ஊசி குத்திய பிறகுதான் இந்த உபாதைகள் எல்லாம் ஏற்பட்டன என்று கூறினார்கள். சுரமும் இலேசாக இருந்து வந்தது.

9-ம் தேதி மணச்சநல்லூரிலிருந்து ஒரு மைலுக்கு அப்பாலுள்ள கிராமத்துக்கு டாக்டர் போய்ப் பார்த்து விட்டு வந்தார். சிறுவன் 102 டிகிரி ஜுரத்துடன் பிரக்ஞையற்றுக் கிடந்தான். வீக்கம் அதிகரித்திருந்தது. காக்காய் வலிப்புப் போன்ற இழுப்பு சென்ற 24 மணி நேரமாக அடிக்கடி ஏற்பட்டு வருகிறது. வலது சுவாசப் பை கெட்டுப் போயிருப்பதாகக் காண்கிறது. கண் பார்வை சம்பந்தப்பட்ட மூளைப் பகுதி பாதிக்கப்பட்டிருப்பதால், சிறுவனின் கண் நரம்பு பாதிக்கப்பட்டு 'ஒண்ணரைக் கண் பார்வை'யாக இருந்து வருகிறது. 'என்ஸெபாலிடிஸ்' என்ற நோயின் அறிகுறியாகும் இது. சிறுவனின் நிலை மிகவும் கவலைக்கிடமாக இருந்தது 9-ம் தேதி."

★

ராஜாஜி அவர்களுக்கு

வணக்கத்துடன் எழுதிக் கொள்வது.

'கல்கி'யில் பி. ஸி. ஜியைப் பற்றிக் கூறியிருந்ததை நானும் படித்தேன். பி. ஸி. ஜியால் நான் அடைந்த துயரத்தை எழுத எனக்குக் கை கூசுகிறது. சென்ற 1950-ல் இங்கே பள்ளிக்கூடத்தில் பெற்றோர்கள் அநுமதியின்றி ஊசி குத்தப்பட்டது, என் குழந்தைகள் நால்வருக்கு. ஊசி குத்தும் வரையிலும் குழந்தைகள் நல்ல ஆரோக்கியமாகத்தான் இருந்தார்கள். பெரியவள் விசாலாட்சி ஏழாவது



சென்ற பத்தாம் தேதி அண்ணாமலை மன்றத்தில் நடந்த சங்கீத நாடக நாட்டியக் கழகத் தொடக்க விழாவில் கூடியிருந்த ரஸிகர்கள் கூட்டத்தில் ஒரு பகுதி. தலைவர் ராஜாஜி, கனம் ஸ்ரீபிரகாசா, முதன் மந்திரி காமராஜ நாடார், பிரதம நீதிபதி திரு ராஜமன்னார், நிதிமந்திரி சி. சுப்பிரமணியம், ஸ்ரீமதி ருக்மிணி தேவி முதலியவர்கள் முதல் வரிசையில் அமர்ந்து நாட்டிய, நாடகங்களை அனுபவித்தனர்.

வகுப்பிலும், சின்னவள் அன்னபூரணி ஐந்தாவது வகுப்பிலும், மூன்றாமவள் கமலம் நான்காவது வகுப்பிலும், நாலாமவள் கிருஷ்ணம்பாள் இரண்டாவதிலும் படித்துக் கொண்டிருந்தார்கள். பி. ஸி. ஜி வைத்த பிறகு பெரியவள் விசாலாட்சிக்கு அடிக்கடி தலைவலியும் காய்ச்சலும் வந்து கொண்டிருந்தன. எங்கள் குடும்ப டாக்டரிடம் காட்டினோம். டி. பி. என்று தெரிய வந்தது. டி. பி. க்கான வைத்தியங்கள் எவ்வளவோ செய்தோம். ஒன்றும் பலன் அளிக்கவில்லை. பி. ஸி. ஜி வைத்த ஆறுவது மாதம் குழந்தையை இழந்தோம். சின்னவள் அன்னபூரணிக்கு இதுவரையில் ஒன்றுமில்லை. மூன்றுமவள் கமலத்துக்கு அடிக்கடி காய்ச்சல் வருகிறது. காய்ச்சல் வருகிற போது பி. ஸி. ஜி வைத்த இடத்தில் பெரிதாக வீக்கம் காணுகிறது. கை அசைக்க முடிகிறதில்லை. உடம்பு ரொம்ப பலஹீனமாக இருக்கிறது. குத்து வைத்த இடம் வீங்கும்போது கானிலும் சிரங்கைப் போல் ஒன்று வருகிறது. சின்னவள் கிருஷ்ணம்பாளுக்கு அடிக்கடி மார்பு வலி வருகிறது. அவளுக்கு உடம்பு ரொம்ப பலஹீனமாக இருக்கிறது. இதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும்! யாரிடம் காட்ட வேண்டும்! இதற்குப் பரிகாரம் உண்டா என்பதைத் தெரியப் படுத்தும்படி தங்களை ரொம்பக் கேட்டுக் கொள்கிறேன். இதை மற்றத் தாய்மார்களுக்கும் எடுத்துச் சொல்லி அவரவர்கள் குழந்தைகளை நரபலியிலிருந்து காப்பாற்றும்படி வேண்டுகிறேன்.

கொச்சி
9—8—55

இப்படிக்கு, தங்கள் சகோதரி,
டி. எஸ். தைலாம்பாள்

அட்டைப்பட விளக்கம்

அன்னையின் அஞ்சலி

சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கிலேனே!

எட்டு ஆண்டுகளுக்கு முன் பாரதத் தாய் சுதந்திர தேவியின் கடைக்கண் பார்வையால் அருள் பாலிக்கப் பெற்றாள். அன்றிலிருந்து நாம் எத்தனையோ பாதைகளில் வெகு வேகமாக முன்னேறிக் கொண்டு வந்திருக்கிறோம். வெற்றிகரமாக முதல் ஐந்தாண்டு திட்டத்தை நிறைவேற்றி உணவுப் பஞ்சம் என்னும் கொடிய பிடியிலிருந்து விடுபட்டோம். இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்தை உருவாக்கி நாட்டில் தொழில் வளத்தைப் பெருக்கப் பார்க்கிறோம். இதனிடையில் நமது பிரதமர் நேருஜியின் தலைமையில் உலக அரசியலிலே இந்தியாவின் அந்தஸ்து மிக உயர்ந்து விட்டிருக்கிறது.

இத்தகைய அரிய சாதனைகள் நம்மால் முடிந்ததற்குக் காரணம் எட்டு ஆண்டுகளுக்கு முன்பு சுதந்திர தேவி நம்மீது கடைக்கண் வைத்ததே அல்லவா!

அதனால், நன்றி மறவாத மக்களாகிய நாம் ஆண்டுதோறும் ஆகஸ்ட் 15-ம் தேதியில் சுதந்திர தேவிக்கு மிகுந்த பக்தி சிரத்தையுடன் அஞ்சலி செலுத்தி வருகிறோம். இந்த அற்புத நிகழ்ச்சியை அரிய ஓவியமாகப் புகழ்பெற்ற ஓவியக் கலைஞர் 'வர்மா' வழங்கி இருக்கிறார்.

அணு குண்டு கைப்பிடிப் போட்ட சாந்தி வெண்குடை!



என்ன செய்தி?

சுகாதார மந்திரியின் கடிதம்

"பெற்றோர்களுடைய சம்மதத்தைப் பெற்றே இனிமேல் பி. ஸி. ஜி ஊசி குத்துவோம்" என்று சென்னை அறுமைய மந்திரி அவர்கள் ராஜாஜி அவர்களுக்கு ஆகஸ்ட் பத்தாந் தேதி யிட்ட கடிதத்தில் எழுதி யிருக்கிறார். பெற்றோர் சம்மதி யில்லாமற் போனால் இனிமேல் ஊசி குத்துவதில்லை என்ற உறுதி கொடுத்திருக்கிறார். 'என் குழந்தைக்கு ஊசி குத்து' என்று யாரேனும் சம்மதித்துக் கேட்டால் குத்துவதற்கு ராஜாஜி ஆட்சேபணை ஒன்றும் சொல்லவில்லை. சிறு குழந்தைகள் பள்ளிக்கூடத்தில் நின்று, வேண்டாம் என்று சொல்லுவதற்குத் தயங்குவார்கள். பயங்கொள்ளி என்று பெயர் கிடைக்குமோ என்பதாக வெட்கப்படுவார்கள். ஊசி குத்தும் தினங்களில் குழந்தையைப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பாமல் இருப்பதே க்ஷேமம் என்பது ராஜாஜியினுடைய அபிப்பிராயம்.

பாவம், அரசாங்கம் என்ன செய்ய முடியும்? டில்லி அறுமைய மந்திரி அவர்களை எதிர்த்துப் போராடுவது எளிதல்ல! மிக நெருங்கிய நண்பராக இருந்த போதிலும் ராஜ்குமாரி அம்ருத்குமாரி அவர்களை ராஜாஜி எதிர்க்கிறார். எல்லாருக்கும் அந்த சுதந்திரம் இருக்காது.

இன்னொரு விஷயம்: ஊசி குத்திக் கொள்ளுகிறவர்களுடைய சம்மதம் பெறுவதுடன், அந்தச் சம்மதத்தைப் பெறுவதற்காகச் செய்யப்படும் பிரசாரத்தில் உண்மையை மறைக்காமலும், எதிர்பார்க்கும் நன்மையை அதிகப்படுத்திச் சொல்லாமலும் இருக்க வேண்டும். எத்தனை காலத்துக்கு இந்த ஊசி மருந்தினால் பாதுகாப்பு அளிக்கிறார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துச் சொல்ல வேண்டும். அத்துடன் அதிகமான 'நோய்த் தொத்து' வந்தால் இந்த ஊசி மருந்து தாங்காது என்பதையும் அவர்களுக்குப் புரியும்படி சரியாகக் கூற வேண்டும்.

அரசியல் தேர்தல் பிரசாரங்களைப் போல் வைத்தியப் பிரசாரத்தில் அதிகப்படுத்திச் சொல்லி ஜனங்களை மயக்குவது தவறாகும். உண்மைக்குப் பயந்து இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்!

திருவாங்கூர் சர்க்கார் அறிக்கை

திருவாங்கூரில் தமிழர்கள் வாழும் பிரதேசங்களைத் தமிழ் நாட்டுடன் இணைக்க வேண்டும் என்று திருவாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ் நடத்திய கிளர்ச்சி யாவரும் அறிந்ததே. அதன் சம்பந்தமாக ஒன்பது திருவாங்கூர் கொச்சி சட்டசபை அங்கத்தினர்கள் உள்பட சுமார் ஐந்நூறு பேர்கள் மீது வழக்கு தொடரப்பட்டிருந்தது. அந்த வழக்குகளை யெல்லாம் வாபஸ் செய்துவிட தி. கொ. சர்க்கார் முடிவு செய்துள்ளனர். சுதந்திர தின சமயத்தில் அவ் விஷயமாகத் திருவாங்கூர் கொச்சி சர்க்கார் முதல் மந்திரி ஓர் அறிக்கை வெளியிட்டார்.

"பொதுஜனங்களின் கோரிக்கைக்கு இணங்கவும் திருவாங்கூர், கொச்சி ராஜ்யத்தில் தமிழ், மலையாள மொழி பேசும் மக்களிடையே நல்லுறவும் நல்லெண்ணமும் ஏற்பட வேண்டும் என்பதற்காகவுமே தி. த. நா. காங்கிரஸ் வாதிகள் மீது தொடரப்பட்டிருந்த வழக்குகளை வாபஸ் பெறச் சர்க்கார் முடிவு செய்துள்ளனர்" என்று முதல் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் அறிவித்துள்ளார்.

திருவாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவரும் இந்தியா பார்லிமெண்டு அங்கத்தினருமான ஸ்ரீ ஏ. நேசமணி வழக்குகளை வாபஸ் செய்து கொள்வதென்று சர்க்கார் செய்துள்ள தீர்மானத்தைப் "புத்திசாலித்தனமான முடிவு" என்று பாராட்டியுள்ளார்.

பாரத நாட்டு மக்கள் சகலரும் குதூகலத்துடன் சுதந்திர விழா கொண்டாடும் சுப தினத்தில் தி. கொ. சர்க்கார் மேற்படி நல்ல காரியத்தைச் செய்தது மிகவும் போற்றத் தக்கது. இந்த நல்ல காரியத்தைத் தொடர்ந்து தி. கொ. சர்க்கார் அங்குள்ள தமிழர்களுக்கு நீதி வழங்க முற்படுவார்களாக!

நெல்லையப்பருக்கு நிதியளிப்பு

பரலி சு. நெல்லையப்பர் தமிழ் எழுத்தாளர். சுதந்திரப் போரில் பங்கு கொண்டு உழைத்த பெரியார். பாரதியார் புத்தகங்களுக்குத் தடை போட்டிருந்த காலத்தில் தைரியமாக அச்சிட்டு வழங்கிய தீரர்.

திரு வ. உ. சிதம்பரனாருக்குத் துணையிருந்து தொண்டாற்றிய தேசபக்தர். அறுபத்தேழு வயது முதிர்ந்த அந்த உத்தமப் பெரியாருக்குத் தமிழ் எழுத்தாளர் சங்கம் ரூ. 2236 கொண்ட பணமுடிப்பு அளித்தும் அவருடைய சேவையைப் பாராட்டியும் பெருமைப்பட்டது.

இந்த நிதி அளிப்பு வைபவத்தைப் பெரிய திருவிழாவாகவே கொண்டாடினார்கள். விழாவுக்குத் தமிழ் எழுத்தாளர் சங்கத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் தலைமை தாங்கினார். மராமத்து மந்திரி திரு ஷண்முக ராஜேஸ்வர சேதுபதி எழுத்தாளர் சங்கத்தின் சார்பாகத் திரு நெல்லையப்பருக்குப் பண முடிப்பை வழங்கினார். இந்த நிதியளிப்பு முயற்சியில் ஈடுபட்டு உழைத்தவர்கள் எல்லாரையும் பாராட்டி வாழ்த்துக் கூறுகிறோம்.

சைதாப்பேட்டை நெல்லையப்பர் வாசகசாலையார் நெல்லையப்பருக்கு ஒரு கதர் சால்வை போர்த்திப் பெருமைப் பட்டனர். இலக்கிய வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மாதம் 100 ரூபாய் திரு நெல்லையப்பருக்குக் கௌரவச் சம்பளம் தந்து வருகிறார்கள். தமிழ் மக்கள் சந்தோஷப்படக் கூடிய காரியத்தைச் செய்த இந்திய சர்க்காரைப் பாராட்டுகிறோம். சிறந்த எழுத்தாளரும், ஒழுக்கத்தில் உயர்ந்தவரும், உத்தம தேசபக்தருமான பரலி சு. நெல்லையப்பர் எல்லா விதத்திலும் பாராட்டத் தகுதியுடையவர். அவர் இன்னும் பல காலம் இருந்து தமிழுக்கும், தமிழ் நாட்டுக்கும் தொண்டாற்றப் பிரார்த்திக்கிறோம்.

மலையாப் பிள்ளையார்

தமிழ் நாட்டில் குழந்தைகளுக்கும் பெரியோர்களுக்குமே பிள்ளையார்தான் முதல் தெய்வம். அவருடைய துதிக்கையும் தொந்தியும் குழந்தைகளை வசீகரித்து விடுகின்றன. அவர் எங்கும் தெரு மூலைகளில் சந்திப்புகளில் சிறிய அழகிய கோவில்களுக்குள் தன்னிடம் வருபவர்களை வரவேற்கும் தோரணையில் நன்றாக உட்கார்ந்து கொண்டிருக்கிறார். பெரிய கோவில்களிலும் பல இடங்களில் அமர்ந்திருக்கிறார். சித்தி விநாயகர், கந்த விநாயகர், வல்லப விநாயகர் என்றெல்லாம் அவருக்குப் பெயருண்டு. ஆனால் வாக்னர் (Wagnor) பிள்ளையார், கோர்ட் (Court) பிள்ளையார் என்ற பெயர் நம் நாட்டில் இல்லை. வாக்னர் என்பது ஒரு ஐரோப்பிய வழக்கறிஞரின் பெயர்

இவர் மலாய் நாட்டின் தலைநகரமான கோலாலம்பூரில் பல வருஷங்களுக்கு முன் வழக்கறிஞராகத் தொழில் நடத்தி வந்தார். இந்த நகரத்தின் ஜில்லா சிவில் கோர்ட்டும், மாஜிஸ்டிரேட் (கிரிமினல்) கோர்ட்டும் சுமார் 200 அடி உயரமுள்ள மலைப் பாங்கான மேட்டில் இருக்கின்றன. இங்கே போக வர, பொது ஜனங்களுக்குக் குறுக்கு வழி ஒன்று இருக்கின்றது. அங்கே அமர்ந்திருப்பவர்தான் வாக்னர் பிள்ளையார் அல்லது கோர்ட் பிள்ளையார் என்பவர். சிறிய அழகிய கோவில் பூஜை புனஸ்காரங்கள் சரிவர நடந்து வருகின்றன. ஜனங்கள் கூட்டமாக வருகிறார்கள். ஹிந்துக்கள் தவிர மற்ற மதத்தினரும் சீனர்கள், ஐரோப்பியர் முதலானவர்களும் தரிசிக்க வருகிறார்கள். இப் பிள்ளையாரின் சக்தியின் மீது அவர்களுக்கெல்லாம் அவ்வளவு நம்பிக்கை.

வாக்னர் என்ற ஐரோப்பிய வழக்கறிஞர் மிகவும் நோய்வாய்ப்பட்டுக் கஷ்டப்பட்ட சமயம் இந்தப் பிள்ளையாரை வேண்டிக் கொண்டு சௌக்கியமடைந்தாராம். அதற்காக அவர் ஏராளமான பொருள் செலவு செய்து இந்தக் கோவிலை நன்றாகச் செப்பனிட்டாராம். அதனால் இந்தக் கோவிலை வாக்னர் பிள்ளையார் கோவில் என்றும் ஜனங்கள் சொல்லுகிறார்கள். இது கர்ண பரம்பரை.

வழக்குகள் சம்பந்தமாகக் குறுக்கு வழியாக மலை ஏறிப் போகிறவர்களும் இந்தப் பிள்ளையாருக்குத் தங்கள் தங்கள் வழக்கு ஜெயிக்க வேண்டுமென வேண்டிக் கொள்கிறார்கள். இதனால் இவருக்கு கோர்ட்டு பிள்ளையார் என்றும் பெயர் வழங்குகிறது. இந்த ஆலயத்தில் 21-வது லட்சார்ச்சனை சமாப்தி சமீபத்தில் நடந்து. ஹோமம், மகாபிஷேகம் விசேஷ பூஜைகளெல்லாம் சிறப்பாக நடந்தேறியது என்று அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைகிறோம்.

பாராட்டுகிறோம்!

யார்ரைப் பாராட்டுகிறோம் என்று சொல்லவும் வேண்டுமா? புகழ் பெற்ற மைசூர் ராஜ்யத்து முதன் மந்திரி திரு ஹனுமந்தையா அவர்களைத்தான் பாராட்டுகிறோம். அவர் ஆரம்பித்து வைத்திருக்கும் "பூதான — வித்யாதான இயக்கத்தை மனமுவந்து வரவேற்றுப் பாராட்டுகிறோம். கல்வி ஸ்தாபனங்களுக்கு நில நன்கொடை கோருவதும், கல்வி போதிக்க அறிஞர்களின் இலவச சேவையைப் பெறுவதும் இதன் முக்கிய நோக்கம் என்று அறிகிறோம்.

"பீஷ்மரின் தாகசாந்திக்காக அர்ஜுனன் அம்பால் பூமியைப் பிளந்து தண்ணீரை எழுப்பியதற்கு ஒப்பான இயக்கம்" என்றும், "காந்தி மகானின் லட்சியங்களை அனுஷ்டானத்துக்குக் கொண்டு வருவதே இந்த இயக்கத்தின் நோக்கம்" என்றும் திரு ஹனுமந்தையா கூறுகிறார். அவர் வார்த்தையை வரவேற்று அகில உலக மேதை பாரத ரத்னம் திரு ஸி. வி. ராமன் பாராட்டுகிறார்.

அவர் கூறும் காரணங்களைக் கேளுங்கள்:

"இப்போதைய கல்வி முறையில் பல குறைகள் உள்ளன என்பது உபாத்தியாயர் என்ற முறையில் எனக்குத் தெளிவாகத் தெரியும். இப்போது பள்ளிப் படிப்பு முடிந்ததும் மாணவர்கள் மனத்தில் எதுவும் தங்கி இருப்பதில்லை.

'வீரகேசரி' அதிபர்

பிரபல கொழும்பு தினசரிப் பத்திரிகையான "வீரகேசரி"யின் அதிபர் திரு பெ. பெரி. சுப்பிரமணியச் செட்டியார், தெற்கு, தென் கிழக்கு ஆசியா நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்வதற்காக, கொழும்பிலிருந்து சிங்கப்பூருக்குப் பிரயாணமானார். மலாயா, இந்தோனேஷியா, ஹாங்காங், பிலிப்பைன்ஸ், ஜப்பான், வியட்னும்-தாய்லந்து, பர்மா முதலான நாடுகளில் அவர் எட்டு மாதங்கள் வரையில் சுற்றுப் பிரயாணம் செய்து விட்டுக் கொழும்பு மார்க்கமாக இந்தியாவுக்குத் திரும்புவார்.



திரு செட்டியார் தீவிர காங்கிரஸ்வாதி. காந்தி பக்தர். இராமநாதபுரம் ஜில்லா போர்டு அங்கத்தினராக இருந்தவர். மலாயாவில் அவருக்குச் சில ரப்பர் எஸ்டேட்டுகள் இருக்கின்றன. கீழ்த்திசை நாடுகளில் சுற்றுப் பிரயாணம் செய்யும் பொழுது அங்கு தமிழ், கலை, கலாசாரம் எவ்வளவு தூரம் பரவியுள்ள தென்பதை ஆராய ஸ்ரீ செட்டியார் உத்தேசித்திருப்பதாக அறிகிறோம்.

தொழில் மூலம்தான் கல்வி கற்கவேண்டும் என்பதை விஞ்ஞானி என்ற ஹோதாவில் நான் ஆதரிக்கிறேன். நான் புத்தகப் படிப்பின் மூலம் பெற்ற அறிவை விட ஆராய்ச்சி நிலையத்தில்தான் அதிக அறிவைப் பெற்றேன். எனவே பிரத்யட்ச நிலைமைக்கு முரணாக உள்ள இப்போதையக் கல்வி முறை மாற வேண்டும்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். அத்துடன் அவர் மனம் சமாதானம் அடையவில்லை. "வெறும் நாட்டுப் பற்று தேச பக்தி ஆகாது! பூமிதேவியிடம் பற்று வேண்டும். பூமியை மறந்தால் பாவிகளாவோம். தண்டிக்கப் படுவோம். விதை விதைத்து, அன்றாடம் பயிர் வளர்வதைப் பார்ப்பதை விட ஆனந்தமானது உலகத்தில் வேறு ஒன்றுமில்லை. விவசாயத்தில் மிகுந்த கவனம் வேண்டும். மனித உள்ளத்தை விவசாயம் பெரிதும் பண்படுத்துகிறது. ஆகவே மனிதனின் ஜீவாதாரமான தொழில் விவசாயம்தான் என்று கூடச் சொல்லலாம். காந்தி மகான் தம் வாழ்நாளெல்லாம் பாடுபட்டுக் கண்டுபிடித்த இந்தத் தொழிற் கல்வி முறை விரைவில் நாடெங்கும் பரவ வேண்டும்" என்று தம்முடைய பல ஆண்டு அனுபவத்தை உள்ளம் குழைய உணர்ச்சிப் பெருக்குடன் எடுத்துக் கூறியிருக்கிறார்.

சக்தியும் கீர்த்தியும் வாய்ந்த இந்த இரு பெரும் தலைவர்கள் தலைமையில் ஆரம்பமாகும் இந்தத் தொழிற் கல்வி இயக்கம் பரிபூரண வெற்றி பெறும் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

வ. உ. சி. நூல் நிலையம்

"கை நோவக் கால் நோவக்
கல்லுடைத்துச் செக்கிழுத்து
மெய் சோர்ந்தும் ஊக்கம்
விடாதுநின்ற—ஐயன் சிதம்பரம்"

என்று திரு வ. உ. சிதம்பரம் பிள்ளையின் தேச பக்தியைப் போற்றிப் பாடினார் கவிமணி. இத்தகைய சிறந்த தேசபக்தரும், கப்பலோட்டிய தமிழருமான தீரர் வ. உ. சிதம்பரம் பிள்ளையின் பெயரில் வடஆற்காடு ஜில்லாவிலுள்ள கத்தவாடியில் ஒரு நூல் நிலையம் நிறுவியிருக்கிறார்கள். ஜூலை மாதம் கடைசிவாரத்தில் திரு ர. கோபால் ரெட்டியார் அவர்கள் வ. உ. சி. நூல் நிலையத்தைப் புது மனையில் துவக்கி வைத்தார்கள். நூல் நிலையத்திலே திரு வ. உ. சிதம்பரம் பிள்ளையின் திருவுருவத்தைத் திரு ராமகிருஷ்ண ரெட்டியார் திறந்து வைத்தார். மக்கள் திரளாக இவ்விழாவில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வழியனுப்பு உபசாரம்!

இந்தியா தேசத்தில் முதன் முதலாக யூனியன் சர்வீஸ் கமிஷன் அங்கத்தினர் பதவிக்கு ஒரு ஹரிஜனப் பிரமுகரை அளித்த பெருமை சென்னைக்குக் கிடைத்திருக்கிறது. அந்தப் பெருமையைச் சென்னைக்கு அளித்த திரு சிவஷண்முகம் பிள்ளையைப் பாராட்டுகிறோம். எம். ஏ. பட்டதாரியான திரு சிவஷண்முகம் பிள்ளை உறுதியுள்ள காங்கிரஸ்வாதி. காந்தி மகானின் சிறந்த பக்தர். இந்து மதத்திலும், முருகப் பெருமானிடத்திலும் பக்திபூண்டவர். அவர் பள்ளிக்கூடத்தில் படிக்கும் பொழுது எத்தனையோ முறை பாதிரிமார்கள் கிறிஸ்து மதத்தில் சேர்ந்து விடும்படி தூண்டினார்கள். 'ஆப்ரஹாம்' என்று நாமகரணம் சூட்டி அவருக்கு அநேக சௌகரியங்கள் செய்து கொடுப்பதாக ஆசை காட்டினார்கள். ஆனால் அவர் மதம் மாறவில்லை. அவர் முருக பக்தி அவர் வாழ்க்கையை எவ்வளவோ உயர்த்தி விட்டது.

சென்ற ஒரு வாரமாக அவருக்கு நடைபெற்ற பிரிவு உபசாரக் கூட்டங்களையும், விருந்துகளையும் பார்க்கும்போது சென்னை மக்கள் அவரிடம் எவ்வளவு மதிப்பு வைத்திருக்கிறார்கள் என்பதைத் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடிந்தது. அந்த உபசார விருந்துக் கூட்ட நிகழ்ச்சிகள் சிலவற்றை எதிர்ப் பக்கத்தில் காணலாம்.

1. ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற பிரிவு உபசாரக் கூட்டத்தில் ராஜாஜி அவர்கள் கலந்து கொண்டு பிள்ளை அவர்களின் சேவையைப் பாராட்டினார். 2. சென்னை சட்டசபையின் எல்லாக் கட்சி அங்கத்தினர்களும் சேர்ந்து வெள்ளியாலும் தங்கத்தாலும் அசோக ஸ்தூபி ஒன்றைச் செய்து வழங்கினர். முதன் மந்திரி காமராஜ நாடார் அசோகஸ்தூபியை திரு சிவஷண்முகம் பிள்ளை அவர்களுக்கு வழங்குவதைப் பாருங்கள். 3. 'கல்கி' காரியாலயத்தில் நடந்த விருந்து உபசாரத்தில் கோடம்பாக்கம் பழநி ஆண்டவர் விஜயம் செய்து தமது பக்தரை ஆசிர்வதித்தார். திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணசாமிஐயர் வடபழநி ஆண்டவர் கோயில் பிரசாதத்தை வழங்கி மலர்மாலை சூட்டினார். 4. சென்ற பதினைந் தேதி திரு சிவஷண்முகம் பிள்ளை அவர்கள் டில்லிக்குப் புறப்படும்போது திரளான மக்கள் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனில் கூடியிருந்து வழியனுப்பி வைத்தனர். மலர்மாலைகளும், வாழ்த்துப் பத்திரங்களும் வழங்கி, "முருகா! முருகா!" என்று கோஷமிட்டு வழியனுப்பிய காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.





26-8-55 முதல் சென்னை: சித்ரா, பிரபாத், சரஸ்வதி
மற்றும் தென்னாடெங்கும் மகத்தான ஆரம்பம்



சக்கரவர்த்தித் திருமகன்

82. சரணாகதி

தன்னுடைய அபிப்பிராயத்தை அறிய ராமன் விரும்புவதைக் கண்டு பொருள் செறிந்த இன்சொற்களைப் பேசும் வாயுபுத்திரன் சொன்னான் :

"நீர் நம்மைக் கேட்பது என்னத்திற்கு? பிரஹஸ்பதியே வந்தாலும் உமக்கு மேல் என்ன யோசனை சொல்வான்? எனக்கு முன் பேசியவர்கள் சொன்ன யுக்திகளில் நான் நன்மை காணவில்லை. சேர்த்துக் கொள்ளுவதில் அபாயமிருந்தால் அந்த அபாயம் உடனே நேரிடும். பரீக்ஷை செய்வதற்கு இடம் ஏது? தவிர, இந்த விபீஷணன் மறைந்து கொண்டு வரவில்லை. நம்முன் நேராகத்தானே வந்து பகிரங்கமாக அனைவருக்கும் எதிரில் நிற்கிறான். சாரர்கள் இவனிடம் போய் ரகசியம் தேட என்ன இருக்கிறது?

"திடீர் என்று அகாரணமாகவும் அவசரமாகவும் சத்துருக் கூட்டத்திலிருந்து ஒருவன் வந்து நின்றால் அவனை எப்படி நம்பலாம் என்று சிலர் சந்தேகம் சொன்னார்கள். தன் தமயன் ராவணனுடைய துர்க்குணங்களை விபீஷணன் கண்டு அவனை வெறுத்தான் என்பதில் என்ன வியப்பு? உம்மிடம் வீரத்தையும் தருமத்தையும் பெருந்தன்மையையும் இவன் கண்டான் என்பதில் என்ன வியப்பு? ஆனபடியால் இவன் வந்த சமயமும் சந்தர்ப்பமும் என் அபிப்பிராயப்படி சந்தேகத்துக்கு இடம் கொடுக்கவில்லை.

"இவனைச் சேர்த்துக் கொள்வதற்கு முன், தூதர்கள் இவனிடம் கலந்து கேள்வி மறுமொழிகளின் மூலம் இவன் குணத்தை அறிந்து கொள்ளலாம் என்று சிலர் சொன்னார்கள். ஒருவனைப் பற்றி நாம் சந்தேகிக்கிறோம் என்பது அவனுக்குத் தெரிந்து விட்டால் அவன் இயற்கைக்கு மாறாகத்தான் நடந்து கொள்வான். சுபாவப்படி பேசவோ நடந்து கொள்ளவோ அவனால் முடியாது. நாம் அவனிடம் குற்றத்தைத் தேடுகிறோம் என்கிற பயம் இருந்து கொண்டேயிருக்கும். அதுவே இயற்கைப் போக்கைத் தடுத்து விடும். வந்திருக்கும் ராக்ஷசனுடைய முகம் பேச்சு இவற்றில் எனக்கு ஒரு சந்தேகமும் தோன்றவில்லை. கவலையற்ற இவன் முகமே இவன் உள்ளத்தில் வஞ்சனை இல்லையென்பதற்கு அத்தாட்சி. நெஞ்சத்துள் இருப்பதை ஒருவன் எவ்வளவு மறைத்தாலும் அதை அவன் முகம் காட்டி விடும். இது நீதி சாஸ்திரத்தில் கண்ட உண்மை." விபீஷணன் தங்களிடம் உண்மையாகவே சரண் புக வந்திருக்கிறான் என்பது என் அபிப்பிராயம். இப்படி அவன் வருவதில் வியப்பு ஒன்றுமில்லை. ராவணனுடைய தோஷங்களை உணர்ந்தவன். லங்கேசன் தோல்வியடைவான் என்

அடுத்தது காட்டும் பளிங்குபோல் நெஞ்சம்
கடுத்தது காட்டும் முகம். —குறள் 706

பதைக் கண்டு கொண்டவன். தாங்கள் வாலியை வதம் செய்து சுக்ரீவனுக்கு வானர ராஜ்யம் தந்திருக்கிறீர் என்பதும் அவனுக்குத் தெரியும். அப்படியே இவனும் லங்காதிபத்தியத்தை அடையலாம் என்று வந்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இதில் குற்றம் ஒன்றுமில்லை. சந்தேகப்படுவதற்கு இடமுமில்லை. ஆனபடியால் இவனை நாம் சேர்த்துக் கொள்ளலாம் என்பது என் அபிப்பிராயம்.

"என் புத்திக்கு எட்டிய வரையில் நான் சொன்னேன். முடிவில் தாங்கள் எப்படி நிச்சயிக்கிறீர்களோ அப்படிச் செய்வீர்களாக. தங்களுடைய யோசனைக்கு மேல் எங்கள் யோசனை என்ன இருக்கிறது?" இவ்வாறு ஹனுமான் சொல்லி முடித்தான்.

இப்படி வானரத் தலைவர்கள் விபீஷணனைப் பற்றிப் பலவிதமான யோசனை சொன்னார்கள்.

சாமான்ய தருமத்தின்படி கும்பகர்ணன் நடந்து கொண்டான். அது எல்லாருக்கும் விளங்கும் விஷயம். அதில் சிக்கல் ஒன்றுமில்லை.

சாமான்ய தருமத்திற்கும் மேம்பட்டதான விசேஷ தருமத்தைத் தழுவி நடந்து கொண்டதே விபீஷணனுடைய 'குற்றம்.' தருமத்திற்கு விருத்தமான அண்ணனுடைய காரியங்கள் விபீஷணனுடைய அந்தராத்மாவுக்குத் தந்த வேதனையை அவன் தான் உணர்வான். மற்ற சாமான்யர்களுக்கு அது விளங்காது. அதனால் அவனுடைய நடத்தையை ராமனுடனிருந்த வானரர்களும் சரியாக உணரவில்லை. தற்காலத்திலும் விபீஷணனுடைய காரியத்தில் குற்றமில்லையென்பதை மக்கள் உணர்வது கஷ்டம். காரணங்களை எடுத்துச் சொல்ல வேண்டியதாகிறது.

வானரத் தலைவர்கள் சொன்னதையெல்லாம் ராமன் சாவதானமாகக் கேட்டான். கடைசியில் வாயு புத்திரன் சொன்னதைக் கேட்டு மிகவும் சந்தோஷமடைந்தான். தன் தருமத்தைத் தான் காப்பாற்றுவதில் எப்போதும் உறுதியுள்ள ராமனுக்கு ஹனுமானுடைய பேச்சு மிக்க சாந்தி தந்தது. நல்லவன் ஒருவன் தான் நடத்த வேண்டிய தருமத்துக்குப் பிறர் யோசனையும் பக்கபலமாக வந்து சேர்வதைக் கண்டால் அவன் மனதுக்கு ஆறுதல் ஏற்படுகிறது.

"சிநேகிதன் என்று சொல்லிக் கொண்டு ஒருவன் என்னிடம் வந்தால் அவனை நான் எப்படித் தள்ளமுடியும்? இது என்னுடைய தருமம். எனக்கு நண்பர்களாக அமைந்து எனக்காகப் பாடுபடும் நீங்கள் அனைவரும் இதை அறிய வேண்டும். 'சரணம்' என்று சொல்லிக்கொண்டு ஒருவன் வந்தால் அவனிடத்தில் காணப்படும் குற்றங்களைப் பொருட்படுத்தக் கூடாது."

இப்படி ராமன் சொன்னதைக் கேட்ட சுக்ரீவன் சமாதானப்படவில்லை.

"இந்த ராக்ஷசன் நல்லவனாகவே இருக்கலாம். ஆனால் தன் சொந்த அண்ணன் ஒரு பெரிய ஆபத்தில் சிக்கிய சமயத்தில் அவனைக் கைவிட்டு இங்கே வந்திருக்கிறான். இத்தகைய ஒருவனுக்குச் சமயத்தில் நம்மையும் கைவிடுவதில் ஒரு கஷ்டமுமிராது. தன் தமையனுக்குச் செய்ததை நமக்கும் ஏன் செய்ய மாட்டான்?" என்று கேட்டான்.

சுக்ரீவன் இதைச் சொன்ன போது ராமன் லக்ஷ்மணனைப் பார்த்து, தெரிந்தும் தெரியாததுமான ஒரு சிறிய புன்சிரிப்பு செய்தான் என்கிறார் முனிவர் வால்மீகி. தன்னுடைய கதையையே மறந்துவிட்டு சுக்ரீவன் பேசியதை முனிவர் இப்படி ரஸோக்தியாகக் காட்டுகிறார்.

சக்கரவர்த்தித் திருமகன், "நீர் சொல்வதை நான் உணர்வேன். ஆயினும் நான் சொல்லுவதைக் கேட்பீர். அரச பதவியை விரும்பவர்கள், அண்ணன் தம்பி தாயாதிகள் அடுத்த தேசத்து ராஜாக்கள் இவர்களை எப்போதுமே சந்தேகப்படுவது சகஜம். சந்தேகப்படாத நல்லவர்களும் உண்டு. ஆனால் பெரும்பாலோர் தங்களைக் கண்டு மற்றவர்கள் பொறாமைப்படுகிறார்கள் என்றே எண்ணுவார்கள். ராவணன் விபீஷணனை இப்படிச் சந்தேகித்து நிந்தித்ததில் என்ன ஆச்சரியம்?

"இனி லங்கையிலிருந்தால் தனக்கு அபாயம் என்று விபீஷணன் பயப்படு

வதும் சகஜமே. ஆனபடியால் அவன் நம்மிடம் சரண் புக வந்ததில் வஞ்சனை ஒன்றுமில்லை என்பது என் அபிப்பிராயம். தவிர ராஜ்யத்தில் ஆசை வைத்தே வந்ததாகவும் இருக்கலாம். ராவணன் அழிவான். நாம் வெற்றி பெறுவோம். அதனால் அண்ணனுடைய ராஜ்யத்தைத் தான் அடையலாம் என்றே நம்மிடம் வந்திருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இதிலும் என்ன பெரிய குற்றம்? லக்ஷ்மணா! எல்லாரும் நம்முடைய பரதனைப் போல் இருப்பார்களா?'' என்றான் ராமன்.



இப்படிச் சொல்லி விட்டு ஒரு கணம் ராமன் பரதனை நினைத்து தியானத்தில் மூழ்கினான். "என்னைப் போன்ற பாக்கியவான் யார் உண்டு உலகத்தில்? பரதனைப் போன்ற ஒரு சகோதரனைப் பெற்றேன். நான் காடு சென்ற துக்கத்தினால் தகப்பனார் உயிரையே துறந்து விட்டார். அத்தகைய பிரியமான தகப்பனை நானும் லக்ஷ்மணனும் பெற்றோம். உங்களைப் போன்ற நண்பர்களையும் நான் தவிர வேறு யார் பெறுவார்?''

கண்களில் நீர் கலங்க இவ்வாறு சொல்லி விட்டு மறுபடியும் விஷயத்தைப் பற்றிப் பேசினான். "ராவணனைக் கைவிட்டது போலவே விபீஷணன் நம்மையும் கைவிடுவான் என்கிற வாதத்தில் நான் நியாயம் காணவில்லை. நம்மைக் கை விடுவதற்கு என்ன காரணம் விபீஷணனுக்கு உண்டாகும்? அந்த ராஜ்யத்தில் நாம் ஆசை வைத்திருக்கிறோமா? இல்லை. நாம் வெற்றி அடைந்தால்தானே இவனுடைய ஆசை நிறைவேறும்? இந்தக் காரணங்களால் நாம் இந்த விபீஷணனைச் சேர்த்துக் கொள்ள மறுத்து விடுவது தவறாகும். நான் சொன்ன இவையெல்லாம் நீதிசாஸ்திர விஷயம்.

"உண்மையில் நல்லவனோ கெட்டவனோ ஒருவன் 'சரணம்' என்று என்னிடம் வந்தால் அவனை நான் தள்ளி விட முடியாது. இது என் பிறவித் தருமம். அதனால் நான் நஷ்டமடைந்தாலும் அதை நான் பொருட்படுத்த

மாட்டேன். என் உயிருக்கு அதனால் அபாயமாயினும் இந்த தருமத்தை நான் காப்பாற்றித்தான் ஆக வேண்டும். விட்டு விட மாட்டேன். இவனால் என்ன அபாயம் எனக்கு உண்டாக முடியும்? இதற்கு நான் பயப்பட வில்லை. ராவணனே வந்து சரணம் என்றாலும் பரீட்சை செய்யாமல் ஒப்புக் கொள்வேன். அப்படியிருக்க அவன் தம்பியை நான் எப்படித் தள்ளுவேன்? போய் விபீஷணனை அழைத்து வாருங்கள்" என்றான் ராமன்.

"ராமசந்திரனே! நான் தெளிந்தேன்! அழைத்து வருகிறேன். விபீஷணனும் எங்களைப் போல் உமக்குப் பிரிய நட்பு கொண்டவன் ஆகுக!" என்று சொல்லி சுக்ரீவன் விபீஷணனிடம் சென்றான்.

• • •

ராவணனைத் துறந்து வந்த விபீஷணனைச் சக்கரவர்த்தித் திருமகன் தன் படைக்குள் சேர்த்துக் கொண்ட கட்டமானது வைஷ்ணவ சம்பிரதாயத் தலைவர்களுக்கு பாரதத்தில் கீதையைப் போலவே ஒரு தனி சாஸ்திரமாய் வழங்கி வருகிறது. 'எம்பெருமானை யார் சரண் புகுந்தாலும் தோஷங்களைப் பாராமல், சந்தேகம் கிளப்பாமல் ஒப்புக் கொள்வான். சகல தோஷங்களும் அந்த சரணாகத முயற்சியிலேயே வெந்து சாம்பலாகிப் போம்' என்கிற தத்துவத்துக்கு இந்த விபீஷண கட்டம் சாஸ்திரமாக அமைந்து விட்டது. பெரும் பாவமோ வேறு குற்றமோ செய்தவர்கள், அபவாதத்துக்கு ஆளாகித் தவிக்கிறவர்கள், எல்லாரும் இந்த சரணாகதக் கொள்கையை அமிருதமாகக் காண்பார்கள். சரணாகதி செய்தவனுக்கு உய்வு உண்டு, எத்தகையவனுக்கும் உய்வு உண்டு என்பது வைஷ்ணவ சம்பிரதாயத்துக்கு உயிர்நாடி.

'வைஷ்ணவ சம்பிரதாய'த்துக்கு என்று சொன்னேன். தவறு. நம்முடைய நாட்டில் மக்கள் அனுசரித்து வரும் எல்லாச் சம்பிரதாயத்துக்குமே இது உயிர்நாடி, ஏன்? உலகத்தில் மக்கள் அனுசரித்துவரும் சகல மத சம்பிரதாயங்களுக்குமே இது உயிர் நாடி என்றும் சொல்லலாம். ஒவ்வொரு மார்க்கத்திலும் போதகர்கள் இதையே அதிகமாக வற்புறுத்திச் சொல்லுவார்கள். 'பயப்படாதே, கவலைப்படாதே. எல்லா பாபங்களையும் நான் தீர்ப்பேன்' என்று அருச்சுனனுக்கு மட்டும் அல்ல கண்ணன் சொன்னது. உலகத்தில் எந்தப் பிரதேசத்தில் அந்தக் கண்ணன் அவதரித்து இறங்கி நின்றபோதும், இதையே சொல்லி வந்திருக்கிறான்.

ராமாயணத்தில் ராவணன் தம்பியைச் சக்கரவர்த்தித் திருமகன் சேர்த்துக் கொண்ட வால்மீகி சித்திரத்தை இரண்டு கூறாகப் பிரித்துக் கொள்ளலாம். நீதி சாஸ்திரப்படி பகைவருடைய கூட்டத்திலிருந்து வந்த ஒருவனைச் சேர்த்துக் கொள்வதற்குமுன் என்ன ஆராய வேண்டுமோ, எப்படி ஆராய வேண்டுமோ அதை எடுத்து முனிவர் பல வழியில் காட்டியிருக்கிறார். வானர ராஜன் வாய் வழியும், சம்ஸ்கார ஸம்பன்னனும், நல்ல பண்பாட்டுக்குச் சிகரமான ஹனுமான் வாய் மொழியாகவும், தருமத்தில் ஸ்திரமாக நிற்கும் ஸ்ரீ ராமன் வார்த்தையாகவும், சுருக்கமாகவும் தெளிவாகவும் காட்டியிருக்கிறார்.

நீதி சாஸ்திர விளக்கத்துடன் ராமனுடைய சம்ஸ்காரம், அதாவது பயிற்சியாலும் சகஜமாகவும் ஒருவன் பெற்ற நற்குணத்தையும் காண்கிறோம். "என்னுடைய தருமம்—யார் சரண் புகுந்தாலும் இல்லை போ என்று என்னால் சொல்ல முடியாது!" என்று ராமன் சொன்னான். இதுவே ராமசந்திரனுடைய தருமம். 'ராவணனே வந்து சரணம் என்றால் தள்ளுவேனா?' என்று கேட்கிறான் சுக்ரீவனை.

ராமசந்திரனை ஈசுவர அவதாரமாக வைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு இந்த வாக்கியம் ஒரு தனி சாஸ்திரமாகி விட்டது. பின்னால் கீதையில் 'கவலைப்படாதே, மா சுச:' என்று கண்ணன் சொல்லி முடித்த சாஸ்திரத்தையே சக்கரவர்த்தித் திருமகனும் விபீஷண கட்டத்தில் சுக்ரீவனுக்குச் சொன்னான். பாவங்கள் மலிந்த உலகத்துக்கு உயிரும் ஒளியும் தரும் மருந்து.



நேர்த்தியான ஆடைகள் - பாரதத்தின் பெருமை

இந்தியக் கைத்தறி நெசவாளர்கள் பல நூற்றாண்டுகளாக உழைத்து தங்களுடைய கலையின் சிகரத்தை அடைந்திருக்கிறார்கள். நேர்த்தியாகவும் அழகாகவும், வர்ண வேலைப்பாடுகளுடனும் நெசவு செய்யப்பட்ட ஆடைகள் அவர்களுடைய நுட்ப வேலைத் திறமைக்குச் சான்றாகும்.

கைத்தறி ஆடைகளையே வற்புறுத்திக் கேளுங்கள். உங்கள் வீட்டை அழகு பெறச் செய்யுங்கள்.

லக்ஷக்கணக்கான கைத்தறி நெசவாளர்களின் குடும்பங்களுக்கு சுபிட்சத்தையும் மகிழ்ச்சியையும் அளியுங்கள். என்றும் இந்தியாவின் பெருமைக்குக் காரணமான கைத்தறி நெசவுத் தொழிலுக்கு நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கெஜ துணியும் ஆதரவளிப்பதாகும்.


ALL INDIA HANDLOOM BOARD

கைத்தறி ஆடைகளை வாங்குங்கள்

டெபுடி டெக்ஸ்டைல் கமிஷனர் ஆபீஸ்:

அகில இந்திய கைத்தறி போர்டு

98, மௌப்ரேஸ் ரோட் :: சென்னை - 18



இமய மலைக்கு வெகு அருகில் உள்ள ரூர்க்கி என்னும் நகரில் ஒரு அதிசயமான காட்சியைக் கண்டேன். பல நூற்றுக்கணக்கான பட்டதாரி மாணவர்கள், இந்த நாட்டின் எதிர்காலத்து மன்னர்கள் மிகுந்த உற்சாகமாக உடல் உழைத்து வேலை செய்து கொண்டிருந்தார்கள். காலில் சூட்டும் பூட்டும் அணிந்து கொண்டு பலதரப்பட்ட வேலைகளில் ஊக்கத்துடன் ஈடுபட்டு உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

இதென்ன கூத்து! பட்டதாரி மாணவர்கள் உடல் உழைத்து வேலை செய்து கொண்டிருந்தார்களா! எப்படி இருக்க முடியும்!

சரியான கேள்விதான்! நான்கூட நேரில் பார்க்காவிட்டால் இப்படிக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டியதுதான். ரூர்க்கியில் நவநாகரிகமான மாணவர்கள் பல உபயோகமான காரியங்களையும் செய்கிறார்கள்.

தங்கள் மாணவர் விடுதியைத் தாங்களே நடத்துகிறார்கள். காய்கறித் தோட்டம் போட்டு, அதில் பாடுபட்டு வேலை செய்து தங்கள் விடுதிக்கு வேண்டிய காய்கறிகளைப் பெறுகிறார்கள். பால் பண்ணை வைத்து நடத்துகிறார்கள். மாடுகளுக்குத் தீனி போடுகிறார்கள்; குளிப்பாட்டுகிறார்கள்; பால் கறக்கிறார்கள். விடுதியின் சுகாதாரத்தைத் தாங்களே கவனித்துக் கொள்கிறார்கள். இந்தக் காரியங்களை யெல்லாம் மிகுந்த மகிழ்ச்சியுடனும் பெருமையுடனும் செய்கிறார்கள்.

யார் இந்த மாணவர்கள்! இவர்கள்தான் பிரசித்திபெற்ற ரூர்க்கி இன்ஜினீயரிங் கல்லூரியைச் சேர்ந்த மாணவர்கள். அதாவது பொறியியற் கல்லூரி மாணவர்கள். அவர்களில் பி. ஏ., எம். ஏ., பட்டம் பெற்றுவிட்டு இன்ஜினீயரிங் கல்லூரிக்கு வந்த பல தேசத்து மாணவர்கள் பலரும் இருந்தார்கள்.

ஆம்; சாதாரணமாய் அந்த மாணவர்களைப் பார்த்தால் ஏதோ வெறும் புத்தகம் படிக்கும் ஏட்டுக் கல்வி மாணவர்களாகத்தான் தோன்றும். கோட்டும் சூட்டும் போட்டுக்கொண்டு திரியும் மேல் நாட்டு நாகரிகத்தில் மூழ்கியவர்களாக நினைக்கும்படி இருக்கும். ஆனால் அவர்கள் தங்கள் தேசத்தையும் உண்மைக் கல்வியையும் நினைத்துத் தொண்டாற்றத் தொடங்கி விட்டால் அவர்கள்தான் இந்த நாட்டின் சிற்பிகள்; இந்த நாட்டை ஆச்சரியமான முறையில் ஆளப் போகிறவர்கள். மாணவர்களுக்கு மட்டும் தொழிற் கல்வியின் உயர்வையும், உழைப்பின் பெருமையையும் சொல்லிக் கொடுத்துவிட்டோமானால், அதன் மதிப்பையும் அவர்கள் உணர்ந்து விட்டார்களானால், உணர்ந்து அதைக் காரியத்திலும் கடைப் பிடிக்கத் தெரிந்து கொண்டார்களானால் அப்புறம் அவர்களால் சாதித்து நிறைவேற்ற முடியாத காரியம் வேறு ஒன்றுமே இருக்க முடியாது.

நம் பாரத நாட்டை அவர்களால் மகோந்நத நிலைக்குக் கொண்டு வர முடியும். செல்வம் கொழிக்கும் நாடாக மாற்றி அமைக்க முடியும்.

"வங்கத்தில் ஓடிவரும் நீரின்மிகையால்
மையத்து நாடுகளில் பயிர்செய்குவோம்!"

என்று பாரதியார் பாடினார். கங்கையிலிருந்து காவேரிக்குக் கால்வாய் வெட்ட வேண்டுமென்று காலஞ் சென்ற திரு சீனிவாச ஐயங்கார் கனவு கண்டார். இவை யெல்லாம் வெறும் கனவாக இருக்க வேண்டியதில்லை. காரியத்திலும் நிறைவேறக் கூடியவையே என்பதை ரூர்க்கி இன்ஜினீயரிங் மாணவர்களை நேருக்கு நேர் பார்த்தபோது தெளிவாக உணர்ந்து கொள்ள முடிந்தது.

ரூர்க்கியில் இன்று நல்ல முறையில் வளர்ந்து வரும் ரூர்க்கி பல்கலைக்கழகத்து இன்ஜினீயரிங் மாணவர்களின் சக்தியானது இன்னும் ஐந்து வருஷத்திலோ பத்து வருஷத்திலோ அபரிமிதமாக வளர்ந்து பாரத நாட்டையே பொன் கொழிக்கும் நாடாக மாற்றி அமைக்காது என்று யார் சொல்ல முடியும்!

** ** **

ஒரு ஊருக்குப் பெயரும் புகழும் பல காரணங்களால் ஏற்படக் கூடும். ஆனால் கல்வி ஸ்தாபனங்களின் மூலம் ஏற்படும் புகழ்தான் என்றும் அழியாமல் நிலைத்து நிற்கும். இங்கிலாந்தில் லண்டன் முக்கியமான நகரம் என்பதைப் பலரும் அறிவார்கள். ஆனால் கேம்பிரிட்ஜ், ஆக்ஸ்போர்டு நகரங்களின் புகழோ அலாதிதான். இதற்குக் காரணம் அந்த நகரங்களில் உள்ள கல்வி ஸ்தாபனங்களே யாகும்.

தமிழகத்தில் மதுரைக்கும், காஞ்சிக்கும் உள்ள புகழ் வேறு எந்த நகரத்துக்கும் இல்லை.



தமிழ்ச் சங்கத்தினால் மதுரைமா நகரம் சிறப்படைந்திருக்கிறது. "கல்வியில் கரையிலாத காஞ்சிமா நகரம்" என்று காஞ்சியைப் போற்றிப் புகழ்ந்து பாடியிருக்கிறார்கள்.

இன்றைய தினம் அண்ணாமலை நகரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினால் சிறப்படைந்து விளங்கவில்லையா!

மேற்கூறிய நகரங்களைப் போல உத்தரப் பிரதேசத்தில் உள்ள "ரூர்க்கி" உலகப் புகழ் பெறப் போகிறது. அத்தகைய சிறப்பை அந்த ஊருக்கு அளிக்கும் கல்வி நிலையம் ஒன்று நூறு ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டு வளர்ந்து வந்திருக்கிறது. நாம் சுதந்திரம் பெற்ற பிறகு மேலும் சிறந்த முறையில் வளர்ச்சிபெற்று நடந்து வருகிறது. அந்தப் பல்கலைக் கழகத்தின் பெயர் 'ரூர்க்கி யுனிவர்ஸிடி'.

ரூர்க்கி பல்கலைக் கழகம்

காலிலே கொதிக்கும் வெந்நீரைக் கொட்டிக் கொண்டு, அதாவது அவசர ஜோலிகள் பலவற்றை வைத்துக் கொண்டு 'யுனிவர்ஸிடி'க் கட்டடத்துக்குள் பிரவேசித்தால் யுனிவர்ஸிடி ஒன்றும் பிரமாதமாகத் தோன்றாது. "இதோ! நூறு வருஷங்களில் ஒருவர் பின் ஒருவராக இருந்த உப அத்யட்சகரின் படங்கள்; இதோ! கல்லூரியின் அழகு மிக்க மண்டபம்; கல்லூரியின் புத்தகசாலை; கான்கிரீட் கண்காட்சி; விஞ்ஞான மருந்து ஆராய்ச்சிச் சாலை; இயந்திரப் பகுதி; பௌதிகக் கூடம்; நில ஆராய்ச்சி இயந்திரங்கள் செப்பனிடும் தொழிற் சாலை; மாதிரி அணைகள், பாலங்கள், 'ஹைட்ராலிக்' ஆராய்ச்சிக் கூடம்; பூகத்துவ ஆராய்ச்சி நிலையம்; குளிர் இயந்திரக் கூடம்; இரும்பு, கான்கிரீட் முதலியவைகளைப் பரிசோதிக்கும் கூடம்; மின்சாரக் கூடம்; கல்லூரியின் பிரம்மாண்டமான தொழிற்சாலை, கொல்லுப் பட்டரை, இயந்திரப் பட்டரை; அச்சுக் கூடம்; மாணவர் விடுதி—அவ்வளவுதானே!" என்று ஒரு மணி நேரத்துக்குள்ளாகவே பல்கலைக் கழகத்தைச் சுற்றிப் பார்த்து விட்டு வந்து விடலாம்.

அவ்விதம் இல்லாமல் கொஞ்சம் நிதானமாகவே ரூர்க்கி பல்கலைக் கழகத்துக்குள் சென்று, அங்குள்ள அதிசயமான பல விஷயங்களைப் பார்த்துத் தெரிந்து கொள்வது என்று அந்தப் பல்கலைக் கழகத்தின் விசாலமான கட்டடத்துக்குள் செல்வோம், வாருங்கள்.

ரூர்க்கியில் பல்கலைக் கழகம் அமைந்திருக்கும் இடமும், அதன் கம்பீரமான கட்டடமும் கலைமகள் விளையாடும் அழகான கலைக்கூடமாகும். பல்கலைக் கழகக் கட்டடத்துக்குள் புகுந்ததுமே அதன் விசாலமும் கம்பீரமும் கவனத்தைக் கவர்கின்றன. இமயமலைச் சிகரத்தின் பலப்பல காட்சிச் சித்திரங்களும், அந்தப் பல்கலைக் கழகத்தைக் கட்டி வளர்த்த அதன் தலைவர்களின் படங்களும் வரிசை வரிசையாகச் சுவர்களில் தொங்கிக் கொண்டிருக்கின்றன. அதன் வாசலில் நின்று எதிரே பார்த்தால் இமயமலையின் பனி சூடிய சிகரங்கள் காட்சி தருகின்றன. சுற்றிலும் இயற்கைக் காட்சிகள், ஜன சந்தடி இல்லாத அமைதியான இடம். அந்தச் சூழ்நிலையே மனத்தைப் பக்குவப் படுத்தி அறிவை விசாலப்படுத்தி விடும். அவ்வளவு அருமையான இடம். வேறு சில இடங்களில், ஜனசந்தடி நிறைந்த சந்தைக் கூட்டத்துக்கு மத்தியில் உள்ள, அழகுணர்ச்சி அற்ற சில கல்லூரிக் கட்டடங்களை ஒருகணம் நினைத்துப் பார்த்து விட்டு அந்த ரூர்க்கி சர்வகலா சாலையையும் பார்த்து மனத்திற்குள் ஒப்பிட்டால் "ஆகா! இந்தக் கல்லூரியை இந்த இடத்தில் ஆரம்பித்த அறிஞர்கள் இன்ஜினியரிங் கல்விக்கே அல்லவா தனிப்பட்ட மகிமையைத் தந்திருக்கிறார்கள்" என்ற வியப்பு நிச்சயம் உண்டாகும்.

அந்தக் கல்லூரிக்குள் நுழைந்ததும் முதலில் அதன் உப அத்யட்சகர் திரு ஏ. என். கோசலா அறைக்கு அழைத்துச் சென்றார்கள்.

திரு கோசலா அகமும் முகமும் மலரப் பத்திரிகைப் பிரதிநிதிகளை எல்லாம் வரவேற்று உபசரித்தார். அடுத்தகணம் ரூர்க்கி சர்வகலா சாலை சரித்திரத்தை விஸ்தாரமாகச் சொன்னார்.

இந்தக் கல்வி ஸ்தாபனம் ஆரம்பித்த கதையே அதிசயமானது. கங்கை நதியிலிருந்து கால்வாய் வெட்டுவதற்காகப் பிரிட்டிஷார் காலத்தில் திட்டம் போட்டார்கள். கங்கைக் கால்வாயை ஏதோ நினைத்த இடத்தில் வெட்டிவிட முடியுமா! அதற்கு நில ஆராய்ச்சி, நீர் ஆராய்ச்சி, பூகத்துவ ஆராய்ச்சி இப்படி எத்தனையோ ஆராய்ச்சிகள் செய்ய வேண்டுமே! அதற்கு இன்ஜினியர்கள் வேண்



டாமா! இங்கிலாந்திலிருந்தும் இன்னும் மேல் நாடுகளிலிருந்தும் இன்ஜினீயரிங் நிபுணர்களைத் தருவித்தாலும் அவர்களுக்குத் துணை செய்வதற்கு இன்ஜினீயர்கள் வேண்டாமா! அதற்காக வேண்டி 1847-ம் வருஷம் இந்த இன்ஜினீயரிங் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது. அப்பொழுது வடமேற்கு மாகாணத்துக்கு லெப்டினன்ட் கவர்னராகஇருந்த தாம்ஸன் துரையின் பெயரையே இந்த ஸ்தாபனத்துக்குச் சூட்டினார்கள். “தாம்ஸன் சிவில் இன்ஜினீயரிங் கல்லூரி” என்று நாமகரணம் இட்டார்கள்.



ஷேக்ஸ்பியரின் முதல் பதிப்பு நூல்.

ஒரு பிரின்ஸ்பல், ஹெட்மாஸ்டர், டிராயிங் மாஸ்டர், இரண்டு உபாத்தியாயர்களுடன் எட்டே எட்டு மாணவர்களைக் கொண்டு ஆரம்பித்தார்கள். கட்டடம் கட்டும் கலை, இயந்திர சம்பந்தமான நுணுக்கங்கள், மின்சாரக் கலை, புகைப்படம் எடுத்தல், அது சம்பந்தமான இதர விஷயங்கள், அச்சுத் தொழில் இன்னும் இன்ஜினீயரிங் கலைக்கு வேண்டிய கருவிகளைச் செய்யும் சிறு கைத்தொழில்கள் முதலியவைகளைச் சொல்லிக் கொடுத்தார்கள்.

தொண்ணூறு ஆண்டுகளுக்குப் பிறகு 1939-ம் வருஷம், விமானம் சம்பந்தமான நுணுக்கங்கள், ராணுவத்துக்கு வேண்டிய இன்ஜினீயரிங் கலை, மோட்டார் செப்பனிடும் தொழில், வெடிகுண்டு செய்தல் முதலியவைகளைக் கற்றுக் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

அதற்கு நாலு ஆண்டுகளுக்குப் பின் 1942ல் இந்தக் கல்லூரி ராணுவ இன்ஜினீயரிங் கல்லூரியாக மாறியது. ராணுவ சம்பந்தமான பல விஞ்ஞானக் கலைகளைப் போதிக்க ஆரம்பித்தனர். ராணுவத்தினர் அல்லாத மாணவர்களும் சேர்ந்து படிக்க வசதி செய்திருந்தனர்.

இந்தக் கல்லூரி ஆரம்பித்த நூறு ஆண்டுகளுக்குப் பிறகு 1947-ம் ஆண்டு நமது நாடு சுதந்திரம் பெற்றது. சுதந்திரம் பெற்றவுடன் சுதந்திர சர்க்கார், இந்தக் கல்லூரியின் வளர்ச்சியில் கவனம் செலுத்த ஆரம்பித்தனர். “தாம்ஸன் ராணுவ இன்ஜினீயரிங் கல்லூரி” என்ற பழைய பெயரை மாற்றி “ரூர்க்கி சர்வகலாசாலை” என்று புதிய நாமகரணம் சூட்டினர்.

1949-ம் ஆண்டு நமது பாரத நாட்டின் பிரதம மந்திரி பண்டித ஜவாஹர்லால் நேரு அவர்கள் இந்தப் புதிய சர்வகலாசாலையை ஆரம்பித்து வைத்தார். அவர் புனிதத் திருப்பாதம் பட்டவுடன் ரூர்க்கி பல்கலைக் கழகம் பல துறைகளிலும் வளர்ந்து மிக வேகமாக முன்னேற ஆரம்பித்து விட்டது.


ஐந்து உபாத்தியாயர்களும், எட்டு மாணவர்களும் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரி இன்று அகில உலகத்தையும் சேர்ந்த ஐம்பது இன்ஜினீயரிங் நிபுணர்களை உபாத்தியாயர்களாகவும் பல நூற்றுக் கணக்கான இளைஞர்களை மாணவர்களாகவும் கொண்டு பெரும் புகழுடன் விளங்குகிறது. இமயமலைக்கு எதிரில் கம்பீரமாகக் காட்சியளித்து நிற்கிறது.

சென்ற ஆறு ஆண்டுகளுக்குள் இந்தியாவில் மட்டுமல்ல, ஆசியாவிலேயே மிகச் சிறந்த பல்கலைக் கழகமாக மாறி விட்டது.

சுமார் மூன்நூற்று அறுபத்தைந்து ஏக்கர் நிலத்தில் பரவித் தழைத்து நிற்கின்றன அதன் விஸ்தாரமான கட்டடங்கள்.

இப்பொழுது ரூர்க்கி சர்வகலாசாலையில் எல்லாவிதமான இன்ஜினீயரிங் கலைகளையும் கற்றுக் கொடுக்கின்றனர். அணைகள் கட்டுதல், ஆறுகள் வெட்டுதல், பெரிய கட்டடம் கட்டுதல்; கான்கிரீட் சம்பந்தமான பல நுணுக்கங்கள்; குளிர் சாதன இயந்திர நுணுக்கங்கள்; அறைகளைக் குளிர்ப் படுத்தும் விசேஷ முறை; மின்சார இயந்திரக் கலை; நிலவள ஆராய்ச்சி; பூமி தத்துவத்தின் புதுமை; கட்டடங்களையும், இயந்திரங்களையும் ‘எக்ஸ்ரே’ எடுக்கும் முறை; மின்சாரம் செல்லும் நிலையங்கள் அமைக்கும் முறை; தண்ணீர்க் குழாய்கள் அமைக்கும் விதம்; நகர சபைக்கு வேண்டிய இன்ஜினீயரிங் கலை; சாலைகள் அமைக்கும் விதம்; அச்சுத் தொழில்; புகைப்படத் தொழில்; ராணுவ இன்ஜினீயரிங் முதலிய நவீன விஞ்ஞான உலகத்துக்கு வேண்டிய இன்னும் பல கலைகளையும் கற்றுக் கொடுக்கின்றனர். இவைகளைப் பற்றிச் சொல்லிக் கொடுப்பதற்கு உலகின் பல பாகங்களில் இருக்கும் நிபுணர்களை வரவழைத்து வைத்திருக்கின்றனர்.

இந்தக் கல்லூரியில் ஒரு அதிசயம், எல்லாவற்றையும் நேர்முகமாகவே



பத்திரிகை நிருபர்களுடன் உப அத்யட்சகர் திரு கோசளா பேசிக் கொண்டிருக்கிறார். இடது பக்கக் கோடியில் இருப்பவர்தான் திரு ஏ. என். கோசளா அவர்கள்.



ருசி ரஸனை

பதார்த்தங்களின் ருசியை பரிமளிக்கச் செய்து ரஸிகர்களின் மனதைக் கவர்வது காமதேனு வனஸ்பதியே!

ஒரு அவுன்ஸில் 700 யூனிட் வைடமின் 'A' (ரஸாயன சத்து) ஊட்டப் பெற்று (நெய் மாதிரி), காமதேனு வனஸ்பதி புதிய, சுலபமாக கையாளக் கூடிய டின்களில் சுத்தமாக ஸீலிடப்பட்டு எங்கும் கிடைக்கிறது.



காமதேனு
வனஸ்பதி

மேட்டூர் கெமிகல் & இண்டஸ்ட்ரியல் கார்ப்பொரேஷன் லிமிடெட்
மேட்டூர் அணை R. S. :: சேலம் ஜில்லா

மானேஜிங் ஏஜெண்ட்ஸ்: சேஷசாயி பிரதர்ஸ் லிமிடெட்

கால்கேட் குளோரோபில்
டூத் பவுடர்

வெளியிடுகிறது

வீரிய குளோரோபிலின்
பூரணநன்மைகளை



வீரியகுளோரோபில்தான் உங்களுக்கு
நன்மை தரவல்லது!

வாயில்தோன்றும் துர் நாற்றத்தை ஒழிக்கிறது. அதி துரிதமாக, பூர்த்தியாகச் செயலாற்றுகிறது! வாய்க்கு புதிய நறுமணத்தைத் தருகிறது!

பற்கள் சொத்தையாகாமல் காக்கிறது! சொத்தையாக்கும் காரணம் என பல் டாக்டர்களால் கருதப்படும் தீய அமிலங்களை ஒழிக்கிறது!

ஈறுகளைப் பலப்படுத்துகிறது! உங்கள் ஈறுகளைப் பாதுகாக்க குளோரோபிலின் தீவிர நன்மைகளைத் தருகிறது.


* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது.

CTP/6/3

கற்றுக் கொடுப்பதுதான். பாட புத்தகங்களில் படிப்பதை விட நேர் முகமாகக் கைத் தொழிலில் ஈடு பட்டு மாணவர்கள் மேற்படி கல்விகளையெல்லாம் கற்று வருகின்றனர்.

ரூர்க்கி மாணவர்கள் செய்த பல விதமான மின்சார இயந்திரங்கள் மார்க்கெட்டுக்கு வந்து விலையாகின்றன. அந்த இயந்திரங்கள் மேல் நாட்டிலிருந்து வரும் இயந்திரங்களைப் போலவே சுத்தமாகவும், உறுதியாகவும் இருப்பதுடன் நீண்ட காலத்துக்குழைக்கும் சக்தியுடையனவாகவும் இருக்கின்றன.

மாணவர்களைக் குழு குழுவாகப் பிரித்து அவர்களிடம் பல வேலைகளை ஒப்படைக்கின்றனர். அதைத் திறமையாகச் செய்தமாணவர்களுக்குப் பரிசுகளும், பாராட்டுப் பத்திரங்களும் வழங்கி அவர்களுக்கு ஊக்கமும் உற்சாகமும் அளித்து வருகின்றனர்.



சூரஜ்பூர் சிமெண்ட் தொழிற்சாலையின் மாதிரிக் கட்டடம்.

சுருக்கமாகச் சொன்னால் ரூர்க்கி பொறி இயல் மாணவர்கள் கல்லூரியை விட்டு வெளியில் வந்ததும் தாங்கள் கற்ற கல்வியை உடனே பயன்படுத்தும் அனுபவம் நிறைந்த இன்ஜினியர்களாகத் திகழுகின்றனர்.

"ரூர்க்கி பல்கலைக் கழக மாணவர்கள் படிப்பு முடிந்து வெளியில் போனதும் குமாஸ்தா வேலைக்கு மனுப் போடமாட்டார்கள். அறிவுத் திறனையும் கைத்திறனையும் உபயோகித்துத் தங்கள் வாழ்க்கையை வளமாக்கிக் கொள்வதுடன், தேசத்தையும் உயர்த்துவார்கள்" என்று பல்கலைக் கழகத் தலைவர் திரு கோசலா பெருமையுடன் சொன்னார். அதுவே தமது லட்சியம் என்றும் அதற்கு வேண்டிய அடிப்படையான ஏற்பாடுகளை மிகுந்த கஷ்டப்பட்டுச் செய்து வருவதாகவும் சொன்னார்.

ரூர்க்கி பல்கலைக் கழகத் தலைவர்

ரூர்க்கி பல்கலைக் கழகத்தின் தற்போதைய தலைவர் திரு அஜுதியாநாத் கோசலா அவர்கள். பஞ்சாப் மாகாணத்தில் உள்ள ஜலந்தர் என்னும் ஊரைச் சேர்ந்தவர். அதே ரூர்க்கி சர்வகலாசாலையில் படித்து இன்ஜினியர் பட்டம் பெற்றவர். பஞ்சாப் மாகாணத்தின் நீர்வளத்தையெல்லாம் உபயோகிப்பதற்கு அருமையான யோசனைகளையும் திட்டங்களையும் வகுத்து அதில் வெற்றி கண்டவர். உலகத்தில் உள்ள எல்லா அணைக்கட்டுகளையும் நேரில் சென்று பார்த்து அனுபவம் பெற்றவர். இவருடைய ஆலோசனைகள் பாக்ரா நங்கல் அணை கட்டுவதற்குப் பெரிதும் உதவி புரிந்திருக்கின்றன. இந்தியா – பாகிஸ்தான் சிந்து நதி தண்ணீர்த் தகராறு சம்பந்தமாக ஐக்கிய நாட்டுச் சபைக்கு வழக்கு சென்றதல்லவா! அதில் இந்திய சர்க்கார் அனுப்பி வைத்த குழுவின் தலைவராக அமெரிக்காவுக்குச் சென்று இந்தியாவின் உண்மையான நிலைமையை விளக்கி இந்தியாவின் நியாயத்தை நிலைநிறுத்திய நிபுணர்.

இன்ஜினியரிங் சம்பந்தமாக ஏராளமான நூல்களை இயற்றியுள்ளார். அணைக்கட்டுச் சம்பந்தமாக அவர் கண்டு பிடித்த புதிய முறைக்கு "கோசலா டிஸ்க்" என்று பெயர் வைத்திருக்கிறார்கள். இந்த முறையே இன்று உலகம் முழுதும் கையாளப்படுகிறது. இவருடைய புதிய திட்டம் மிகுந்த சிக்கனமும் பாதுகாப்பும் நிறைந்த அபூர்வமான முறையாகும். சுமார் நாலு அமெரிக்க இன்ஜினியரிங் கழகத்தில் அங்கத்தினராக இருந்து வருகிறார். உலகில் உள்ள இன்ஜினியரிங் கழகத்தில் இவர் சம்பந்தப்படாத கழகமே இல்லை என்று சொல்லி விடலாம். 1951-ம் ஆண்டு புது தில்லியில் அகில உலக நாலாவது இன்ஜினியர்கள் மகாநாடு நடத்தி அதன் மூலம் இந்தியாவின் புகழை உயர்த்திய தீரர். இன்னும் பல அகில உலக இன்ஜினியரிங் ஸ்தாபனங்களை ஆரம்பித்து வைத்த பெருமையும் அவருக்கு உண்டு. இன்ஜினியரிங் உலகத்தில் திரு கோசலாவைத் தெரியாதவர்கள் இருக்க முடியாது.

பஞ்சாப் சர்க்காரிலும், இந்திய சர்க்காரிலும், இடையில் ராணுவத்திலுமாகச் சுமார் முப்பத்தெட்டு வருஷம் சேவை செய்து விட்டுச் சென்ற ஆண்டுதான் ஓய்வு பெற்றார்.

அவர் ஓய்வு பெற்றதை அறிந்தவுடன் ஏதோ பழம் நழுவிப் பாலில் விழுந்தது போல எண்ணி 'ரூர்க்கி பல்கலைக் கழகத்து'க்குத் தலைவராகத் தேர்ந்தெடுத்து விட்டார்கள். திறமையைத் தேடிச் சென்று பெருமதிப்பு அளிக்கும் வழக்கம் வட நாட்டில் இருந்து வருவதை எண்ணிப் பெருமைப் பட்டேன். கூடவே இந்தமாதிரி எண்ணம் தமிழ் நாட்டுக்கு எப்போது ஏற்படப் போகிறதோ என்று ஏக்கமும் உண்டாகத்தான் செய்கிறது.

எத்தனையோ பதவிகளில் இருந்து உலகப் புகழ் பெற்ற திரு கோசலா புதிய சர்வகலாசாலையின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு திறமையுடன் நிர்வகித்து வருகிறார். தம்முடைய நீண்டகால அனுபவத்தில் இருந்து "ஏட்டுக் கல்வி நாட்டுக்குப் பயன் படாது. உடல் உழைப்புடன் கூடிய தொழிற்கல்விதான் கல்வி" என்று உறுதி கொண்டிருக்கிறார்.

அதனால் அங்குள்ள மாணவர்களை உடல் உழைப்புக்குத் தயார் செய்திருக்கிறார். கல்லூரிக்குள் புதிதாக ஒரு நீச்சல் குளம் கட்டியிருக்கிறார்கள். அது கல்லூரி மாணவர்களாலேயே கட்டப்பட்டதாம். கற்களைச் சுமந்து,

சேர் குழைத்ததிலிருந்து, பின்னர் எழுதியது வரையில் மாணவர்கள்தானாம். இதனால் கல்லூரிக்கு எத்தனையோ ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள நீச்சல் குளம் கிடைத்தது. மாணவர்கள் சிறந்த அனுபவம் பெற்ற இன்ஜினீயர்களாக மாறி விட்டார்கள் என்று மிகுந்த பெருமையுடன் கூறினார் திரு கோசலா.

புதிதாகக் கட்டி வரும் கல்லூரிக் கட்டடங்களையும் மாணவர்களைக் கொண்டே கட்டி வருகிறார். அதற்கு உண்டான கூலியை மாணவர்களுக்கு வழங்கினார். அதை மாணவர்கள் வாங்கிக் கொள்ள மறுத்து விட்டனர். அந்த ரூபாய்களை அப்படியே மாணவர் விடுதியின் பொது நிதியில் சேர்த்து அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து வருகிறார். "இந்த மாதிரி எப்பொழுதுமே மாணவர்கள் பணத்தை வேண்டாம் என்று கூறமாட்டார்கள். தங்கள் உழைப்புக்குக் கிடைக்கும் ஊதியத்தை வாங்கிக் கொள்ளத்தான் போகிறார்கள். நான் பார்க்கத்தான் போகிறேன்" என்று புன்முறுவலுடன் கூறியபோது அவர் உழைப்புச் சக்திக்கு அளிக்கும் கௌரவத்தை நன்கு உணர முடிந்தது.

இவ்வாறு கல்வி சம்பந்தமான பல விஷயங்களைப் பற்றி பேசிக்கொண்டே சர்வகலாசாலைக் கட்டடங்களின் ஒவ்வொரு பகுதியையும் பார்த்துக் கொண்டு சென்றோம். கல்லூரியில் உள்ள புத்தகசாலைக்கு எங்களை அழைத்துச் சென்றார். அந்தப் புத்தகசாலையில் உள்ள புத்தகங்களின் விசேஷம் என்னவென்றால் அங்குள்ளவைகளில் பெரும்பகுதி நூறு வருஷங்களுக்கு முன்னால் அச்சிடப்பட்டவை. உதாரணமாக ஷேக்ஸ்பியர் எழுதிய சரித்திரப் பிரசித்தி பெற்ற நாடகங்களின் முதல் பதிப்புப் புத்தகங்களை இங்கே காணலாம். அவைகள் சுமார் முந்நூறு ஆண்டுகளுக்கு முன் அச்சிடப்பட்டவை. மேல் நாடுகளில் புகழ் பெற்ற புராதன ஆசிரியர்களின் முதல் பதிப்பு நூல்களை ஒன்றுக்கு நூறு மடங்கு அதிக விலை கொடுத்து வாங்கிப் போற்றுவார்களாம்.

இதைத் தவிர இன்னும் சரித்திரம், விஞ்ஞானம், இன்ஜினீயரிங் சம்பந்தமான நூல்கள் ஏராளமாக இருக்கின்றன.

வட இந்தியாவில் உள்ள பெரிய பெரிய அணைகள், பாலங்கள், அதில் உள்ள பலவிதமான இன்ஜினீயரிங் விந்தைகள் முதலியவைகளுக்கான மாதிரிப் பொம்மைகள் அங்கு இருக்கின்றன. உலகிலே உள்ள மிகப் பெரிய அணைகளில் ஒன்றான பாக்ரா நங்கல் அணை கட்டுவதற்கு சிமெண்ட் தயார் செய்து கொடுக்கப் போகும் சூரஜ்பூர் சிமிண்ட் தொழிற்சாலையின் மாதிரிக்கட்டடம் ஒன்றும் அங்கு இருந்தது. பின்னால் இந்தத் தொழிற்சாலையைப் பற்றியும் எப்படி சிமெண்ட் தயார் செய்கிறார்கள் என்பதைப் பற்றியும் கூறுகிறேன்.

இந்தத் தொழிற்சாலையின் மாதிரியைப் பார்த்து விட்டு, பிறகு சூரஜ்பூர் சென்று உண்மையான தொழிற்சாலைக்குள் சென்றபோது பல விஷயங்களைப் புரிந்து கொள்வது வெகு சுலபமாக இருந்தது. சாதாரணமாக நம்மைப் போன்றவர்களுக்கே இந்த மாதிரிக்கட்டடங்கள் இவ்வளவு தூரம் உதவி செய்யுமானால்

இன்ஜினீயர்களுக்கு அது எவ்வளவு துணை செய்யும் என்பதைக் கூறவும் வேண்டுமோ!

ஐந்தடுக்கு, எட்டு அடுக்கு என்று விண்ணை இடிக்கும் பெரிய கட்டடங்கள் இருக்கின்றன. சுவர்களின் மேற் பக்கம் சுத்தமாக இருக்கும். ஆனால் உள்ளுக்குள் சிதைந்து இருக்கலாம் அல்லவா! இதை எப்படித் தெரிந்துகொள்ள முடியும்! அதற்கு ஒரு அதிசயமான இயந்திரம் அங்கு இருக்கிறது. கட்டடங்களை அப்படியே 'எக்ஸ்ரே' படம் எடுத்துக் காண்பித்து விடுகிறது. என்ன அதிசயம்! அந்த இயந்திரத்தைக் கொண்டு போய், பெரிய பெரிய கான்கிரீட் கட்டடத்துச் சுவர்மீது வைத்துப் பார்த்தால் போதும். அதற்குள் இருக்கும் கெடுதல்கள் 'பளிச்' என்று தெரிகின்றன. இதே இயந்திரங்களைக் கொண்டு இரும்பு இயந்திரங்களையும் 'எக்ஸ்ரே' எடுத்துப் பார்க்கலாம். மேற்பக்கம் நன்றாக இருந்து, உள்ளே கீறல் விட்டிருந்தால் அவைகளை யெல்லாம் இந்த இயந்திரத்தின் மூலம் சுலபமாகக் கண்டுபிடித்து விடலாம்.

இதுபோன்ற இன்னும் பல அதிசயமான இயந்திரங்கள் எல்லாம் அங்கு இருக்கின்றன. அதைப்பற்றி யெல்லாம் மாணவர்கள் தெளிவாகத் தெரிந்து கொள்கின்றனர்.

சாதாரணமாகப் பத்திரிகைகளில் எப்பொழுதாவது அபூர்வமாக ஏதாவது மலைகளின் தோற்றப் படங்கள் அச்சாகி வருவதைப் பலர் பார்த்திருக்கலாம். அந்தப் படத்தை வைத்துக் கொண்டு அது எந்த இடத்தில் இருக்கிறது! அதன் உயரம் என்ன! அதில் மரங்கள், வீடுகள், இன்னும் ஏதாவது முக்கியமான இடங்கள் இருக்கின்றனவா என்பதைக் கண்டுபிடிக்கும் அதிசயமான போட்டோ இயந்திரம் ஒன்றும் அங்கு இருக்கிறது. இது ராணுவ சம்பந்தமான இன்ஜினீயரிங் கலை. இதே முறையினால் தான் எதிரிகளின் கேந்திர ஸ்தானங்களை எளிதில் கண்டுபிடித்துத் தாக்கி விடுகிறார்கள். அதிசயமான விஞ்ஞானக் கலை. ஏதோ மாயா ஜாலம் போல் இருக்கிறது. இதுபோல் அங்குள்ள ஒவ்வொரு பகுதியிலும் அதிசயமும் அற்புதமும் நிறைந்து இருக்கின்றன. அந்த இடங்களுக் கெல்லாம் எங்களை அழைத்துக் கொண்டு காண்பித்தார் திரு கோசலா.

பிறகு பத்திரிகைப் பிரதிநிதிகளைப் பார்த்து, "உங்களுக்கு ஏதாவது கேட்க வேண்டுமானால் தாராளமாகக் கேளுங்கள்" என்றார்.


"இந்தச் சர்வகலாசாலையில் தென் இந்தியாவில் உள்ள மாணவர்கள் வந்து படிக்கலாமா!" என்று உற்சாகமுள்ள ஒரு தென் இந்தியப் பத்திரிகைப் பிரதிநிதி கேட்டார்.

அதற்கு நேர்முகமாகப் பதில் சொல்லாமல் திரு கோசலா ஒரு புன்முறுவல் பூத்தார். பின்னர் ரூர்க்கி சர்வகலாசாலைக்குள் மாணவர்களை எப்படிச் சேர்த்துக் கொள்கிறோம் என்பதை விவரிக்க ஆரம்பித்தார்.

தமிழ் நாட்டில் மாணவர்களைச் சேர்க்கும் முறைக்கும் ரூர்க்கி சர்வகலாசாலையில் உள்ள முறைக்கும் இருக்கும் வித்தியாசத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா!

அடுத்த இதழில் அந்த ரஸமான விவரங்களைத் தெரிந்து கொள்வோம். (தொடரும்)

இந்தியாவின் எதிர்காலத்தில் முதலீடு செய்க



சிறுசேமிப்புத்திட்டம், நாட்டின் முன்னேற்றத்திற்கும்
சுபிட்சத்திற்கும் ஒவ்வொரு இந்தியனும் இயன்ற
அளவு உதவிபுரிய அபூர்வ சந்தர்பம் அளிக்கின்றது

உங்கள் சேமிப்புகளைக் கீழ்க்கண்ட உத்தரவாதம் பெற்ற செக்யூரிடிகளில் முதலீடுசெய்யுங்கள்

12 வருட
நேஷனல் சேவிங்ஸ் சர்டிபிகேட்டுகள்

10 வருட டிரெஷரி சேவிங்ஸ் டிபாசிட் சர்டிபிகேட்டுகள்

10 வருட நேஷனல் பிளான் சர்டிபிகேட்டுகள்

15 வருட அன்னியுடி சர்டிபிகேட்டுகள்

போஸ்டாபீஸ் சேவிங்ஸ் பாங்க் டிபாசிட்டுகள்

இந்திய அரசாங்கத்தின்

சிறு சேமிப்புத் திட்டம்

இந்தியாவின் அபிவிருத்தியுடன்
உங்கள் சேமிப்புகளும் வளரட்டும்

AC.55/451M

மலரின் மனம்



எம். கே. சங்கரன்

ஜன்னல் அருகில் அமர்ந்து எதிர் வீட்டை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தாள் கமலா. எதிர் வீட்டில் அந்த இளம் தம்பதிகள் எங்கோ புறப்பட ஆயத்தம் செய்து கொண்டிருந்தனர். கமலாவின் நெஞ்சு வேதனையுடன் விம்மியது.

'இம்மாதிரி நானும் வாழ முடியுமா!' என்று ஏங்கியது கமலாவின் இளம் உள்ளம். மேற்கொண்டு ஜன்னல் அருகில் இருக்க இயலாதபடி எழுந்து வீட்டுக்குள் வந்து விட்டாள்.

இந்தச் சமயம் அவள் குழந்தை மணி விழித்து, "அம்மா!" என்று அழைத்தான்.

அடுத்த கணம் "கமலா!" என்று அழைத்துக் கொண்டே அவள் அப்பா சுந்தரம் பிள்ளை வெளியிலிருந்து வந்தார்.

"பொருட் காட்சிக்குப் போக வேண்டுமென்று சொன்னாயே, சீக்கிரம் புறப்படு" என்று அவசரப் படுத்தினார்.

அவளுக்கும் இந்த வேதனையை எங்காவது தணிக்க வேண்டும் போலிருந்தது. மணியைத் தூக்கிக் கொண்டு வீட்டுக்குள் சென்றாள்.

முகத்தை அலம்பிக் கொண்டு வந்தாள். தன் பெட்டியைத் திறந்தாள். ஒரு காகிதப் பொட்டலத்தை எடுத்து வந்து விரித்தாள். அழகான கைத்தறிப் புடவை ஒன்றும், ஒரு ஜாக்கெட்டும் குழந்தைக்குக் கால் சட்டையும், மேல் சட்டையும் அதில் இருந்தன. அதைப் பார்த்தவாறு அப்படியே நின்று விட்டாள். அவள் உள்ளம் கழன்று சென்ற காட்சியைத் தேடிச் சென்றது.

* * *

கமலாவை மிகுந்த செல்வத்துடன் வளர்த்திருந்தார் சுந்தரம் பிள்ளை. அவளுக்கு ஒரே பெண். சுந்தரம் பிள்ளை திருநெல்வேலியில் நல்ல பசையுள்ளவர்.

கமலா மணப் பருவம் அடைந்த போது மிகுந்த எழிலுடன் விளங்கினாள். சுந்தரம் பிள்ளைக்கு மிகுந்த கவலை. 'மனைவி இறந்த பின் தனக்கு ஆதரவாக இருந்த தன் அருமை மகள், கணவன் வீட்டுக்குப் போய் விடுவாளே' என்பதை நினைக்கும்போது அவர் மிகவும் வேதனை அடைந்தார்.

அன்று அவர் மாதாந்தர வெள்ளி உற்சவத்துக்குத் திருச்செந்தூர் சென்றிருந்தார். சுவாமி தரிசனத்தை முடித்து விட்டு, கடற்கரையில் அமர்ந்து கொண்டு அந்தச் சுகமான காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தார். ஒரு வாலிபனும் அவன் அம்மாவும் அவர் அருகில் வந்து அமர்ந்தனர். தாயும் மகனும் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தனர். அவன் மிக அழகாய் இருந்தான். சுருண்ட தலையும், கூர் பொருந்திய மூக்கும், நல்ல தேகக் கட்டும் அவன் அழகுக்கு அழகு செய்தன. அவனுடன் பேச வேண்டும் போலிருந்தது சுந்தரம் பிள்ளைக்கு.

"தம்பிக்கு எந்த ஊர்?" என்று மெதுவாக அவனை நோக்கிக் கேட்டார்.

"ஸ்ரீவைகுண்டம்" என்று அமைதியாகப் பதிலளித்தான் அவன்.

"பெயர்?"

"நடராஜன்."

அவனைப் பற்றி இன்னும் ஏதேதோ கேட்டார். அவன் பி. ஏ. படித்திருக்கிறான். தந்தை இறந்து இரண்டு வருடங்கள், ஆகின்றன. தாயும் அவனும் தனியாகத்தான் இருக்கிறார்கள். தற்சமயம் அவன் வேலை தேடிக் கொண்டிருப்பதாகக் கூறினான்.

அவனுடைய அடக்கமும் பணிவும் சுந்தரம் பிள்ளையைக் கவர்ந்து விட்டன. நீண்ட நேரம் இருவரும் பேசிக் கொண்டிருந்தனர்.

"தம்பி, நீங்கள் திருநெல்வேலிக்கு வந்தால் நான் வேலை பார்த்துத் தருகிறேன்" என்று வாக்களித்தார் சுந்தரம் பிள்ளை.

"நீங்கள் அந்த உதவி மட்டும் செய்து விட்டால் என்றும் உங்களுக்குக் கடமைப் பட்டிருப்பேன்" என்றான் நடராஜன்.

சுந்தரம் பிள்ளை தம் விலாசத்தை அவனுக்குக் கொடுத்தார்.

ஊருக்கு வந்தும் கூட நடராஜனின் உருவம் அவர் மனத்தில் நிழலாடிக் கொண்டே இருந்தது. "நல்ல அடக்கமான பையன். கமலாவுக்குத் தகுந்தவனாக இருப்பான். நம் வீட்டோடேயே வைத்துக் கொள்ளலாம்!" என்று மனத்துக்குள் கூறிக் கொண்டார்.

இரண்டு தினங்கள் கழித்து நடராஜன் அவரைத் தேடிக் கொண்டு அவர் வீட்டுக்கு வந்தான். அவனைக் கண்டதும் அவருக்கு மிகவும் மகிழ்ச்சியாகி விட்டது. மிகுந்த அன்போடு வரவேற்று அவனை உபசரித்தார்.

அன்று அவனுக்கு அவர் வீட்டில் ராஜ விருந்து நடந்ததைக்கண்டு, ஆச்சரியமாக இருந்தது. "பெரிய பணக்காரர் வேலை தேடி வந்த ஏழையை இவ்வளவு தூரம் உபசரிக்கிறாரே!" என்று வியப்பில் ஆழ்ந்தான்.

சுந்தரம் பிள்ளை கமலாவைத் தனியாக அழைத்துச் சென்று, "இந்தப் பையனை உனக்குப் பிடிக்கிறதா, கமலா?" என்று கேட்டார்.

அவள் தலை குனிந்துகொண்டே, "உம்" என்றாள். கண்ணுக்கு லக்ஷணமானவனை மணக்க எந்தப் பெண்ணுக்குத்தான் மனம் வராது!


அவ்வளவுதான். அவர் உடனே மற்ற ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்து விட்டார்.

விஷயம் தெரிந்ததும் நடராஜன் திகைப் படைந்து விட்டான். தான் காண்பது கனவா நனவா என்பதுகூட அவனுக்குச் சந்தேக மாகி விட்டது. நடராஜனின் அம்மா பெரிய இடத்துச் சம்பந்தம் கிடைப்பதை எண்ணிப் பூரித்துப் போய் விட்டாள்.

நல்ல தினத்தில் நடராஜனுக்கும், கமலாவுக்கும் விமரிசையாகத் திருமணம் நடைபெற்றது. எல்லா விசேஷங்களும் முடிந்தபின் நடராஜன் கமலாவைத் தன் ஊருக்கு அழைத்துச் செல்லத் திட்டமிட்டான். இது தெரிந்ததும் சுந்தரம் பிள்ளை நடராஜனை அழைத்து, "மாப்பிள்ளை, கமலா என்னை விட்டுப் பிரிந்தே கிடையாது. தாயில்லாப் பெண். நீங்கள் உங்கள் அம்மாவை அழைத்துக் கொண்டு இங்கேயே வந்து விடுங்கள்" என்றார்.

நடராஜனுக்குப் 'பகீ'ரென்றது. மாமனார் வீட்டில் தங்குவது அவனுக்கு நல்லதாகப் படவில்லை. என்றாலும் அவர் வேண்டுகோளை நிராகரிக்கவும் அவனால் முடியவில்லை. நீண்ட நேரம் சிந்தித்து ஒருவாறு ஒப்புக்கொண்டான்.

நடராஜன் சுந்தரம் பிள்ளையின் வீட்டுக்கு வந்து ஒரு வருஷமாகி விட்டது. சுந்தரம் பிள்ளை நடராஜனுக் கென்னவோ ஒரு குறையும் வைத்திருக்க வில்லை. ஆனால் பாவம்! அவன் அம்மாதான் மிகுந்த கஷ்டங்களுக்கு ஆளானாள். நடராஜனைத் தவிர வேறு யாரும் அவளுக்கு மதிப்பளிக்கவில்லை. அதே ஏக்கமாக அன்னை ஆறு மாதத்துக்குள் கண்ணை மூடி விட்டாள்.



தென்காசி அட்வகேட் ஸ்ரீ பி. உலகநாதப் பிள்ளை அவர்களின் புதல்வர் திரு உ. பிரமநாயகம் B. Sc.க்கும் பம்பாய் பிரபல வியாபாரி ஸ்ரீ எம்.ஏ. பிள்ளை அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி லக்ஷ்மிக்கும் கல்லிடைக்குறிச்சி மணமகள் இல்லத்தில் ஜூன் மாதம் 9-ந் தேதி வெகு சிறப்பாகத் திருமணம் நடந்தேறியது.

வாழ்க, லக்ஷ்மி – பிரமநாயகம்

அவன் அன்னை இறந்து ஒரு மாதத்திற்கும் மேலாகி விட்டது. நடராஜன் வெறி கொண்டவன் போல் இருந்தான். கமலாவிடமோ, அவள் அப்பாவிடமோ அவன் பேச்சே வைத்துக் கொள்ள வில்லை. தாய் இறந்த கவலையில்தான் இப்படி இருக்கிறான் என்று பேசாமல் இருந்து விட்டார் சுந்தரம் பிள்ளை.

அவனுக்கு அந்த வீட்டில் இருக்கப் பிரியமில்லை. ஆனாலும் உடனே வெளியேற முடியாமல் இருந்தான். காரணம் கமலா கர்ப்பமாகி இருந்தாள். எனவே கமலாவின் பிரசவ காலம் முடிந்த பின் வெளியேறி விட வேண்டும் என்று தீர்மானித்தான்.

கமலாவுக்கு மணி பிறந்தான். கமலாவின் உறவினர்கள் மணிக்கு மோதிரங்களும் தங்க நகைகளும் பரிசளித்தனர். நடராஜனுக்குத் தன் குழந்தைக்குத் தன்னால் சிறு பொருள் கூடக் கொடுக்க முடிய வில்லையே என்று மிகவும் வருத்தம். அதைப் பிரதிபலிப்பது போல் அன்று கமலாவிடம் அவள் அப்பா சுந்தரம் பிள்ளை பேசிய வார்த்தை அவன் காதுகளில் விழுந்து விட்டது.

"பார்த்தாயா, கமலா! குழந்தைக்கு ஒரு சட்டைத் துணி கூட வாங்க வகை இல்லை மாப்பிள்ளைக்கு! உன்னைத் தனியாக வைத்துக் காலங் கழிக்கப் போகிறாராம்" என்று ஏளனத்துடன் சொல்லிக் கொண்டிருந்தார். அவன் ரத்தம் கொதித்தது.

இனியும் இங்கே தங்குவதானால் தனக்கு இருக்கிற மரியாதையும் போய் விடும் என்பதை உணர்ந்தான். ஆவேசமாக வீட்டுக்குள் நுழைந்தான்.

சுந்தரம் பிள்ளையைப் பார்த்து, "கமலாவை நான் அழைத்துக் கொண்டு போகப் போகிறேன்" என்றான்.

சுந்தரம் பிள்ளை விஷயத்தை உணர்ந்து கொண்டார்.

"என் பெண்ணை உம்முடன் அனுப்புவதற்கு உரிய தகுதி உம்மிடம் இல்லை. நீர் வேண்டுமானால் போகலாம்" என்று அவர் கண்டிப்புடன் கூறினார்.

நடராஜன் அவரை எரித்து விடுவது போல் பார்த்தான். "கமலா, நீ என்ன சொல்கிறாய்!" என்று கமலாவை நோக்கிக் கேட்டான்.

கமலா வாயே திறக்க வில்லை.

"சரி, நான் வருகிறேன்" என்று கூறி விட்டு 'விர்' என்று வீட்டை விட்டு வேகமாகச் சென்று விட்டான் நடராஜன்.

அன்று போனவன்தான் அதன் பிறகு அவன் வரவே இல்லை. இன்று வருவார், நாளை வருவார் என்று ஒவ்வொரு நாளும் எதிர் பார்த்தாள் கமலா. அவளுக்குப் பெரும் பீதி பற்றிக் கொண்டது. திரும்பி வராமலே இருந்து விடுவாரோ என்று பயந்தாள். கணவன் பிரிவு எவ்வளவு கொடுமையானது என்பதைப் பின்னால்தான் உணர முடிந்தது அவளுக்கு. நாளாக ஆகக் கணவனின் நினைவு அவளைப் பலமாகப் பற்றிக் கொண்டது. "அப்பா, அவர் எங்கிருந்தாலும் அழைத்து வர மாட்டீர்களா!" என்று தன் தந்தையை அடிக்கடி தொந்தரவு செய்தாள். அவரோ 'இப்படி ஓடிவிட்டானே' என்ற கோபத்தில் இருந்தார். ஒன்றரை வருடங்களும் கழிந்தன.

அன்று கமலாவின் பெயருக்கு ஒரு பார்சல் வந்தது. ஆம். நடராஜன் தான் எங்கோ இருந்து கொண்டு அதை அனுப்பி இருந்தான். கண்களில் நீர் மல்க ஆவலுடன் அதைப் பிரித்தாள் கமலா. அழகான கைத்தறிச் சேலை ஒன்றும், குழந்தைக்கு ஆடையணிகளும் அதில் இருந்தன. தன் கணவன் ஆசையுடன் அனுப்பி இருக்கிறார் என்பதில் கமலாவுக்கு அளவற்ற மகிழ்ச்சி.

"கமலா! கமலா!" என்ற தந்தையின் குரலைக் கேட்டதும் தன் நினைவிலிருந்து விழித்துக் கொண்டாள் கமலா.

"என்னம்மா பேசாமல் நின்று கொண்டிருக்கிறாய்! பொருட்காட்சிக்குப் போக வேண்டாமா!" என்றார் சுந்தரம் பிள்ளை.

"இதோ வந்து விடுகிறேன்" என்று கூறி விட்டு, கணவன் அனுப்பிய அந்தப் புடவையை உடுத்திக்கொண்டு புறப்படத் தயாரானாள்.

"என்னம்மா, இந்தப் புடவையைக் கட்டிக் கொண்டிருக்கிறாய்! பெட்டி நிறைய பட்டுப் புடவைகளை வைத்துக் கொண்டு இதை உடுத்தினால் நன்றாய் இருக்கிறதா!" என்றார்.

"இந்தப் புடவைதான் எனக்குப் பட்டுப் புடவை! இந்தப் புடவையை விட அந்தப் பட்டுப் புடவைகள் எனக்குப் பெரிதாய்த் தெரிய வில்லை" என்றாள்.

பொருட் காட்சியில் அன்று ஏகக் கூட்டம். பொருட் காட்சி முழுவதும் சுற்றிவிட்டு, ரேடியோ கம்பெனி ஸ்டால் பக்கம் வந்தனர். சுந்தரம் பிள்ளை ஒரு ரேடியோவின் விலையை விசாரித்துக் கொண்டிருந்தார். கமலா குழந்தையைக் கையில் தூக்கியவாறு ஒரு ஓரத்தில் நின்று கொண்டிருந்தாள். அந்தக் கம்பெனிக்குள்ளிருந்து ஒரு உருவம் விழுங்கி விடுவதைப் போல் பார்த்துக் கொண்டே இருந்தது. அது வேறு யாருமல்ல, நடராஜன் தான்.

அன்று மாமனார் வீட்டை விட்டு வெளியேறியவன் ஸ்ரீவைகுண்டம் சென்றான். தன் வீட்டை அடமானம் வைத்துக் கொஞ்சம் பணம் திரட்டிக் கொண்டு சென்னை சென்றான். சென்னையிலுள்ள ஒரு நண்பன் மூலம் அவனுக்கு இந்த ரேடியோ கம்பெனியில் வேலை கிடைத்தது. நல்ல சம்பளம். திருநெல்வேலி பொருட்காட்சியில் நிறுவப்பட்ட அந்தக் கம்பெனிக்கு விற்பனை மானேஜராக நியமிக்கப் பட்டிருந்தான் நடராஜன்.

திருநெல்வேலிக்கு வந்ததிலிருந்து தன் மனைவியையும், குழந்தையையும் பார்க்க வேண்டுமென்று அவனுக்கு ரொம்ப ஆசை. எப்படிச் செல்வது என்று தயங்கினான். 'கமலா நம்மை நினைத்துக் கொண்டிருப்பாளா!' என்று வேறு எண்ணம். இன்று கமலாவைக் கண்டதும் அவனுக்குச் சற்று நம்பிக்கை துளிர் விட்டது. வெளி இடங்களுக்குப் போகும் போது பட்டுப் புடவை அணிந்து கொண்டு செல்லும் கமலா, தான் அனுப்பிய நூல் புடவையை உடுத்தி வந்திருப்பதிலிருந்து தன் மீது அவள் பாசம் வைத்திருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொண்டான்.

குழந்தை சிரித்துச் சிரித்துக் கமலாவிடம் விளையாடிக் கொண்டிருந்தது. நடராஜனின் உணர்ச்சி பொங்கியது. தாவி ஓடிப் போய்க் குழந்தையை முத்தமிட அவன் உள்ளம் ஏங்கியது. ஆனால் கடையை விட்டுச் சட்டென்று எழுந்து செல்ல முடியாதே! பாவம்! அவனை ஏங்க வைத்து விட்டு அவர்கள் அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டனர்.

மறுநாள் அதிகாலையில் எழுந்து, ஆற்றில் குளித்து விட்டு வரும்போது ரோஜா மலர் ஒன்றை வாங்கினான். நேராகச் சுந்தரம் பிள்ளையின் வீட்டுக்குச் சென்றான்.

அந்த அறையில் நுழைந்ததும் அவன் அப்படியே நின்று விட்டான். கமலா நடராஜனின் புகைப்படத்துக்கு முன் கண்ணீர் வடித்து அழுது கொண்டிருந்தாள். "கமலா!" என்று ஆவலுடன் அழைத்தான் நடராஜன். கமலா திரும்பினாள். அவ்வளவுதான்! ஓடி வந்து அவன் மார்பில் தலையைப் புதைத்துக்கொண்டு விக்கி விக்கி அழுதாள்.

"நீங்கள் என்னை விட்டு எங்கே சென்று விட்டீர்கள்! நீங்கள் எங்கு சென்றாலும் அங்கு வர நான் தயார். இந்தத் துன்பத்தை என்னால் சகிக்கவே முடியாது" என்று அரற்றினாள்.

"கமலா, இப்போதுதான் என் மனம் குளிர்கிறது. நான் இப்பொழுது நல்ல உத்தியோகத்தில் இருக்கிறேன். நீ என்னுடன் வந்திருப்பதற்கு உன் அப்பா தடுப்பாரே!" என்றான்.


"என் கணவருடன் செல்வதை அப்பாவானாலும் யாரானாலும் தடுக்கவே முடியாது!"

கண்களில் ஆனந்தக் கண்ணீர் தேங்கச் சிரித்தாள் கமலா. ஆசையோடு வாங்கி வந்த ரோஜா மலரை அவள் தலையில் சூடினான் நடராஜன். அந்த மலர் அவள் வாழ்க்கையில் ஒரு புதிய மணத்தை ஏற்படுத்தியது!



கொழும்பு பெருநீதி மன்றத்தில் (District Court) கடமையாற்றும் திரு. இரா. குமாரசாமி அவர்களுக்கும், டாக்டர் திலகவதி M. B., B. S. (Ceylon) அவர்களுக்கும் (அரசினர் மருத்துவ நிலையம், நுவரெலியா) ஜூலைத் திங்கள் 11-ம் நாள் தில்லைக் கூத்தன் திருமுன்பு திருமணம் மிகச் சிறப்பாக நடைபெற்றது. அன்று மாலை அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவ நண்பர்களால் பாராட்டுக் கூட்டம் நடாத்தப் பெற்று வாழ்த்துப்பா படித்தளிக்கப் பெற்றது. மணமக்களுக்கு ஏராளமான வாழ்த்துக்களும் பரிசுகளும் இலங்கையிலிருந்து வந்திருந்தன.

வாழ்க, குமாரசாமி – திலகவதி



பூதான சரித்திரத்திலே நான்கு ஆண்டுகள்!

சுரேஷ்ராம்

நான்கு ஆண்டுகளுக்கு முன்பு ஹைதராபாத் ராஜ்யத்தில் தெலுங்கானா பகுதியிலுள்ள நளகொண்டா ஜில்லாவில்தான் முதன் முறையாக நில தானம் ஆரம்பமாயிற்று. அங்கு இது எப்படி சேர்ந்தது! இதைப் பற்றி அறியச் சுவாரஸ்யமாக இருக்கும்.

சாதாரணமாக நம் நாட்டில் ஒருவர் நிலம் தானம் செய்கிறார் என்றால், அது ஒரு தர்மகைங்கரியம் என்றோ, ஏழைக்கு இரங்குவோமென்றோ அல்லது மேலுலகத்தில் ஒரு இடத்துக்கு இப்பொழுதே வழி செய்து வைப்போம் என்றோதான் கொடுப்பது வழக்கம். ஆனால் அன்று நளகொண்டாவில் கொடுக்கப்பட்ட நிலதானம் மேற்கண்ட எந்த வகை நோக்கத்தையும் கொண்டதல்ல. அதனாலேயே இந்த பூதானம் தனி விசேஷமும் சிறப்பும் கொண்டதாயிற்று!

இந்த விசேஷமான தானம் எத்தகைய சூழ்நிலையிலிருந்த பிரதேசத்தில் ஏற்பட்டது என்பதையும் பார்க்க வேண்டும்.

நம் நாட்டில் எங்கும்தான் ஏழை, பணக்காரர் பாகுபாடு இருக்கிறது. ஆனாலும் இந்தத் தெலுங்கானாவிலிருப்பது போன்ற அதிகப்படியான வித்தியாசம் வேறு எங்குமே இல்லை.

மேலும் அப்பொழுது அந்தப் பகுதியில் குழப்பமும் கலவரமும் பயங்கர உருவெடுத்துக் கோர தாண்டவம் புரிந்து வந்தன. பணக்காரர்கள் மதியிழந்து, நிதியிழந்து, [illegible]வியிழந்து, 'தலை தப்பியது தம்பிரான் புண்ணியம்' என்று தங்கள் சொந்தக் கிராமம், வீடு வாசல் விட்டு நகரங்களுக்கு ஓடிக் கொண்டிருந்தார்கள்.

பணக்காரர்களுக்கு ஓடவாவது முடிந்தது. ஏழைகளின் நிலைமை, பரிதாபம்! அவர்கள் எங்கே ஓடமுடியும்! இந்தப் பரிதாப நிலையில் யார் சற்று ஆறுதலான மொழிகள் கூறினாலும் கேட்கத் தயாராய் இருந்தார்கள். யார் எதைச் சொன்னாலும் செய்யத் தயாராய் இருந்தார்கள். மொத்தத்தில் கானல் நீரைக் கண்டு ஓடும் மான் கூட்டமாகத்தான் இருந்தார்கள்.

இந்தக் குழப்ப நிலையைச் சமாளிக்கப் பாரத சர்க்காரும் ஹைதராபாத் சர்க்காரும் ஐந்து கோடி ரூபாய் வரை செலவழித்தார்கள். ராணுவ பலம், மற்ற பலம் கொண்டெல்லாம் அமைதியை நிலைநாட்ட முயன்றார்கள். முயற்சி பயன் தந்தால் தானே! அடைந்ததெல்லாம் தோல்விதான்!

இதனிடையில் ஜனநாயக முறையில் நம்பிக்கை கொண்டவர்கள், அங்கு மக்கள் உள்ளத்தில் பற்றியிருந்த பீதியைப் போக்கவும், அப் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டவும் எவ்வளவோ வழி வகைகள் தேடினார்கள். ஒன்றும் பிரயோசனப் படவில்லை.

சர்வாதிகார முறையில் நம்பிக்கை கொண்ட அரசியல் வாதிகள் எவ்வளவோ முயன்று பாடுபட்டார்கள். அவர்களால் இன்னும் அதிகமாகத் தீயைத்தான் வளர்க்க முடிந்ததே தவிர அவர்களால் நிலத்தைப் பொது உடைமையாக்க முடியவில்லை. நிலமில்லாதவர்களைப் பயமின்றி வாழச் செய்யவும் முடியவில்லை.

பகலில் அரசாங்கத்தாரின் கெடுபிடி. இரவில் கம்யூனிஸ்டுகளின் அராஜகம். இவற்றிடையே கிடந்து அவர்கள் பட்ட தொல்லை சொல்லி முடியாது. கடைசியில், ஜனநாயகம், அஹிம்சை, சகோதரத்துவம், சாந்தி ஆகியவை வெறும் பொருளற்ற வார்த்தைகள் என்ற முடிவுக்கே வந்து விட்டார்கள் அப் பகுதி ஏழை மக்கள்.

இத்தகைய சூழ்நிலையில்தான் ஆரம்பத்தில் கூறப்பட்ட அந்த அதிசய சம்பவம் நிகழ்ந்தது. 1951-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 18-ம் தேதி அந்த மங்கள சம்பவம் நிகழ்ந்தது. அந்தச் சம்பவத்திலும் சில சுவை மிக்க விஷயங்கள் இருக்கின்றன!

சாதாரணமாக யாரும் தானம் கேட்டால் சொற்பமாகத்தான் கேட்பார்கள். பாரதியார் கூட பராசக்தியைக் 'காணி நிலம் வேண்டும்' என்றுதான் கேட்டார். ஆனால் அன்று நளகொண்டா கிராமத்தில் சமுதாயத்தின் மிகக் கீழ்ப்படியிலிருக்கும் ஹரிஜனங்கள் யாவரும் ஒன்று கூடி "நாங்கள் உழைத்து வாழ்வதற்கு எண்பது ஏக்கர் நிலம் கொடுங்கள்" என்று கேட்டார்கள்.

யாரை! நிலம் படைத்த பிரமுகரையா! அரசாங்க அதிகாரியையா! அரசியல் வாதியையா! பதவிப் பித்துப் பிடித்தவரையா!
—அல்ல.

ஒரு உடைமையுமில்லாத ஒருவரைக் கேட்டனர். சர்க்கார் உத்தியோகமோ, கட்சியில் உத்தியோகமோ, தனி நபர் ஸ்தாபனங்களில் உத்தியோகமோ, பொது ஸ்தாபன உத்தியோகமோ எதுவுமல்லாது சென்ற முப்பத்தைந்து ஆண்டுகளாக ஈசுவர தியானத்திலும், கிராம சேவையிலும் தம்மை ஈடுபடுத்தி வேலை செய்து வரும் ஒருவரைக் கேட்டனர். உள்ளத்தில் பற்றுதல் என்பது இம்மியும் இன்றிப் பிறருக்கு இதைச் செய்ய வேண்டும், அதைச் செய்யக் கூடாது என்ற விருப்பு வெறுப்பு அற்ற மிக உயரிய நிலையில் மனத்தை என்றும் வைத்துக் கொண்டிருக்கும் ஒருவரை எண்பது ஏக்கர் நிலம் கொடுக்கும்படி கேட்டனர்.

அவர் யார் என்று சொல்லாமலே தெரியும், விநோபா அடிகள்தான் என்று.

அவர் அந்த இடத்துக்கு நடந்து வந்திருந்தார். அதுவும் எங்கிருந்து! தமது பரமதாம் ஆசிரமத்திலிருந்து ஹைதராபாதுக்கு நடந்து வந்து அங்கிருந்து அந்தக் கிராமத்துக்கு வந்திருக்கிறார்.



கிராமவாசிகளுடன் விநோபா அடிகள்.

இப்படி அந்த ஏழை மக்கள் கேட்கவும் விநோபா அடிகளின் நெஞ்சம் நெகிழ்ந்தது. ஆனால் அவரால் என்ன செய்யக் கூடும். சற்று நேரம் யோசித்தார். அந்த ஏழைகள் கூட்டத் திடையே வேறு சிலரும் வந்திருந்தார்கள். அவர்கள் நிலம் படைத்தவராக இருக்கலாம் என்று அவருக்குத் தோன்றியது.

அவர் நிலம் படைத்த பிரபுக்களின் உள்ளத்து உயரிய பண்பைச் சற்றுத் தட்டி எழுப்பினார். "உங்கள் அண்டை அயலிலிருக்கும் இந்த ஏழைகளுக்கு உதவக் கூடாதா!" என்று கேட்டார்.

உடனே ஒரு இளம் ஜமீன்தார் நூறு ஏக்கர் நிலம் தருவதாக முன் வந்தார்.

இதை மிக்க நன்றியுடன் ஹரிஜனங்கள் பெற்று இனி அந்த நிலத்தில் உழைத்துப் பாடுபட்டுப் பிறரிடம் உதவிக்குக் கை நீட்டாமல் வாழ்வதாக வாக்களித்தனர்.

இந்த அற்புதக் காட்சியைக் கண்ட விநோபா அடிகளின் உள்ளம் நெகிழ்ந்து விட்டது. இதில் கடவுளின் திருவுள்ளம் பிரதிபலிக்கிறது என்பதை யுணர்ந்தார். நிலம் படைத்தவர்களிடையே இத்தகைய அற்புத மனமாற்றத்தை ஏற்படுத்த ஆண்டவன் தம்மை ஒரு கருவியாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார் என்பதை அறிந்தார். இந்தப் புதிய லட்சியத்துக்காகப் பாடுபட அன்றிரவே உறுதி பூண்டார். மறுநாள் காலையே இப் பணியில் ஈடுபடப் புறப்பட்டு விட்டார். அன்றிலிருந்து இன்றுவரை தினம் இப் பணியிலீடுபட்டு வருகிறார். இப்படிச் சுப வேளையில் ஆரம்பிக்கப்பட்ட இந்த பூதான இயக்கம் வெற்றிப் பாதையில் முன்னேறிக் கொண்டே இருக்கிறது.

அது கங்கையைப் போல் அகன்று கம்பீரமாக இன்று நாட்டில் பாய்ந்து வருகிறது. கங்கையைப் போலவே இதிலும் பல பல உப நதிகள் சேரத் தொடங்கி விட்டன!

* * *

தெலுங்கானாவில் ஐம்பத்தொரு நாட்கள் சுற்றுப் பிரயாணம் செய்தார். ஐம்பத்தொரு கிராமங்களில் தங்கி யிருந்தார். அவை தவிர, செல்லும் வழியில் இருநூறு கிராமங்களைக் கடந்து சென்றார். ஐந்நூறு கிராமச் சண்டைகளைத் தீர்த்து வைத்தார். இரண்டு லட்சம் ஜனங்கள் அப் பிரதேசத்தில் விநோபா அடிகளின் பொன்னுரைகளைச் செவி மடுத்தனர். 12,201 ஏக்கர் நிலத்தை ஏழைகளுக்கு வழங்கத் தானமாகப் பெற்றார்.

தெலுங்கானா அன்றிருந்த சூழ்நிலையையும் அவர் சாதித்துள்ள சாதனையையும் நினைத்துப் பாருங்கள். ஆனால் விநோபாவே வாரங்கல்லில் கூறியதையும் பாருங்கள்:

"நமது சமுதாய வாழ்வில் எதற்கெல்லாமோ தவறாக மதிப்புக் கொடுத்து விடுகிறோம். அந்த எண்ணங்களை யெல்லாம் மாற்றிப் புது லட்சியம் உண்டாக்கித் தரவே பணக்காரர்களை ஏழைகளுக்கு நிலதானம் புரியும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். பூதானம் என்பது அஹிம்சையைத் தினப்படி வாழ்க்கையில் பயன் படுத்தும் முயற்சியேயாகும். இவ் வியக்கத்தைச் செய்பவன் ஆண்டவன்தான். இதற்குக் கருவியாக என்னை அமைத்தான். ஆம், நிலம் கொடுப்பவர்களையும் பெறுபவர்களையும் போலவே நானும் இவ் வியக்கத்தில் ஒரு கருவி மாத்திரந்தான்!" என்று கூறினார்.

* * *


ஜூன் 27-ம் தேதி விநோபா தமது பௌனார் ஆசிரமத்துக்குத் திரும்பினார். மழைக் காலமாக இருந்ததால் அங்கு இரண்டு மாதம் தங்கும்படி நேர்ந்தது. அந்தச் சமயத்தில் அவருக்குப் பண்டித ஜவாஹர்லால் நேருவிடமிருந்து தில்லிக்கு வருமாறு அழைப்பு வந்தது. ஆம், அரசாங்கத்தாருடன் முதல் ஐந்தாண்டுத் திட்டம் சம்பந்தமாகக் கலந்து பேசத்தான் அழைத்திருந்தார். விநோபா அந்த அழைப்பை ஏற்று, நடந்தே தில்லிக்குப் போவது என்று தீர்மானித்தார். பௌனாரிலிருந்து 1951-ம் ஆண்டு செப்டம்பர் 12-ம் தேதி புறப்பட்டார். 15-ம் தேதி நாகப்பூரை அடைந்தார். அங்கு, "கடவுள் என் தேகத்தில் நடக்கும் சக்தி விட்டு வைத்திருக்கும் வரை நான் இந்தத் தேசத்தில் நடந்து யாத்திரை செய்தே நிலமில்லாதவர்களுக்காக நிலம் யாசிக்கப் போகிறேன்" என்றார்.

இன்னொரு இடத்தில், "இன்றைக்கு நிலம் கொடுக்காமலிருப்பவர்கள் நாளை நிச்சயம் கொடுக்கப் போகிறார்கள். அவர்களால் நிலத்தைக் கொடுக்காமலிருக்க முடியாது. இந்த பாரத நாட்டில் என் நில கோரிக்கையை மறுக்கக் கூடியவர் ஒருவரும் இல்லை" என்று அழுத்தமாகக் கூறினார். [இன்னும் வரும்]




எங்கு பார்த்தாலும் கோடக் ஸ்னப் ஷாட்டுக்கு அருமையான சந்தர்ப்பம் உங்களுக்கு கிடைக்கும்


கவனித்தீர்களேயானால், நீங்கள் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளத் தகுதியான விசேஷங்கள் ஒன்றல்லது ஒன்று தினந்தோறும் ஒவ்வொரு ஆண்டும் நிகழ்கின்றன. 'கோடக்' ஸ்னப்புகள் மூலம் தவறாமல் அவைகளை நீங்கள் சுலபமாக என்றென்றும் நினைவு படுத்திக்கொள்ளவும் முடியும். எங்கு செல்வதாயினும், உங்கள் காமிராவும் போதுமான அளவு 'கோடக்' பிலிமும் கையிலிருக்கட்டும்.



வெரிக்ரோம்: வெளிக்காட்சிகளை, சரியான வெளிச்சத்தில் எந்த காமிராவைக்கொண்டும் எடுக்க உகந்தது.



ப்ளஸ்-X. விளக்கமான பெரிய என்லார்ஜ்மெண்டுகள் தாங்கும் நேர்த்தியான படங்கள் எடுக்க சிறந்தது



சூப்பர்-X X: துரிதமான செயல் காட்சிகளுக்கும், மங்கிய வெளிச்சத்திலமைந்து வீட்டினுள் படம் பிடிக்கவும் இன்றியமையாதது.

ஒவ்வொரு வகைப் படத்திற்கும் உகந்த ஒரு 'கோடக்' பிலிம் கிடைக்கும்

கோடக் லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது)
பம்பாய் - கல்கத்தா - டில்லி - மதராஸ்



ஆற்றங்கரையினிலே

பேராசிரியர்: ரா. பி. சேதுப்பிள்ளை

32. காஞ்சி மாநகரம்

தமிழ் நாட்டிலே பண்டைப் பெருமை வாய்ந்தது தொண்டை நன்னாடு. இந் நாட்டில் பாலாறு வளம் சுரக்கும்; பண்பாடு தலை சிறக்கும்.

"வேழம் உடைத்து மலைநாடு, மேதக்க
சோழ வளநாடு சோறுடைத்து—
பூழியர்கோன்
தென்னாடு முத்துடைத்து, தெண்ணீர்
வயல் தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து"

என்று பாடினார் பல நாடு கண்ட பெருங் கவிஞர்.

சான்றோர் பலர் தொண்டை நாட்டிலே தோன்றினர். வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து, வான்புகழ் கொண்ட நாடு தொண்டை நன்னாடே! முதல் ஆழ்வார் மூவரையும் ஈன்ற பெருமையுடையதும் இந்நாடே! தொண்டர் சீர் பரவிய குன்றை முனிவராகிய சேக்கிழாரைத் தந்ததும் இந்நாடே!

இவ்வாறு சான்றோர் பலரை ஈன்றெடுத்த தொண்டை நாட்டில் நெடியோன் குன்றமாகிய திருவேங்கடம் உண்டு; கண்ணப்பன் பணி செய்த காளத்தி மலை உண்டு; தமிழ் முருகன் அருள் புரியும் தணிகை மலை உண்டு; களிறும் பிடியும் வலஞ் செய்து வணங்கும் கழுக்குன்றம் உண்டு. மாநிலம் கண்டு மகிழும் கலைக் கோயில்களை உடைய மாமல்லபுரம் உண்டு. வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர் துறந்த வீரப் பெருமக்கள் வாழ்ந்த பழையனூரும் உண்டு. இன்னும் தென்னாட்டின் அணிகலனாய், தமிழகத்தின் தலைநகராய்த் திகழும் சென்னை மாநகரமும் உண்டு.

இத்தகைய நன்னாட்டில், வேகவதியாற்றின் கரையில் வீற்றிருக்கின்றது காஞ்சி மாநகரம். வட நாடும் தென்னாடும் வணங்கி ஏத்தும் இவ் வள நகரம் ஆதியில் தொண்டைமான் இளந்திரையன் என்னும் குறுநில மன்னனால் ஆளப்பட்டது என்று பழைய ஆற்றுப் படையொன்று அறிவிக்கின்றது. இளந்திரையன் வறியவரை ஆதரித்த வள்ளல்; புலவர்களைக் காத்த புரவலன்; வேளாண்மையைப் பேணி வளர்த்த வேந்தன்; காடு மேடுகளை வெட்டித் திருத்தி நாடு நகரங்கள் ஆக்கிய காவலன். தொண்டை நாட்டில் இன்றளவும் பயிர்த் தொழிலுக்குப் பயன் படுகின்ற தென்னேரி என்னும் ஏரி இம் மன்னன் பெயர் தாங்கி நிற்கின்றது. திரையன் ஏரியே தென்னேரி என மருவிற்று. திரைய மங்கலம் என்ற ஊரும் காஞ்சி மாவட்டத்தில் உண்டு.

காஞ்சிபுரத்தைச் செப்பம் செய்து கடிநகர் ஆக்கினான் கரிகாற் சோழன் என்னும் திருமாவளவன். காஞ்சி நகரைச் சுற்றி நெடியதோர் மதில் எடுத்து, நன் மக்களை அங்கு குடியிருத்திய பெருமை அம்மன்னனுக்கே உரியதாகும்.

"என்றும் உள்ளஇந் நகர்கலி யுகத்தில்
இலங்கு வேல்கரி காற்பெரு வளத்தோன்
வன்திறல் புலி இமயமால் வரைமேல்
வைக்க ஏகுவோன் தனக்கிதன் வளமை
சென்று வேடன்முன் கண்டுரை செய்யத்
திருந்து காதம்நான் குட்பட வகுத்து
குன்று போலுமா மதிற்புடை போக்கிக்
குடியி ருத்திய கொள்கையின் விளங்கும்"

என்று பாடினார் சேக்கிழார் பெருமான்.

மதில் சூழ்ந்த இம்மாநகரின் அழகினைக் கண்டார் ஒரு கவிஞர்; "மயில் போன்ற மணி நகர்" என்று பாராட்டி மகிழ்ந்தார்.

"ஏரி இரண்டும் சிறகா எயில்வயிறாக்
காருடைய பீலி கடிகாவாச் - சீரிய
அத்தியூர் வாயா அணிமயிலே போன்றதே
பொற்றோரான் கச்சிப் பொலிவு"

[எயில் - மதில்; கச்சி - காஞ்சிபுரம்]

என்பது பெருஞ் சித்திரனுர் வாக்கு. காஞ்சியம்பதி ஓர் அழகிய மயில் போன்றது. நெடு மதில் அம்மயிலின் உடல்; இரு மருங்கும் அமைந்த ஏரி அதன் சிறகு; அத்தியூர் அதன் வாய்; அடவியே அதன் தோகை என்பது இப் பாட்டின் கருத்து.


இப்போது சின்னக் காஞ்சி என வழங்கும் பகுதியே அத்தியூர் என்று முன்னுளில் அழைக்கப் பெற்றது. அத்தியூரில் அமர்ந்த பெருமாளைப் பாடியுள்ளார் ஆதி ஆழ்வார்களுள் ஒருவர்.

"என்நெஞ்சம் மேயானென் சென்னியான்
தானவனை
வன்னெஞ்சம் கீண்ட மணிவண்ணன்—
முன்னம்சேய்
ஊழியான் ஊழி பெயர்த்தான் உலகேத்தும்
ஆழியான் அத்தியூ ரான்"

என்று பாடினுர் அவ் ஆழ்வார். காஞ்சி மாநகரை 'மாமதிற் கச்சி' என்று தேவாரம் பாடிற்று.

இந்நகரில் வாழ்ந்த ஆன்றோர்களில் ஒருவர் அறவண அடிகள். அவர் புத்த சமயத்தைச் சார்ந்தவர்; மாசற்ற மனத்தினர்; மாதவ முனிவர். "அல்லவை கடிந்த அறவண அடிகள்" என்று மணிமேகலைக் காவியம் அவரைப் போற்றுகின்றது. கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்த இவ் அடிகள் முதுமையுற்ற நிலையில் காஞ்சி நகரம் போந்து தவம் புரிந்திருந்தார். அங்கு வந்தடைந்த மணிமேகலையின் தகுதியறிந்து புத்த சமயக் கொள்கையை ஐயந்திரிபற அறிவுறுத்தினுர். இவ்வண்ணம் துறவுள்ளம் வாய்ந்த தூயோரைத் தவநெறியில் உய்த்த அடிகள் தங்கியிருந்த இடம் "அறவணன் சேரி" என்று பெயர் பெற்றது. காஞ்சிபுரத்தில் இன்று 'அறப்பணஞ் சேரி' என்று அப் பெயர் மருவி வழங்குகின்றது.

சீன நாட்டு நல்லறிஞர் ஒருவர் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர்





தொண்டை நாட்டுக்கு வந்தார். காஞ்சி புரத்தைக் கண்டார். மக்களின் வாழ்க்கையைப் பற்றியும் மதங்களின் நிலைமையைப் பற்றியும் சில குறிப்புக்கள் எழுதிப் போந்தார். கல்வி கேள்விகளிற் சிறந்தவர் வாழும் நகரம் காஞ்சிபுரம் என்றும், வாய்மை நெறி வழுவாத மக்கள் அங்கு வாழ்கின்றனர் என்றும் பாராட்டியுள்ளார் அவ் அறிஞர். இந்நகரிற் பிறந்த தருமபாலர் என்னும் தத்துவ ஞானியை வடநாட்டார் வருக என்று அழைத்து "நாளந்தாப் பல்கலைக் கழகத்தின்" தலைவராக்கிய செய்தியும் அவர் குறிப்பிலே காணப்படுகின்றது.

சைவமும் வைணவமும், சமணமும் சாக்கியமும் தங்கு தடையின்றிக் காஞ்சி மாநகரில் நிலை பெற்றிருந்தன. இந்நகரில் அரசு வீற்றிருந்த பல்லவ மன்னரிற் சிலர் சமண சமயத்தை ஆதரித்தனர். ஆயினும் காலடைவில் சைவமும் வைணவமும் வளர்ந்து வலுப் பெற்றன; சமணமும் சாக்கியமும் தளர்ந்தன. இன்றும் சமண மதத்தின் குறிகளும் அடையாளமும் காஞ்சி மாநகரில் உண்டு. அந்நகரைச் சேர்ந்த திருப் பருத்திக் குன்றத்தில் சமணர்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அங்கே பல்லவ மன்னனால் கட்டப்பட்ட பழமையான திருக்கோயில்களும், சமண முனிவர்க்கு ஒளி நெறி காட்டிய குரவ மரமும், ஆன்றோர் ஐவரை அடக்கம் செய்துள்ள "அருணகிரி மேடு"ம் சென்ற காலத்தின் சிறப்பினை ஒருவாறு உணர்த்தும் சின்னங்களாகும்.

'சமண காஞ்சி' என்று பெயர் பெற்றுள்ள திருப்பருத்திக் குன்றத்தில் அகளங்கன் என்ற முனிவர் ஒருவர் வாழ்ந்தார். குரவ மரத்தின் கீழிருந்து கடுந்தவம் புரிந்து மாற்றாரை வாதில் வெல்லும் ஆற்றல் பெற்றார். பல்லவ மன்னனின் ஆதரவு பெற்று சாக்கிய முனிவர்களை வாக்குவாதத்திற்கு அறைகூவி அழைத்தார். விறுவிறுப்பாக நிகழ்ந்த வாதத்தில் சாக்கிய முனிவர் தோற்றார்; அகளங்கன் வெற்றி பெற்றார். அரசன் ஆணைப்படி சாக்கிய மதத்தார் தமிழ் நாட்டை விட்டு அகன்றார். வெற்றி பெற்ற அகளங்க முனிவரை இன்றும் சமண காஞ்சியில் வாழும் மக்கள் பாராட்டிப் போற்றுகின்றார்கள். (தொடரும்)







உங்கள் பேனா எப்பொழுதும்
சிறப்பாக எழுத



பார்க்கர்

க்வின்க்

உபயோகியுங்கள்!

உங்கள் பேனாவிற்கு பிரத்யேகமாக க்வின்க் மசியையே உபயோகித்து வந்தால், வீண் தொந்தரவுகளைத் தவிர்க்கலாம். க்வின்கில் அடங்கியுள்ள ஸால்வ்-X என்ற விசேஷ பொருள் உங்கள் பேனா எழுதிக் கொண்டிருக்கையிலேயே அதை சுத்தமாக்குகிறது . . . பேனா அடைபடுவது, மசி பசைபோல் சளிக் கொள்வது, திராவக அரிப்பினால் சேதம் ஏற்படுவது முதலியவற்றை தடுக்கிறது. பார்க்கர் க்வின்க் 7 வசீகரமான நிறங்களில் கிடைக்கும்.

ஸால்வ்-X

அடங்கிய மசி
இது ஒன்றே




விலை ரூ. 1/-

பார்க்கர் பென் கம்பெனி (இந்தியா) லிட்.,
த. பெ. 51, மதராஸ் 1.

ஏக விநியோகஸ்தர்கள்: பார் & கம்பெனி லிமிடெட்,
டேர் ஹவுஸ், மதராஸ் 1.

PKQ. 936



அத்தியாயம் 40

சோதனையின் ஆரம்பம்

நாம் கவலைப்படுவதனால் ஏதேனும் பயன் ஏற்படுவதாக இருந்தால் உலகில் எத்தனையோ விஷயங்கள் சரியாக நடக்குமே. நான் கவலைப்பட்டு உருகிய விஷயங்கள் எத்தனையோ தாறுமாறாக நடந்தன.

அன்று ராஜாராம் கவலைப்பட்டதும் பயனில்லாமல் போயிற்று. ஆனால் அவர் கவலைப்பட்டது எவ்வளவு சரியான விஷயம் என்பது பின்னால்தான் எனக்குத் தெரிய வந்தது. கவலைப் படுவதற்கும் புத்திசாலித்தனம் வேண்டும். சிலர் வேண்டாததற் கெல்லாம் அநாவசியமாகக் கவலைப் படுவார்கள்.

அன்று சுகவரமூர்த்தி வராமல் போகவே எனக்கு ஒருவித நிம்மதி தான் ஏற்பட்டது. ராஜாராம் கவலைப்பட்டது அநாவசியம் என்று தோன்றிற்று. 'நீ செய்தது தவறு' என்று ஒருவர் திரும்பத் திரும்பச் சொன்னால் யாருக்குத்தான் பிடிக்கும்?

கடைசியில் எனக்கு அவருடைய பேச்சு அலுத்துப் போய், "போதுமே! அப்படிக் கோபம் வந்தால் வரட்டும். எனக்கு அதைப் பற்றி அக்கறை இல்லை. அவரைப் பார்க்காமலிருப்பதே எனக்கு நிம்மதியாக இருக்கிறது. அவருடன் மறுபடியும் பேசியிருந்தால் குற்றம் செய்த மாதிரி மனம் அடித்துக் கொள்ளும். கடவுள்தான் என் பக்கம் இருந்து காப்பாற்றினார். நீங்கள் கவலைப்பட்டது போதும். இனிமேல் கொஞ்சம் ஓய்வு எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டு என்னுடைய அறைக்குச் சென்று படுத்துக் கொண்டேன்.

வள்ளி ஒரு பக்கத்தில் தூங்கிக் கொண்டிருந்தாள். கவுண்டரின் பத்தினி இன்னும் வேலையை முடித்துக் கொண்டு படுக்க வரவில்லை. நான் வள்ளியைப் பார்த்துக் கொண்டே சிந்தனையில் ஆழ்ந்தேன்.

வள்ளியைப் பார்த்தபோது மீராவின் நினைவு வந்தது. 'என்ன அழகான குழந்தை? என்னிடம்தான் எவ்வளவு ஒட்டுதலாக இருந்தாள்? அவளைப் போலவே எனக்குச் சொந்தமாக ஒரு குழந்தை... ஆமாம். அதைப் பற்றி நினைத்து என்ன பயன்? ரங்கதுரைதான் அடியோடு மறந்துவிட்டுச் சுலோசனாவைச் சுற்றுகிறாரே. என்ன அதிசயம்? மனிதர்கள் எல்லோருமே இப்படித்தானே? நானும் இவ்வளவு சஞ்சல புத்தியுடன் இருக்கிறேனே? இப்போது இல்லை. உண்மைதான். ஒரு வேளை சூழ்நிலை காரணமாக என் உள்ளமும் மாறிவிடுமோ? கடவுளே! எனக்கு ஒரு சுகமும் வேண்டாம். கொடுத்த செல்வத்தையெல்லாம்

திரும்ப எடுத்துக் கொண்டு விடுங்கள். என்ன சோதனை வேண்டுமானாலும் செய்யுங்கள். ஆனால் என் மனம் மட்டும் இன்றுபோல் என்றும் ஸ்படிகம் மாதிரி பரிசுத்தமாக இருக்க அருள் புரியுங்கள்!' என்று எண்ணினேன். இப்படி என் மனத்தையே நான் அடிக்கடி சோதனை செய்து, இறைவனை நினைத்துப் பரிசுத்தமாக்கும்படி வேண்டிக் கொள்வது வழக்கம். அதனால்தான் நான் பிறகு ஏற்பட்ட பல சோதனைகளைத் தைரியமாகத் தாங்க முடிந்தது.

அன்று நான் இறைவனைச் சோதனை செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டதாலோ என்னமோ அந்தச் சோதனை விரைவில் ஏற்பட்டது.

இரண்டாவது படமான "அன்பின் சக்தி" வெளியாகி ஓட ஆரம்பித்து விட்டது. மிக நன்றாக ஓடுமென்று சீக்கிரத்தில் தெரிந்து விட்டது. இரண்டு வாரங்கள் படத்துக்குக் கூட்டம் குறையவில்லை என்று கண்ட பிறகு என்னுடைய சின்னஞ் சிறு இல்லத்தை நோக்கி மறுபடியும் பத்திரிகையாளர்களும், பட விநியோகஸ்தர்களும், பட முதலாளிகளும், சினிமா நடிகர்களும், டைரக்டர்களும், விசிறிகளும் படையெடுக்கத் தொடங்கினர். 'ஐயோ! இந்த முற்றுகை ஓயாதா?' என்று தோன்றிக் கொண்டே இருக்கும்.

நான் வசித்துக் கொண்டிருந்த கோயமுத்தூர் வீட்டில் இடம் குறைய இடம் இருந்தது. மாடி வெறும் மொட்டை மாடிதான். ராஜாராம் வந்த பிறகு மொட்டை மாடியில் கொட்டகை போட்டார். அவர் அநேகமாகக் கொட்டகையில் தான் இருப்பார். கவுண்டரும் மாடியில்தான் இரவில் படுத்துக் கொள்வார்.

ஒரு நாள் பிற்பகல் மூன்று மணிக்கு நான், கவுண்டர், ராஜாராம் மூவரும் மாடிக் கொட்டகையில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தோம்.

நான் சென்னைக்குப் போக வேண்டும் என்று அவர்களிடம் வற்புறுத்திக் கூறிக் கொண்டிருந்தேன். ரங்கதுரையை மறுபடியும் சந்திக்கும்படியான சந்தர்ப்பம் சென்னையில் தானே ஏற்பட முடியும்? இருவரும் அதற்கு ஆட்சேபணை சொல்லிக் கொண்டிருந்தார்கள். அதனால் எனக்கு அவர்களிடம் அளவற்ற ஆத்திரமும் கோபமும் பொங்கிக் கொண்டு வந்தன.

"நீங்கள் வரா விட்டால் போங்கள். நான் இன்றிரவே தனியாகப் போய் விடுகிறேன்" என்றேன்.

ராஜாராம், "தனியாகப் போய் ஈசுவர மூர்த்தியிடம் மாட்டிக் கொள்ளவா?" என்று கேட்டார்.

அதற்குக் கவுண்டர், "குழந்தை ஏதோ வருத்தத்தில் சொல்கிறாள். நீங்கள் அதைப் பெரிசு பண்ணுகிறீர்கள். ஏம்மா? உனக்கு அப்படிப் போக வேண்டுமென்றால் எல்லாருமாகவே போய் விடலாம். எனக்கு ஒரு கவலை தான். அங்கே ஒன்றும், இங்கே ஒன்றுமாக இரண்டு குடித்தனங்கள் நடக்கிறால் இரட்டைச் செலவு ஆகிறதே என்றுதான் பார்த்தேன்" என்று கூறினார்.

"நான் அப்படிச் சொல்லவில்லையே, தாத்தா! வள்ளி, அம்மா இருவரையும் அழைத்துக் கொண்டு போய் விடுவோம், அங்கேயே இருப்போம் என்று தான் சொல்லுகிறேன்."

"இப்படி எதையாவது சொல்கிறாயே இந்து! உன் கதையை அடுத்த படியாகப் படம் எடுக்க ஏற்பாடு செய்து வருகிறார்கள். இந்தச் சமயத்தில் சென்னைக்குப் போய் உட்கார்ந்து கொண்டு என்ன செய்வது?" என்று ராஜாராம் கேட்டார்.

"அப்படி என் கதையைப் படமெடுக்க வேண்டுமென்றால் இவர்கள் சென்னைக்கு வரட்டும். நான் கண்டிப்பாய்ப் போயே ஆக வேண்டும்."

அந்தச் சமயத்தில் மாடிப் படிக் கதவின் அருகில் ஒரு மனிதர் நின்றார். ஒரு கணம் தயங்கி விட்டுப் பிறகு புன்னகையுடன் நமஸ்காரம் செய்து கொண்டே கொட்டகையின் உள்ளே வந்தார். பிறகு ராஜாராமைப் பார்த்து, "நான் சென்னையிலிருந்து வருகிறேன். என் பெயர் ஸ்ரீகாந்தன். தாங்கள் என்னைப் பற்றிக் கேள்விப் பட்டிருக்கலாம்" என்றார்.

ராஜாராம் முகத்தில் ஏற்பட்ட கேள்விக் குறியைப் பார்த்து விட்டு, "நான் சென்னையில் உள்ள ஸ்ரீதேவி பிக்சர்ஸ் கம்பெனியில் டைரக்டராக இருக்கிறேன். அமர தாராவைப் பார்க்க வந்தேன்" என்று கூறினார்.

ராஜாராம் அப்போதுதான் விழித்துக் கொண்டவர்போல், "உட்காருங்கள். உட்காருங்கள்" என்று உபசார வார்த்தைகள் கூறினார்.

ஸ்ரீகாந்தனுக்கு வயது நாற்பது இருக்கலாம். புத்திசாலியாக இருக்க வேண்டுமென்று தோன்றியது. அன்று நாங்கள் மூவரும் மாடியில் இருந்தபடியால் யாரும் அவர் வந்ததைக் கவனிக்கவில்லை. அவரை அன்று சந்திக்க நேர்ந்ததை ஒரு அதிர்ஷ்டமென்றுதான் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் என் மனோபீஷ்டம் நிறைவேறியே இருக்காது.

சற்று நேரம் ஏதேதோ பேசிவிட்டுக் கடைசியில் ஸ்ரீகாந்தன், "நாங்கள் ஒரு புதிய படம் எடுப்பதாக இருக்கிறோம். அதில் தங்களைக் கதாநாயகியாக நடிக்கச் செய்ய வேண்டுமென்பதுதான் எங்கள் உத்தேசம்" என்றார்.

"படம் எங்கே எடுக்கப் போகிறீர்கள்?" என்று நான் கேட்டேன்.

"சென்னையில் தான் எடுக்கப் போகிறோம். எங்களுக்குச் சொந்த ஸ்டுடியோவும் இருக்கிறது. உங்களுக்கு ரொம்ப வசதியாக இருப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் நாங்கள் செய்து தருகிறோம்" என்றார்.

நான் உடனேயே அந்தப் படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டு விட வேண்டும் என்று தீர்மானித்து விட்டேன். இப்போது வேலையில்லாமல் சென்னையில் உட்கார்ந்திருக்கக் கூடாது என்று ராஜாராம் தடை சொல்ல முடியாதல்லவா?

"சுமார் எவ்வளவு தருவார்கள்?" என்று கேட்டார் ராஜாராம்.

"ஐம்பதினாயிரம் தருவதாகப் பேச்சு என் காதில் விழுந்தது. நான் சொன்னேன் என்று வெளியில் தெரிய வேண்டாம்" என்றார் ஸ்ரீகாந்தன்.

எனக்கு அதிசயமாக இருந்தது. 'ஒரு படத்துக்கு ஐம்பதினாயிரமா?' என்று எண்ணிக் கொண்டே கவுண்டரைப் பார்த்தேன். அவரும் பிரமித்துப் போயிருந்தார்.

ராஜாராம் நிலைமையைச் சமாளித்தார். "அமரதாராவுக்கு எழுபது எழுபத்தையாயிரம் தருவதாகப் பல ஒப்பந்தங்கள் வந்தன. ஆனால் அவர் தமக்கு நடிப்பைத் தொழிலாகக் கொள்ளும் எண்ணம் இல்லை என்று மறுத்து விட்டார். இதைப்பற்றியும் யோசித்துத்தான் சொல்ல முடியும்" என்று கூறினார்.

"யோசித்துச் சொல்லுங்கள். நான் நாளை வருகிறேன்" என்று சொல்லிவிட்டு ஸ்ரீகாந்தன் புறப்பட்டார். கவுண்டர் எழுந்து நன்றாகக் குனிந்து அவருக்கு வணக்கம் தெரிவித்தார்.

அவர் சென்ற உடனேயே என் தீர்மானத்தை ராஜாராமிடம் அறிவித்தேன். "இந்தப் படத்தில் நடிக்க நான் ஒப்புக் கொள்ளப் போகிறேன், ராஜாராம்!" என்றேன்.

"தெய்வம் இந்துவின் பக்கத்தில் இருக்கிறதென்று இதிலிருந்தே தெரியவில்லையா?" என்றார் கவுண்டர்.

"பழம் நழுவிப் பாலில் விழுந்தது" என்றார் ராஜாராம்.

மறுநாளே நல்ல நாளாக இருந்தபடியால் ஒப்பந்தத்தில் கையெழுத்தும் போட்டு விட்டேன்.

ஒரு நல்ல நாளில் நாங்கள் சென்னைக்குப் புறப்பட்டோம்.



அத்தியாயம் 41

எதிர்பாராத விபத்து

நாங்கள் நல்ல நாளும் வேளையும் பார்த்துக் கொண்டுதான் சென்னைக்குப் புறப்பட்டோம். ஆனால் என்னைச் சோதனை செய்ய வேண்டுமென்பது இறைவனுடைய விருப்பமாக இருக்கும்போது நான் என் செய்யும்? கோள் என் செய்யும்?

என் வாழ்க்கையில் ஏற்பட்ட கடுஞ் சோதனைகளை நான் கடவுளின் திருவுள்ளம் என்று நினைத்துத் தேறியிருக்கா விட்டால் எனக்குச் சித்தப் பிரமையே ஏற்பட்டு விட்டிருக்கும். இன்று இந்தப் பயங்கரமான சிறைச்சாலையில் தன்னந்தனியே உட்கார்ந்து என்னால் முன்பு அனுபவித்த ஹாஸ்யங்களைத் திரும்ப அனுபவித்து எழுத முடிகிறதல்லவா? எனக்கு எதிலும் வெறுப்பு வரவில்லை அல்லவா? துயரம் ஏற்படுவது உண்மைதான். ஆனால் நான் எதையும் வெறுக்கவில்லை. எனக்கு மனம் கசந்து போகவில்லை. கடவுளின் மீது நான் வைத்திருக்கும் அளவில்லாத நம்பிக்கையே எனக்குக் கலங்காமல் இத்தனை துன்பங்களையும் தாங்கும் அபார சக்தியைத் தந்து வந்திருக்கிறது.

நான் கோவிலுக்குப் போவதில்லை. எனக்குப் புகழ் வந்தால் தேங்காய் உடைப்பதாக நான் வேண்டிக் கொள்ளவில்லை. இந்தச் சிறையிலிருந்து நான் விடுதலை யடைந்தால் குங்குமத்துறை விநாயகருக்கு அபிஷேகம் செய்வதாக ராஜாராம் என்னை வேண்டிக் கொள்ளச் சொன்னார். முனிசாமி கவுண்டரோ பழனி மலைக்குப் படி வாங்கிப் போடுவதாகவும், சுமை தாங்கி கட்டுவதாகவும் வேண்டிக் கொள்ளச் சொன்னார். ஆனால் நான் பிடிவாதமாக மறுத்துவிட்டேன்.

இதனால் எனக்குத் தெய்வ நம்பிக்கை இல்லை என்று அவரும், அவர் மனைவியும் நினைக்கிறார்கள். அவர்களைவிட எனக்கு நம்பிக்கை அதிகம் என்பதை உணரமாட்டேனென்கிறார்கள். என்னால், என்ன துன்பம் நேர்ந்தாலும் 'இது அவர் திருவுள்ளம்!' என்று நினைக்க முடியும். நான் சிறைக்கு வந்து ஒன்பது மாத காலமாயிற்று. ஒரு நாள்கூட நான் இறைவனை நிந்தித்ததில்லை.

இங்கு வந்த பிறகு நாளுக்கு நாள் என் மனோதிடம் அதிகமாகி வருகிறது. முதன் முதலில் இந்தக் கதையை எழுத ஆரம்பித்த போது 'என் சித்தம் கலங்கி விடுமோ என்று பயமாக இருக்கிறது. அதற்காகத் தான் இதை எழுதுகிறேன்' என்று எழுதினேன். ஆனால் இப்போது என் அறிவு தெளிவாக இருப்பது போல் எந்தக் காலத்திலும் இருந்ததில்லை. அதிலும் ரங்கதுரையைப் பற்றியும், அவருடைய அன்பைப் பற்றியும் நான் தெரிந்து கொள்ளச் சந்தர்ப்பம் இந்தச் சிறைவாசத்தாலல்லவா கிடைத்தது? ஆகவே எனக்கு ஒரு பக்கத்தில் சந்தோஷம்தான்.


* * *

நான் சென்னை வந்து சேர்ந்த சில தினங்களில் எனக்கு ஏற்பட்ட சோதனையைப் பற்றியெல்லாம் சொல்லுகிறேன்.

இந்தத் தடவை ராஜாராம் இன்னும் பெரிய அழகான வீட்டை ஏற்பாடு செய்திருந்தார்.

நான் சென்னை வந்து சேர்ந்ததும் புதிய படத்தில் தீவிரமாக ஈடுபட்டேன். ராஜாராம் ரங்கதுரையைத் தேடுவதில் தீவிரமாக இறங்கினார். அவர் எதைச் செய்தாலும் திறமையோடு செய்வார் என்று முன்பே எழுதியிருக்கிறேன். இப்போது சென்னையின் 'மேப்' ஒன்று வாங்கி வைத்துக் கொண்டு அதைக் கட்டம் போட்டுப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு நாள், ஒவ்வொரு இடமென்று அலைந்து வந்தார். திரும்பி வந்தவுடன் அந்த இடத்தைக் குறித்து விடுவார். அவர் வேலை செய்யும் ஒழுங்கைப் பார்த்தாலே யாராக இருந்தாலும் திருப்தி ஏற்பட்டு விடும்.

சென்னையில் நான் நடித்த ஸ்டுடியோ சற்றுத் தொலைவில் இருந்தது. வீட்டிலிருந்து கிட்டத்தட்ட ஐந்தாறு மைல் தூரத்தில் இருந்தது. ஆயினும் ஸ்டுடியோ கார் வந்து போய்க் கொண்



ஹத்திபாயின்
தராசு மார்க்
உத்திரவாதமான
ஸ்டெய்ன்லஸ்
ஸ்டீல்
பாத்திரங்கள்
உயர்ந்தரகம்-நேர்த்தியான தயாரிப்பு
ஹத்திபாய் துள்ஸிதாஸ் அண்டு ஸன்ஸ், பம்பாய்-2

டிருந்த படியால் தனிப்பட்டு அசௌ கரியமாக இல்லை.

நான் சென்னை வந்து சேர்ந்து சுமார் ஒரு மாதம் வரையில் ஒன்றும் விசேஷ மாக நடைபெறவில்லை. ரங்கதுரை யைப் பற்றி எந்தவிதமான தகவலும் கிடைக்கவில்லை.

ஒரு நாள் திடீரென்று நடிகர் சங்கரன் சென்னை வந்து சேர்ந்தார். ஏதேனும் சினிமாவில் நடிக்கச் சந் தர்ப்பம் தேட வந்திருந்தார். தான் வீடு பார்க்கப் போவதாகவும் அது வரை எங்கிருப்பது என்று புரிய வில்லை எனவும் அவர் கூறினார். நான் கபடமில்லாமல், "இந்த வீடுதான் இவ் வளவு பெரிதாக இருக்கிறதே. நீங்க ளும் வீடு கிடைக்கும் வரை இங்கே இருக்கலாம்" என்று கூறிவிட்டேன். அவரும் சற்றுத் தயங்கி விட்டுக் கடைசியில் இருக்க ஒப்புக் கொண் டார். அவருடைய கடுகடுத்த சுபாவம் எப்படி மாறிப் போய் விட்டது என்று மட்டும் நினைத்துக் கொண்டேன்.

புதிய படம் முன்னேற ஆரம்பித்து விட்டது. எனக்கும் ஒரு மாதம் சென்ற பிறகுதான் நிம்மதி ஏற் பட்டது. புதிய ஸ்டுடியோவில் எல் லோருமே சுமாராக நடந்து கொண் டார்கள். சங்கரனும் அவருடைய ஸ்டுடியோவுக்குப் போய் வந்தார்.

இரண்டு மாதங்களுக்குப் பின் ஒரு நாள் கவுண்டர் கோயமுத்தூருக்குப் போக வேண்டிய அவசியம் ஏற் பட்டது. அவர் மனைவியும், வள்ளியும் என்னுடன் இருந்தார்கள்.

ஒரு நாள் ஸ்டுடியோவில் வெகு நேரம் வேலை செய்து விட்டு வீட் டுக்குக் கிளம்பினேன். ஸ்ரீகாந்த னுக்கு அன்று எடுக்கப்பட்ட தெல் லாம் நன்றாக இருந்தனவென்று மிக சந்தோஷம். நான் ஒருவித தொந்தர வும் கொடுக்காமல், அவர்கள் சொன்ன படி வந்ததும் போனதும் அவருக்கு ஆறுதலாக இருந்திருக்க வேண்டும். என்னிடம் உற்சாகமாகப் பேசிக் கொண்டே வந்து வழியனுப்பினார். தினமும் ராஜாராம் சீக்கிரம் வந்து விடுவார். அவர் அன்றும் ரங்கதுரை யைத் தேடத்தான் போயிருந்தார். இருட்டி வெகு நேரமாகி விட்டபடி யாலும், எனக்குச் சொல்ல முடியாத களைப்பாக இருந்ததாலும் நான் ஸ்ரீகாந்தனிடம் சொல்லி விட்டுப் புறப்பட்டு விட்டேன்.

ஸ்ரீகாந்தன் என்னைக் கார் வரையில் வந்து வழியனுப்பினார். கார் புறப் பட்டதும் நான் களைப்பினால் கண்களை மூடிக் கொண்டு சாய்ந்து கொண்டிருந் தேன். சில நிமிஷங்களுக் கெல்லாம் முகத்தில் காற்றடித்த வேகத்தினால் கார் மிக வேகமாகப் போவதாக உணர்ந்து, "அவசரமில்லை, டிரைவர்! சற்று மெள்ளப் போ. காற்று அதிக மாக இருக்கிறது. அவசரப்படாதே" என்று சொல்லி விட்டு மறுபடியும் கண்களை மூடிக் கொண்டேன். காரின் வேகம் குறைவது போலிருந்தது.

"ஆகா! என்ன சுகமான காற்று! எவ்வளவு இதமாக இருக்கிறது! அவர் மட்டும் இங்கே என் அருகில் இருந்தால் இத்தனை களைப்பு எனக் குத் தெரியுமா? உள்ளத்துக்கும், உட லுக்கும் எவ்வளவு தெம்பாக இருக் கும்? இப்படி நான் களைத்துச் சோர்ந்து போயிருப்பதைப் பார்க்கும் போது அவர் என்ன செய்வார்? ஆறுத லாகப் பேசுவாரா? பரிவுடன்...ஏன் இன்னும் வீடு வரவில்லை? புறப்பட்டு வெகு நேரமாகி விட்டாற் போலிருக் கிறதே. கார் வேறு பறக்கிறது?" நான் கண்களைத் திறந்தேன்.

கார் இருளைக் கிழித்துக் கொண்டு பறந்து கொண்டிருந்தது. நான் சற்று நிதானத்தை வரவழைத்துக் கொண்டு, "ஏனப்பா! நீ புதிய டிரைவரா? வீடு தெரியா விட்டால், என்னை வழி கேட்கக் கூடாது? எங்கேயோ போகி றாயே! காரைத் திருப்பு. நான் வழி சொல்லுகிறேன்" என்றேன்.

கார் நிற்கவுமில்லை. டிரைவர் பேச வும் இல்லை. முதல் தடவையாக எனக்கு உள்ளம் நடுங்கிற்று. 'சே! என்ன பைத்தியக்கார பயம்?' என்று நினைத்துக்கொண்டே, "ஏ, டிரைவர்! காது கேட்கவில்லை? காரைத் திருப்பு கிறாயா? இல்லையா?" என்றேன்.

காரின் வேகம் அதிகரித்தது போல் உணர்ச்சி உண்டாயிற்று. இப்போது உண்மையிலேயே எனக்கு உடல் முழுதும் நடுங்க ஆரம்பித்தது. அத்தனை காற்றடித்த போதிலும் வியர்த்துக் கொட்டியது.


"ஏய்! காரை நிறுத்துகிறாயா, இல் லையா? நிறுத்தாவிட்டால் கதவைத்

திறந்து குதித்து விடுவேன்" என்றேன். கார் 'ஓய்' என்ற ஓசையுடன் நின்றது. நான் அந்த அதிர்ச்சியில் தடுமாறி முன் நெற்றியில் இடித்துக் கொண்டேன். கதவின் பிடியிலிருந்த கை நழுவி விட்டது. அதிலிருந்து நான் சமாளித்துக் கொள்வதற்குள், நான் எதிர்பாராத ஒரு காரியம் நடந்தது. கார் மறுபடியும் வெகு வேகமாகக் கிளம்பி ஒரு பக்கம் திரும்பி ஒரு வீட்டினுள் நுழைந்து நின்றது.

"ஐயோ!" என்பதற்கு மேல் என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லை. உடலெல்லாம் பதறிற்று. டிரைவர் இறங்கிக் காரைத் திறந்தான். அதே சமயத்தில் வீட்டு வாசற் கதவும் திறந்தது. அதிலிருந்து சாக்ஷாத் ஈசுவர மூர்த்தியே வெளியில் வந்தார்.

நான் காரை விட்டு இறங்காமல் மலைத்துப் போய் உட்கார்ந்திருந்தேன். ஈசுவரமூர்த்தி காரின் அருகில் வந்து, "இறங்கு இந்துமதி! என்னுடைய விருந்தாளியாக ஒரு நாள் இருந்து விட்டுப் போகலாம் வா!" என்றார்.

"தயவு செய்து என்னை உபத்திரவம் செய்யாதீர்கள். நான் உங்களுக்கு என்ன



கெடுதல்' பண்ணினேன்? உங்களை ரொம்பவும் வேண்டிக் கொள்கிறேன். தயவுசெய்து என்னைத் திரும்பக் கொண்டுவிடச் சொல்லுங்கள்" என்று தைரியத்தையெல்லாம் சேர்த்துக் கொண்டு சொன்னேன்.

"சோமையா! இந்தப் பெண் சொன்னதைக் கேட்காது. இவளை இழுத்துக் கொண்டு போய் உள்ளே தள்ளு" என்று கோபத்துடன் கட்டளை யிட்டார் ஈசுவரமூர்த்தி.

எனக்கு அந்தக் கணத்தில் ரத்தம் கொதிக்கத்தான் செய்தது. 'சரி! இன்று நமக்குச் சாவு நிச்சயம். ஆனால் அவரைப் பார்க்காமல், என் அன்பு மாறவில்லை என்று சொல்லாமல் சாகப் போகிறேனே' எனத் தோன்றியது. அதற்



அழகான தோற்றம்
ஆரோக்யமான
வாழ்க்கை



லோத்ரா

கர்ப்பாசய ரோக நிவாரணி

கேசரி குடீரம் லிட், சென்னை-14



சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள்: சுராஜ் ஏஜன்ஸீஸ், 18, ராயப்பேட்டை ஹைரோடு
கோயமுத்தூர், பாலக்காடு, சேலத்திற்கு சோல் ஏஜண்டு: B. பாலபட்டாபி செட்டியார், கோயமுத்தூர்

குள் அந்த டிரைவர் என் அருகில் வந்தான். "என் அருகில் வராதே" என்றே பெரிதாகக் கத்திக்கொண்டே இரண்டு அடி எடுத்து வைத்தேன். பிறகு நின்றேன்.

ஈசுவரமூர்த்தி உடனே என் மணிக்கட்டை அழுத்திப் பிடித்துக் கரகர வென்று இழுத்துக் கொண்டு போய்க் கதவைத் திறந்து உள்ளே தள்ளினார். அவர் பிடித்த பிடியில் என்னால் கையை நகர்த்தக்கூட முடியவில்லை. என்னுடைய பயத்தில் கை கால்கள் மரத்துவிட்டவைபோல் தோன்றியது. நான் தள்ளப்பட்ட அறையில் மேஜை மீது ஒரு விளக்கு எரிந்து கொண்டிருந்தது. அதன் ஒளிபட்டுப் பூதாகார மாகச் சுவரில் என் நிழல் தெரிந்தது.

ஈசுவர மூர்த்தி உள்ளே வந்தார். நான் பதறினேன். நாக்கு புரள மறுத்தது. உடல் அசைய மறுத்தது. எல்லா அவயவங்களும் ஸ்தம்பித்துப் போயின. ஆனால் என் உயிர் மாத்திரம் இருக்கிறது?

"என்னைப் பார்க்க மறுத்தாயல்லவா? உன்னை வைத்து நீயே பூட்டிக் கொள்வானேன்? நானே பத்திரமாகப் பூட்டி வைக்கிறேன்" என்றார் அந்தச் சனீசுவர மூர்த்தி.

எனக்கு முதல் தடவையாக விம்மல் வந்தது. கோவென்று கதறி அழுதேன்.

"அழுது. அழுது சாகஸம் பண்ணினால் என்னிடம் ஒன்றும் பலிக்காது. இது சினிமா இல்லை, உன் நடிப்பைக் கண்டு உன்னை எல்லாரும் பாராட்டுவதற்கு!" என்றார் அவர்.

"என்னைக் கொன்று விடுங்கள். என்னைக் கொன்று விடுங்கள். ஐயோ! அம்மா நீ எங்கு போய் விட்டாய்? என்னைக் காப்பாற்ற நீ இருக்கிறாய் என்று நம்பி யிருந்தேனே? அம்மா! அம்மா! நீ ஏன் செத்துப் போனாய்?" என்று விம்மினேன்.

"அம்மா உன் அருகில்தான் இருக்கிறாள். உன் அப்பாவும் அம்மாவோடு தான் இருக்கிறான். எங்கே பயில்வான் உன்னைக் காப்பாற்றட்டும்" எனச் சிரித்தார் ஈசுவரமூர்த்தி. அவருடைய சிரிப்பு எனக்கு நாராசமாக இருந்தது.


"ஒரு அபலைப் பெண்ணை இப்படித் துன்புறுத்தலாமா? இது உங்களுக்கே சரியாகத் தோன்றுகிறதா? என்னைத் தயவுசெய்து திருப்பி அனுப்பி விடுங்கள். என்னுடைய சொத்தை யெல்லாம் உங்களுக்குத் தந்து விடுகிறேன்" என்று அவமானம் நெஞ்சை அடைக்கக் கூறினேன்.

"இந்துமதி! இப்படிப் பேசிப் பயன் இல்லை. உன் பணம் எனக்கு வேண்டாம். நான் ஒன்று சொல்லப் போகிறேன். அதன்படி நீ நடந்து கொண்டால் பிழைத்தாய். இல்லையானால் என்ன ஆகுமென்று எனக்கே தெரியாது" என்றார்.

"என்னவென்று சொல்லுங்கள்" என்றேன் நடுங்கியபடியே.

"நீ ரங்கதுரையை மறந்து விட வேண்டும். அவன் சுலோசனாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறான். அவனை நீ சந்தித்துப் பேசி மனத்தைக் கலைக்கப் பார்த்தாயோ, சொக்கையா விஷயம் அம்பலமாகி விடும். ஜாக்கிரதை! அப்படி ஏதேனும் செய்தாயானால் நான் அவனையும் சும்மா விடமாட்டேன். அதைத் தவிர என்னை நீ கல்யாணம் செய்து கொள்ளச் சம்மதிக்க வேண்டும். நீ மனப்பூர்வமாகச் சம்மதிப்பதாகச் சொன்னால் உன்னை வீட்டில் இப்போது கொண்டு விட்டு விடுகிறேன். நீ நடிக்கும் படம் முடிந்த பிறகு நமது கல்யாணத்தை வைத்துக் கொள்ளலாம். இல்லாவிட்டால் இங்கேயே நீ கிடக்க வேண்டியதுதான். அமரதாரா என்ன ஆனாள் என்று உலகம் அறியாமலேயே போய்விடும்" என்றார்.

"இந்தப் பாவியிடமிருந்து என்னைக் காப்பாற்ற யாருமில்லையே, தெய்வமே" என்று மனதிற்குள் சொல்லிக் கொண்டேன். அவரைப் பார்க்கச் சகிக்காமல் நான் கண்களை மூடிக் கொண்டேன். 'கடவுளே! என்னை இப்படிச் சோதிக்கலாமா? நீ தான் என்னை இதிலிருந்து விடுவிக்க வேண்டும். ஒரு வழி சொல்ல மாட்டீர்களா, தேவி! அம்பிகே! பராசக்தி!' என்று நினைத்தபோதே ஏதோ சத்தம் கேட்டது. கண்களைத் திறந்தேன். ஈசுவரமூர்த்தியை ஒரு முகமூடி அணிந்த மனிதர் அழுத்திப் பிடித்துக் கொண்டிருந்தார். ஈசுவரமூர்த்தி திரும்பிப் பார்த்தார். அவர் முகம் பேயறைந்த மாதிரி காணப்பட்டது. (தொடரும்)


வஸந்தத்தின்
புத்துணர்ச்சி
உங்களுக்கு
இன்றும்....என்றும்!
காஷ்மீர்பொக்கே டால்கம் பௌடர் சுத்த மனோரம்மியமே! மிக்க மிருதுவாக உங்கள் உடலில் வஸந்தநாள் காலையின் புத்துணர்ச்சியை அள்ளித் தெளிக்கிறது—உடலை ரம்மியமணத்துடனும் குளிர்ச்சியுடனும் மணிக்கணக்காக வைத்திருக்கிறது. அதிகப்படி ஈரத்தை உறிஞ்சுகிறது ... அரிப்பையும் எரிச்சலையும் தவிர்க்கிறது ... உங்கள் வசீகரத்தையும் மென்மையையும் பன்மடங் காக்குகிறது.
Cashmere Bouquet
TALCUM POWDER
காஷ்மீர்
பொக்கே
டால்கம் பௌடர்
ஆண்கள் விரும்பும் நறுமணத்துடன்
ஒரு கால்கேட்—பாமாலிவ் தயாரிப்பு
கால்கேட் 1806 முதல் தரத்துக்குப் பெயர் போனது

கௌரவம்

எஸ்.டி.எஸ்.

அசோகனின் அழுகைக் குரலும் அதைத் தொடர்ந்தாற் போல் பானுவின் கூச்சலும் கேட்கவே, ஜானகி அடுப்படியிலிருந்து வெளியே ஓடி வந்தாள். தோட்டத்தில் அவள் கண்ட காட்சி அவள் உள்ளத்தை உலுக்கியது.

அசோகன் கண்ணைக் கசக்கிக் கொண்டே, பானுமதியின் புடவைத் தலைப்பைப் பிடித்துக் கொண்டு அவள் பக்கத்தில் நின்று கொண்டிருந்தான். ராஜுவும் லக்ஷ்மியும் பானுவின் எதிரே நின்று கொண்டு மிரள மிரள விழித்துக் கொண்டிருந்தனர்; இடுப்பில் கையை வைத்துக் கொண்டு பானு அவர்கள் இருவரையும் பார்த்துக் கோபமாக இரைந்து கொண்டிருந்தாள். அவர்களுக்குச் சற்றுத் தூரத்தில் அசோகனின் விளையாட்டு மோட்டார் குப்புற விழுந்து கிடந்தது.

ஜானகியைக் கண்டதும் பானு, "ஜானகி! லக்ஷ்மியையும், ராஜுவையும் கொஞ்சம் கண்டித்து வை. அசோகனை இரண்டும் அடிக்கடி சீண்டுகிறதுகள். அழுதால் அசோகனுக்கு ஜுரம் வந்து விடுகிறது. டாக்டர் ரொம்ப எச்சரிக்கை பண்ணியிருக்கிறார்......" என்று சொல்லி விட்டு, "அசோக்! உன் சாமானை யெல்லாம் கண்டபடி தோட்டத்திலே போட்டு விட்டு வராதே. விளையாடின பிறகு, உள்ளே வரும்போது தோட்டக்காரனைக் கூப்பிட்டு உன் விளையாட்டுச் சாமான்களை யெல்லாம் எடுத்துக் கொண்டு வந்து வைக்கச் சொல்லு!" என்றாள். பிறகு அவனைப் பங்களாவுக்குள் அழைத்துச் சென்றாள். செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக் கொண்டிருந்த தோட்டக்கார முனிசாமி, குடத்தை ஒரு செடியடியில் வைத்து விட்டு, குப்புற விழுந்து கிடந்த மோட்டாரைப் பங்களாவுக்குள் எடுத்துச் சென்றான்.

ராஜுவும் லக்ஷ்மியும் கண்களில் நீர் குளம் போல் தேங்கி நிற்க ஜானகியை நோக்கி வந்தனர். பானுமதி இரைந்தபோது ரௌத்ராகாரமாய் மாறிய ஜானகியின் முகம் இப்போது குழந்தைகளின் கலங்கிய கண்களைக் கண்டதும், தாய்ப் பாசத்தைப் பிரதிபலித்தது.

இரண்டடி முன்னால் சென்று ராஜுவை அப்படியே தூக்கிக் கொண்டன அவள் கைகள். லக்ஷ்மியை வலது கையால் பிடித்துக் கொண்டு உள்ளே சென்றாள் அவள்.

சமையல் அறையை அடைந்ததும் அவள் ராஜுவைக் கீழே இறக்கினாள்.

"ஏன் ராஜு! என்ன செய்தாய் நீ!" என்று அவன் மோவாய்க் கட்டையைப் பிடித்துக் கொண்டு கேட்டாள் ஜானகி.

அவனால் பதில் சொல்ல முடியவில்லை; அதற்கு மாறாக அவன் கேவிக் கேவி அழ ஆரம்பித்து விட்டான்.

அன்னையின் இரு கரங்களும் அழும் குழந்தையை அணைத்துக் கொண்டன.

ராஜுவால் சொல்ல முடியாததை லக்ஷ்மி விவரித்தாள்.

"அசோகனின் மோட்டார் தோட்டத்திலே விட்டிருந்தது. அசோகன் உள்ளே ஏதோ செய்து கொண்டிருந்தான். நம் ராஜு அந்த மோட்டாரிலே ஏறி உட்கார்ந்து கொண்டு அதை ஓட்டினான். உள்ளே இருந்த அசோகன் 'ஏண்டா! என் மோட்டாரிலே ஏறினாய்!' என்று கத்திக் கொண்டே வெளியே ஓடி வந்தான். ராஜு இறங்குவதற்குள்ளாக மோட்டாரோடு பிடித்துக் கீழே தள்ளிவிட்டான். 'தெரியாமல் உன் மோட்டாரிலே ராஜு ஏறி உட்கார்ந்து விட்டான். இறங்கு என்றால் இறங்கி விடுகிறான். எதற்காக அவனைக் கீழே பிடித்துத் தள்ளுகிறாய்!' என்று நான் கேட்டதற்குத் தன் கையிலிருந்த பிளாஸ்டிக் ஸ்கேலினால் என்னை நாலு அடி அடித்து விட்டுத் தானும் அழ ஆரம்பித்து விட்டான்.........மோட்டாரோடு ராஜுவைக் கீழே தள்ளினதிலே ராஜுவுக்குக் காலிலே காயம் பட்டு விட்டது" என்றாள் லக்ஷ்மி, திக்கித் திக்கிக் கொண்டே.

அப்போதுதான் ஜானகி ராஜுவின் வலது காலைப் பார்த்தாள். ஒரு சிறு காயம். அதிலிருந்து ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

தாயுள்ளம் தவித்தது.

ராஜு நல்ல சூடிகையான பையன்; ஐந்து வயதுதான் ஆனாலும் எல்லா விஷயங்களிலும் அவன் மிகவும் கெட்டிக்காரன்; நல்ல புத்திசாலி; இரண்டாவது வகுப்பில் படித்துக் கொண்டிருந்தான். அவனிடத்தில் அலாதி பிரியம் ஜானகிக்கு.

அடுத்த கணம் ஜானகி 'போரிக்' பௌடரையும் தேங்காய் எண்ணெயையும் கொண்டு வந்தாள். காயத்தின்மேல், இரண்டையும் கலந்து தடவினாள். ராஜுவின் இரண்டு கன்னங்களையும் பிடித்துக் கொண்டு, "இனிமேல் அந்த அசோகனின் சாமான் எதையும் தொடாதே, கண்ணு! நாம் இருக்கும் இடத்துக்குள்ளேயே விளையாடுங்கள். அசோகன் ஜோலிக்கே போகாதீர்கள்!" என்று சொல்லி விட்டு, தகர டப்பாவிலிருந்து இரண்டு பிஸ்கோத்து எடுத்து இருவர் கையிலும் ஒவ்வொன்று கொடுத்துச் சமாதானப்படுத்தினாள்.

* * *

அவள் அந்த வீட்டுக்குக் குடி வந்து மூன்றே மாதங்கள்தான் ஆகியிருந்தன. வரும்போது அவள் நினைத்ததென்ன! வந்த பின் நடந்ததென்ன! அவள் அனுபவித்த சங்கடங்களும்—ஏளனப் பேச்சும் கொஞ்சமா, நஞ்சமா!

அவள் அங்கே வந்து இரண்டு தினங்கள் ஆகவில்லை. அன்று மாலை, பானுமதியின் கணவர் உள்ளே உட்கார்ந்து தம்மைப் பார்க்க வந்தவர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். ராஜுவும், லக்ஷ்மியும் பங்களாவினுள் சென்றவர்கள் முகத்தில் பயக்குறி தாண்டவமாட உடனே வெளியே ஓடிவந்தார்கள். அவர்களைத் தொடர்ந்து பானுவும் வெளியே வந்தாள்.

"ஜானகி! அவரைப் பார்க்க எப்பொழுதும் யாராவது நாலு பெரிய மனிதர்கள் வந்து கொண்டே இருப்பார்கள். அழுக்குச் சட்டையோடும் கிழிசல் பாவாடையோடும் இதுகளை

அங்கே அனுப்பினால் எங்களுக்கு ரொம்ப அவமானமாக இருக்கும். அவர் ரொம்ப வருத்தப்படுகிறார்" என்று சொல்லிவிட்டுப் பங்களாவுக்குள் போய் விட்டாள்.

அப்பொழுது கலங்கிய ஜானகியின் மனம் தெளிய ஒரு வாரம் ஆயிற்று.

ஜானகி மாம்பலத்தில் ஒரு போர்ஷனில் குடி இருந்த வரையில் அவளுக்காகட்டும், அவளுடைய குழந்தைகளுக்காகட்டும்; தங்கள் வாழ்க்கையை அக்கம்பக்கத்தாருடன் ஒத்துப் பார்க்கும் சந்தர்ப்பமே எழவில்லை. ஏனென்றால் அங்கு குடி இருந்தவர் அத்தனை பேரும் அவளைக் காட்டிலும் பரம ஏழைகள். ஆனால் இந்த வீட்டுக்கு வந்த பின் ......! ஏச்சோடு, பேச்சோடு, ஏக்கமும் அதிகமாகியது.

அசோகனுக்கு நிறைய விளையாட்டுச் சாமான்கள் இருந்தன. அவைகளை ராஜு ஆசையோடு பார்க்கும்போது, தன்னால் தன் குழந்தைகளுக்கு அதை யெல்லாம் வாங்கிக் கொடுக்க முடியவில்லையே என்று ஜானகியின் உள்ளம் ஆதங்கப்படும். அசோகன் நல்ல உடை உடுக்கும்போதும், அவன் பலவிதமான தின்பண்டங்களைத் தின்னும்போதும் அவனை ஏக்கத்தோடு பார்க்கும் ராஜுவின் முகத்தைப் பார்க்க முடியாமல் தவிப்பாள் ஜானகி.

ஏழைமையைத் தாங்கலாம். ஆனால் ஏச்சைத் தாங்க முடியாது; அதோடு ஏளனத்தையும் பொறுக்க முடியாது.

அன்றொரு நாள் ஞாயிற்றுக்கிழமை. பானு தன் சிநேகிதிகள் பலருக்குத் தன் பிறந்த தினத்தை உத்தேசித்து விருந்து வைத்தாள்.

மாலை ஆறு மணிக்குப் பானு ஜானகியிடம் வந்து, "இன்று பத்து பெரிய மனுஷர்கள் வீட்டுப் பெண்கள் இங்கு வருவார்கள். நீ இம்மாதிரி ஒரு பழைய புடவையை உடுத்திக் கொண்டு நின்றால், எனக்கு அவமானமாக இருக்கும். இந்தா! இந்தப் புடவையைக் கட்டிக் கொள்" என்று கையில் கொண்டு வந்த ஒரு பட்டுப் புடவையை அங்கிருந்த ஒரு நாற்காலியின் மேல் வைத்து விட்டுச் சென்றாள். ஜானகியை அவள் விருந்துக்கு அழைக்கவில்லை. ஆனால் அவள் ஏழைமையைக் குத்திக் காட்டி அவள் மனத்தில் மறையாத தழும்பு ஒன்றை ஏற்படுத்தி விட்டுப் போய் விட்டாள்.

வேறொரு நாள் வழக்கம் போல் ராஜுவும் லக்ஷ்மியும் பங்களாவினுள் சென்று விளையாடிக் கொண்டிருந்தனர். காரியாலயத்திலிருந்து வந்த பானுவின் கணவன் அவைகளை வெளியே துரத்திவிட்டுப் பானுவிடம், "இதுகளை உள்ளே விடாதே. ஆண்டிப் பசங்கள். எதையாவது தூக்கிக் கொண்டு போய்விடும்" என்றான். ஏழைமைக்கு வேறொரு அர்த்தம் அயோக்கியத்தனமா! இவ் வார்த்தைகளைக் கேட்டுப் பொருமினாள் ஜானகி. அன்று முதல் தன் குழந்தைகளைப் பங்களாவினுள் போக விடுவதில்லை அவள்.


* * *

சிந்தனைக் கயிறு அறுந்தது. வெளியே பார்த்தாள். நன்றாக இருட்டி விட்டது. ராஜுவும் லக்ஷ்மியும் படித்துக் கொண்டிருந்தனர். அவர்கள் இருவருக்கும் சாதம் போட்டாள். இருவரும் படுக்கையை விரித்துப் படுத்துக் கொண்டனர்.

அவள் சாப்பிட உட்கார்ந்தாள். சாதம் தொண்டைக்குள் இறங்க வில்லை — மனக் கஷ்டம் தொண்டையை அடைத்து விட்டது.

பங்களா கடிகாரத்தில் மணி எட்டடித்தது. வெளியோரமாக மத்தியானம் துவைத்து உலர்த்திய குழந்தைகளின் உடைகளைப் பற்றிய ஞாபகம் வரவே, அவைகளை எடுத்து வரச் சென்றாள் ஜானகி.

மாடியில் பானுவும் அவளுடைய கணவனும் ஏதோ பேசிக்கொண்டிருந்தனர்.



"பானு! நம் அசோகனுக்குச் சாதம் ஊட்டும் போதும், பால் கொடுக்கும் போதும், டிபன் கொடுக்கும் போதும் கொஞ்சம் ஜாக்கிரதையாக இரு. நம் அசோகன் எதையாவது தின்றால் ராஜு 'ஆ' வென்று பார்க்கிறான். அசோகனுக்கு உடம்புக்கு ஆகாது" என்றான் பானுவின் கணவன்.

"ஆமாம், அப்படித்தான் பண்ணணும்! ஏதோ ஒப்புக்கு ஒரு காரியம் செய்யப் போக இப்படி நிரந்தர உபத்திரவம் வந்து சேர்ந்து விட்டதே! தரித்திரங்கள்!" என்றாள் பானு.

ஜானகியின் மனம் அப்படியே வெடித்து விடும்போல் இருந்தது. பணம் இருந்து விட்டால், மீதிப்பேருக்கு உள்ளம், உணர்ச்சி இல்லை என்ற முடிவுக்கு வந்துவிட வேண்டுமா!

குழந்தைகளின் உடைகளை எடுத்துக் கொண்டு உள்ளே வந்தாள் ஜானகி. களங்கமற்ற முகத்துடன் குழந்தைகள் தூங்கிக் கொண்டிருந்தன. அதைக் கண்டதும் அவள் இரு கண்களிலும் நீர் ஆளிகளாகத் தேங்கின. ராஜுவைக் கட்டிக் கொண்டு அவன் இரு கன்னங்களிலும் ஆசை தீர முத்தமிட்டாள்.

ஜானகி வீட்டின் கதவைச் சாத்தித் தாளிட்டு விட்டு ராஜுவின் பக்கத்தில் படுத்தாள். அவள் மனக் கதவு திறந்தது.

* * *

இவ்வளவு கஷ்டங்களுக்கும் யார் பொறுப்பாளி! வேறு யார்! ஜானகியேதான்!

கண் நிறைந்த கணவனைத்தான் பெற்றிருந்தாள் அவள். அவன் சென்னையில் உத்தியோகம் பார்த்து வந்தான். வருவதைக் கொண்டு திருப்தியடைந்த ஜானகியை மகிழ்விக்க லக்ஷ்மியும் ராஜுவும் பிறந்தனர்.

சலனமற்று ஓடிக் கொண்டிருந்த ஜானகியின் வாழ்க்கையில் ஒரு புயல் அடித்தது. திடுமென அவள் கணவன் வேலை செய்து வந்த டிராம் கம்பெனியை மூடிவிடவே, அவனுக்குச் சம்பாத்தியம் போயிற்று. ஒரு வருஷத்துக்கு மேல் அவன் சென்னையிலேயே திண்டாடினான். கையில் இருந்த கொஞ்சம் ரொக்கமும், ஜானகியின் நகைகளும் தொலைந்தன.

கடைசியில் அவனுக்குக் கல்கத்தாவில் ஒரு வேலை கிடைத்தது. வேலையை ஏற்றுக் கொள்ளப் புறப்படுமுன் அவன், "ஜானு! நான் கல்கத்தாவில் போய் இடம் பார்த்து உன்னை அழைத்துக் கொண்டு போகிறேன். அதற்கு இரண்டு மூன்று மாதங்கள் பிடிக்கும். அது வரை நீ இந்த வீட்டிலேயே இரு. மாதா மாதம் உன் செலவுக்குப் பணம் அனுப்புகிறேன்" என்றான்.

அவள் மெதுவாக, "இன்று என்னைப் பார்க்கப் பானு வந்திருந்தாள்" என்றாள்.

பானுவும் ஜானகியும் ஒரே வயிற்றில் பிறந்த சகோதரிகள். ஆனால் பானுவின் அதிர்ஷ்டம் அவள் பங்களா, கார், சகல வசதிகளுடன் மயிலாப்பூரில் வசித்து வந்தாள். அவள் கணவனுக்கு நல்ல சம்பளம்.

"என்ன சொன்னாள் அவள்!" என்று கேட்டான் ஜானகியின் கணவன்.

"அவள் பங்களாவை அடுத்தாற்போல் இருக்கிறதே 'அவுட் ஹவுஸ்', அதில் என்னை நீங்கள் கல்கத்தாவுக்கு அழைத்துப் போகும் வரை இருக்கச் சொன்னாள். வாடகை ஏதும்

வேண்டாமாம். இங்கிருந்தால் மாதம் இருபத்தைந்து ரூபாய் வாடகை கொடுக்க வேண்டும். அது வீண்தானே!'' என்றாள்.

அவன் ஒன்றும் சொல்லவில்லை.

''உன் இஷ்டப்படி செய்'' என்றான்.

ஜானகி பானுவின் வீட்டுக்குச் சென்றாள். படாதபாடு பட்டாள். தன் அக்கா, அக்கா குழந்தைகள் என்ற உணர்ச்சிகள் எல்லாம் பானுவின் மனத்தில்—அவள் கௌரவத்தின் முன் மரத்து விட்டன என்பதை ஜானகி அறிந்து கொண்டாள்.

* * *

மறுநாள் தன் கணவனிடமிருந்து வந்த கடிதத்தைக் கண்டு ஜானகியின் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது.

''சௌ. ஜானகிக்கு ஆசீர்வாதம். நான் வேலை செய்யும் கம்பெனியின் சென்னைக் கிளைக்கே என்னை மாற்றி விட்டனர். நான் அடுத்த வாரம் ஞாயிறன்று சென்னைக்கு வருகிறேன். நான் நம் பழைய வீட்டுக்காரருக்கு எழுதினேன். நாம் முன்பு இருந்த இடத்தையே நமக்குக் கொடுப்பதாக அவர் எழுதியிருக்கிறார். உன் அன்புள்ள,

..........................''

இந்தக் கடிதத்தைப் படித்த குழந்தைகளும் துள்ளிக் குதித்தன.

திரும்ப ஜானகி மாம்பலத்துக்கே குடி வந்து விட்டாள்.

அன்றுமாலை கணவர் வீடு வந்ததும் ஜானகி, ''இந்த மூன்று மாசத்தில் நான் படாத பாடு பட்டு விட்டேன். பானு என்னைத் தன் அக்காவாகவே நினைத்து நடத்தவில்லை. நம் குழந்தைகளையும் ரொம்ப ஏளனமாக நடத்தி விட்டாள்'' என்றாள்.

''ஜானு! நீ உன் தங்கையின் வீட்டுக்குக் குடி போகிறேன் என்று சொன்ன பொழுதே அதனால் நீ என்னென்ன கஷ்டப்படுவாய் என்பதை நான் அறிந்துதான் இருந்தேன். ஆனால், அப்பொழுது நான் அதைச் சொல்லி இருந்தால், உன் தங்கையைக் குற்றம் சொல்வதாக நினைத்து நீ என்மேல் வருத்தப்பட்டிருப்பாய். உலக இயற்கைதானே இது! சம அந்தஸ்தில் இருந்தால்தான் உறவு. இல்லா விட்டால் இல்லை. அதுவும் கொடித்துப் போன காலத்தில் ஒரு பணக்கார உறவினரின் — அந்த உறவினர் எவ்வளவு நெருங்கினவராக இருந்தாலும் சரி — உதவியை நாடுவதோ, அவர்கள் செய்ய முன் வரும் உதவியை ஏற்றுக் கொள்வதோ விவேகமற்ற காரியம். சறுக்கி விழுந்த காலத்தில் பணக்கார பந்துக்களின் கண்ணில் படாமல் தூர ஒதுங்கி வாழ்வது தான் கௌரவம். கிட்ட நெருங்கினால் நமக்கும் மனக் கசப்பு; அவர்களுக்கும் பலவித தர்ம சங்கடங்கள்'' என்று சொல்லி இலேசாகச் சிரித்தான் அவன்.

அவன் வார்த்தைகள் எவ்வளவு அநுபவ பூர்வமானவை என்று எண்ணி, தான் செய்த தவறுக்காக மிகவும் வருந்தினாள் ஜானகி. இதோடாவது நம் கௌரவம் காப்பாற்றப் பட்டதே என்ற மகிழ்ச்சியும் அந்த நேரத்தில் அவள் மனத்தின் ஆழத்தில் இல்லாமல் இல்லை.



யார் பெருமை?

கே. ஆர். கௌசல்யா

வெய்யில் மிகவும் கடுமையாக இருந்தது. குழந்தைகளெல்லாம் பள்ளிக்கூடம் போய் விட்டபடியால் தெருவே நிசப்தத்தில் மூழ்கிக் கிடந்தது. தெரு நாய்கள் கூடத் திண்ணைகளில் படுத்து அரைக்கண் மூடிய தூக்கத்திலிருந்தன. தெருவின் குறுக்கே பறந்து கொண்டிருந்த காக்கைகள் கூடச் சப்தமின்றித்தான் பறந்து கொண்டிருந்தன. கட்டிலில் சாய்ந்த வண்ணம் தெருப் புறத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள் சுகந்தா.

கால் கொப்புளித்து விடும் போல் தகிக்கும் வெய்யிலைத் தாங்க முடியாமல் 'ஸ்...ஸ்...' என்றவாறே வந்து தன் வீட்டுப் படியேறும் பத்மாவைக் கண்டு ஓடிச் சென்று கதவைத் திறந்து 'வா' என்று வரவேற்றாள் சுகந்தா.

"கொஞ்சம் தண்ணீர் கொடு குடிக்க..." என்று முகத்தில் வழிந்த வியர்வையைத் துடைத்துக் கொண்டாள் பத்மா.

சுகந்தா கொண்டு வந்த குளிர்ந்த தண்ணீரைக் குடித்த போது அந்த நா வறட்சிக்கு அதுவே தேவாமிர்தம் போல் பத்மாவின் உள்ளத்தைக் குளிர வைத்தது.

"இப்படிப்பட்ட வெய்யிலில் புறப்படுவார்களா! அதுவும் வெறும் காலுடன் வந்திருக்கிறாயே! செருப்பு போட்டுக் கொண்டு வரக் கூடாது!" என்றாள் சுகந்தா.

"செருப்பா! காலையில் பழைய அமுதைத் தின்று விட்டுப் பகல் இடை வேளையின் போது மீண்டும் திரும்பி வந்து சாப்பிட்டு விட்டுப் போய் மறுபடியும் மாலை வெய்யிலிலேயே வீடு வந்து சேர்ந்து, இப்படி நாள் முழுவதும் வெய்யிலின் கொதிப்பிலேயே நடை போட்டுக் கன்றிப் போகும் என் குழந்தைகளின் பிஞ்சுப் பாதங்களுக்குச் செருப்பு வாங்கிப் போட வழி இல்லை எனக்கு. நான் எனக்குச் செருப்பு வாங்கிக் கொள்ளப் போகிறேனா!" என்று கலங்கிய கண்களுடன் சொன்னாள் பத்மா.

சுகந்தா—சுந்தரேசன் தம்பதிகளுக்குப் புரசவாக்கத்தில் சொந்தமாக இருந்த இரண்டு வீடுகளில் ஒன்றில் தாங்கள் இருந்து கொண்டு மற்றொன்றை வாடகைக்கு விட்டிருந்தனர். அதில் சுகந்தாவுடன் சிறு வயதில் படித்து வந்த பத்மாவும், அவள் கணவனும் குழந்தைகளுடன் நாற்பது ரூபாய்க்குக் குடியிருந்தனர். சென்னையில் வீடு தேடி அலுத்துப் போய், அந்த வீடு கிடைத்தபடியாலும், தனியாக, குடித்தனக்காரர்கள் தொல்லையின்றி இருந்தபடியாலும் அந்த வீட்டில் சற்று நிலைமைக்கு மீறிய வாடகைக்கே குடித்தனம் வந்தனர். மாதாமாதம் வரவுக்கும் செலவுக்கு மிடையே கயிறு இழுக்கும் பந்தயம் போன்ற போட்டி ஏற்பட்டு ஒவ்வொரு மாதமும் செலவின் கட்சியே வெற்றி பெற்று வரவே, மிகவும் அத்தியாவசியமான தேவைகளையே குறைத்துக் கொள்ள வேண்டி வந்தது. அப்படியும் ஏழ்மை அவர்களை அலைக்கழித்தது. கடைசியில் அந்த எண்ணம் தோன்றியது. வாடகையில் கொஞ்சம் குறைக்கச் சொல்லிக் கேட்கலாம் என்று தீர்மானித்தனர். பத்மாவுடன் சுகந்தா ரொம்பவும் இழைந்து பழகியவளல்ல. எனினும் ஓரளவு அறிமுகமான சிநேகிதியான சுகந்தாதான் வீட்டுக்குச் சொந்தக்காரியானதால் அவளிடம் தங்கள் நிலைமையைச் சொல்லி வாடகைக் குறைப்பு பற்றிக் கேட்பதாகச் சொல்லிப் புறப்பட்டாள் பத்மா.

டம்ளரை உள்ளே வைத்துவிட்டு வந்த சுகந்தாவிடம், "இன்று தேதி இருபத்தெட்டு ஆகிவிட்டது, இல்லையா!" என்று மெதுவாகப் பேச்சைத் தொடங்கினாள் பத்மா.

"நாட்களுக்கென்ன! நிமிஷத்தில் ஓடுகின்றன!" என்றாள் சுகந்தா.

"அதுவும் எங்களுக்கு முதல் தேதி ஏன் வருகிறது என்று இருக்கிறது. முதல் மாதத்திய பால், மளிகை செலவுகளைக் கொடுத்து விட்டால் நடக்கப் போகும் மாதத்துக்கு என்ன செய்வதென்று திக்பிரமையடைய வேண்டியிருக்கிறது. உலகத்தில் ஏழைகளை ஏன் படைக்கிறாரோ கடவுள் என்றிருக்கிறது..."

பழைய நூல் புடவையும், சாயம் போன சீட்டி ரவிக்கையும், மஞ்சள் சரடுமாகக் காட்சியளிக்கும் பத்மாவின் தோற்றம் சுகந்தாவின் நெஞ்சை உருக்கிவிட்டது. அவளுடைய அகத்தின் இரக்கம் முகத்தில் பிரதிபலிப்பதைக் கவனித்துவிட்ட பத்மா, தான் வந்த காரியத்தைச் சுகந்தாவுக்கு விளக்கினாள்.

"...அதனால்தான், உன்னிடம் ஒரு வேண்டுகோள் கோர வந்திருக்கிறேன். உன் கணவரிடம் சொல்லிப் பெரிய மனசு வைத்து வாடகையில் நாலைந்து ரூபாய்கள் குறைத்தீர்களானால் உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு. இத்தனையா என்று யோசிக்கக் கூடாது நீங்கள். யானை இறைக்கும் ஒரு பிடி அரிசி, ஆயிரம் எறும்புகளுக்குத் திருப்தியான ஆகாரமாகும் என்பதைப் போல நீங்கள் விட்டுக்கொடுக்கும் அந்த ஐந்து ரூபாய் எங்களுக்கு ஒரு பெரிய நிதி கிடைத்த மாதிரியாகும்."—அவள் வார்த்தைகளில் அளவு கடந்த பணிவும், கெஞ்சுதலும் பிரதிபலித்தன.

சுகந்தா சற்று நேரம் கால் கட்டை விரலால் தரையைக் கீறியபடி உட்கார்ந்திருந்தாள். பத்மாவின் ஏழ்மை நிலையும், வேண்டுகோளும் அவள் உள்ளத்தை மிகவும் இளக வைத்திருந்தன. ஆனால் பத்மாவின் கோரிக்கையைச் செயலாக்குவதில் தன்னைவிட அதிக அதிகாரம் படைத்த கணவன் சுந்தரேசனை நினைத்தபோது அவளுக்கு நம்பிக்கை குறைந்து விட்டது. காரணம் இத்தனை வருஷ தாம்பத்ய வாழ்க்கையில் கணவனின் மனப்போக்கும் சுபாவமும் அவளுடைய நெஞ்சில் படம் பிடித்து வைத்தாற்போல் பதிந்திருந்தன.

தனக்குத் தற்சமயம் சம்பளம், வீட்டு வாடகை இவற்றினால் கிடைக்கும் வருவாயில் ஒரு காலணாக் குறைந்தால் கூட இப்போது போன்ற ஆடம்பர வாழ்க்கை நடத்த முடியாது என்ற அசைக்க முடியாத கொள்கையுடையவன் சுந்தரேசன். கைநிறையக் காசு இருந்துவிட்டால் இதயம் என்பது இருக்கத் தேவையில்லை என்பதற்கேற்ப அவன் நடந்து கொள்பவன். சிருஷ்டிகர்த்தா, தான் உண்டாக்கிய மனித ராசியிலே ஆணுக்கு ஒரு குணமாக அல்லவா வைத்து விட்டான்! சினிமா, டிராமாவுக்கு ரூபாய் கணக்கில் செலவழித்து விட்டு, வீட்டுக்கு வர பஸ்ஸுக்கு நின்றால் நேரமாகும் என்று வாடகைக் காருக்கு அஞ்சாது செலவிடும் மனப்பான்மை பெற்றவனான அவன் வரை, சுண்டைக்காய் கால் பணம் என்றால் சுமை கூலி முக்கால் பணமாக இருந்தது. அவன் சுபாவம் அப்படி!

"ஏன்! உன் கணவர் என்ன சொல்வாரோ என்று யோசிக்கிறாயா......!" என்றாள் பத்மா.

"ஆமாம்! அவரிடம் கேட்டுத்தானே நான் சொல்ல வேண்டும்! நானாக ஒன்றும் முடிவு சொல்லிவிடக் கூடாதல்லவா!"

"ஆமாம். அவரைக் கேட்கத்தான் வேண்டும். 'இவர்' உன் கணவரிடம், தாமே கேட்பதாகச் சொன்னார் முதலில். நான்தான் உன் மூலமாக இது விஷயத்தில் பிரவேசித்தால் காரியம் இன்னும் சுலபமாக நிறைவேறும் என்றேன். நீ ஒன்று சொன்னால் அவர் தட்டக் கூடச் செய்வாரா, சுகந்தா! நான் படித்த பழைய பாடல் ஒன்று நினைவுக்கு வருகிறது. பக்தன் ஒருவன் தேவியைப் பிரார்த்தனை செய்யும்போது, 'உலகத்துக்கெல்லாம் தந்தையான எம்பெருமான் உன் அருகே இருந்து ஆனந்தமாக வார்த்தையாடி மகிழ்ந்திருக்கையில், கிருபா சமுத்திரமே, நீ என் கஷ்டங்களையெல்லாம் அவரிடம் சொல்லலாகாதா!' என்று கதறுகிறான். அதுபோல உன் கணவரிடம் நீ சொல்லித்தான் அவர் மனமிரங்க வைக்க வேண்டும்......" என்றாள் பத்மா. அவளது சாதுரியப் பேச்சைக் கேட்டுச் சுகந்தாவின் உள்ளம் பாகாய் உருகியது.

நமக்கு ஒத்தாசை செய்ய ஒருவருக்குக் கொஞ்சமும் விருப்பமேயில்லை என்றாலும், அவர்களிடமே நாம், 'உங்கள் உள்ளம் எனக்குத் தெரியுமே. எனக்கு உங்களைத் தவிர யார் உதவப் போகிறார்கள்!' என்று உண்மையான நம்பிக்கையுடன் கூறினால் அந்தக் கபடமற்ற தன்மைக்கு, அவர்கள் நெஞ்சு எத்தனை கடினமானதாக இருப்பினும், அதை இளக வைக்கும் சக்தி உண்டு. அன்பைக் காட்டி உள்ளத்தை நிலை குலைய வைக்கும் பத்மாவின் அந்த வேண்டுகோள் ஏற்கனவே இரக்கமுள்ள சிந்தை வாய்ந்த சுகந்தாவின் மனத்தை ரொம்பவும் உருக்கி விட்டதில் வியப்பில்லைதான்!

"நான் நிச்சயமாக அவரிடம் சொல்லுகிறேன்...... நீ கவலைப்படாதே!" என்று சிநேகிதிக்கு நம்பிக்கை யூட்டினாள்.

பத்மா சென்றவுடன் உள்ளே வந்த சுகந்தா மாலை கணவன் வரவை வெகு ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தாள். கையில் வாசனைக் கதம்பத்தின் மணம் நாசியைத் துளைக்க மகிழ்ச்சியுடன் பிரவேசித்த கணவனைச் சுவையான டிபன் காப்பியுடன், அழகான ஆடை அலங்காரத்துடன் வரவேற்றாள். டிபனை ஆனந்தமாக ருசி பார்த்தவாறே, "தேவிக்கு இன்று என்ன விசேஷத் திருக்கோலம்!" என்று புன்னகையுடன் அவளைக் கேட்டான் சுந்தரேசன்.

"நம் வீட்டுக் குடித்தனக்காரி பத்மா வருவதாகச் சொல்லியிருந்தாள். நம் அந்தஸ்தைத் தெரிந்து கொள்ளட்டுமே என்றுதான் இப்படி அலங்காரம்! காப்பி டிபன், கூடக்



கொடுத்தேன். நம் நிலைமை கண்டு அவன் அயர்ந்து விட்டான் ......"

"அது சரி! அவர்களெல்லாம் ஓரே தரித்திரம்தானே! நம் ஸ்திதி பிரமிப்புத்தான் ஊட்டியிருக்கும்" என்றான் அவன் அலட்சியமாக.

"பாவம், ரொம்பக் கஷ்ட நிலைமையாம். சொன்னான். அது காரணமாகத்தான் ஏதோ கேட்க வந்தான்" என்று ஆரம்பித்த சுகந்தா சாமர்த்தியமாக விஷயத்தை வெளியிட்டு விட்டு, "அவன் வாடகையைக் குறைக்கச் சொல்லிக் கேட்ட போது நான் ரொம்ப பிகு செய்து கொள்ளவில்லை. பணத்தைப் பற்றி லட்சியமில்லாமலிருக்கும் மனிதர்களென நம்மைப் பற்றி ரொம்ப உயர்வாக எண்ணியிருக்கிறார்கள் அவர்கள். அவர்கள் கஷ்டத்தோடு தரும் ஐந்து ரூபாய் வந்துதான் நாம் பிழைக்க வேண்டுமென்பது போல் அந்த வாடகை குறைப்புப்பற்றி ரொம்பக் கண்டிப்பு காண்பிக்கக் கூடாதல்லவா! அதனால் நான் உங்களிடம் ஒரு வார்த்தை கேட்டு விட்டுச் சொல்லி விடுகிறேன் என்று சொன்னேன்" என்றாள்.

சுந்தரேசனா இதிலெல்லாம் ஏமாறுபவன்!

"அம்மாடி! அந்த மட்டும் அப்படிச் சொன்னாயா! நீ ஆரம்பித்த தினுசைப் பார்த்தால் ஏதோ 'அப்படியே' என்று எழுதிக் கொடுத்து விட்டாயாக்கும் என்றல்லவா பார்த்தேன்! அவர்களுக்குச் சக்தியில்லையென்றால் வேறு வீடு பார்த்துக் கொள்ளட்டுமே!"

"அப்படிச் சொல்லி விடலாமா! நம் வீடு நன்றாக இருக்கவே காலி செய்ய மனமில்லை, பாவம்! இது சகஜம்தானே!"



"ஓகோ! கூழுக்கும் ஆசை. மீசைக்கும் ஆசையா! இதோ பார், சுகந்தா! அவர்களை யார் இங்கேயே இருந்து கஷ்டப்படச் சொல்லுகிறார்கள்! அவர்களுக்கும் லாபம், நமக்கும் வேறொருவர் வந்தால் இதைவிட அதிக வாடகை கிடைக்கும். இது, ஒரு முறை குறைத்து வாங்கினால் போதும் என்பதில்லை. மாதாமாதம் ஐந்து ரூபாய் குறையுமே!"

"இதைச் சொன்னால் அவர்கள் நம்மைப் பற்றி என்ன நினைப்பார்கள் என்பதை நீங்கள் யோசித்தீர்களா!"

"என்ன நினைத்தால் என்ன! இவர்கள் தருமதாதாக்கள் என்று நம்மை நினைத்து நமக்கு என்ன ஆகவேண்டும் இவர்களால்! நாளைக்கு வந்தால் முடியாது என்று தாராளமாகச் சொல்லி விடு!"

உரமுள்ள மண்ணிலே விதை யூன்றினால் வளமான பயிர் உண்டாகும். களர் நிலத்திலே பாடுபட்டால் என்ன வெள்ளாண்மையைக் காண முடியும்! லாபத்திலே நஷ்டம் பார்க்கும் மனம் படைத்த தன் கணவனிடம் பேசிப் பயனில்லை என்று விட்டு விட்டாள் சுகந்தா.


அடுத்த மாதம் முதல் தேதி பிறந்தது. எப்போதும் பத்மாதான் வாடகை கொண்டு வருவாள். சுகந்தா அதை மேஜை டிராயரில் வைப்பாள். மாலை சுந்தரேசன் வந்து எடுத்து வைத்துக் கொள்ளுவான். அன்றைய தினமும் வழக்கம்போலவே சுந்தரேசன் வந்து பணத்தை எடுத்தபோது அதை ஒன்றுக்கு இரண்டு தடவையாக எண்ணிப் பார்த்துவிட்டு நாற்பது ரூபாய் இருப்பதைப் பார்த்த பின் திருப்தியுடன் எடுத்துக் கொண்டான்.

"ஏன்! அவர்கள் வீட்டு வாடகையைக் குறைக்கவில்லையே என்று வருத்தமோ! அசோக வனத்துச் சீதை மாதிரி முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறாயே!" என்று கேட்டான் அவன்.

"இல்லையே......" என்றாள் சுகந்தா இலேசாக முறுவலித்தவாறே.

மாதங்கள் பல ஓடிவிட்டன. அன்று காரியாலயத்திலிருந்து வரும்போது மிகவும் வருத்தமான முகத்துடன் வீட்டுக்கு வந்தான் சுந்தரேசன். நெற்றியில் கை வைத்துக் கொண்டு பேயறைந்தவன் போல் உட்கார்ந்து விட்டான். வியர்வை ஆறாக வழிந்தது. மனம் பதறி நீண்ட நேரம் விசாரித்த பின் சுகந்தாவிடம் விஷயத்தைச் சொன்னான். "ஆபீஸ் கணக்கில் இருநூறு ரூபாய் குறைகிறது. மானேஜரிடம் பொழுது விடிந்தால் கணக்கை ஒப்புவிக்க வேண்டும். இது வரை கணக்கில் அஜாக்கிரதையாகக் காலணா விட்டது கிடையாது. நாளை காலைக்குள் பணத்தைக் கட்டியாக வேண்டுமே! இரவுக்குள் எப்படிப் பணத்தைப் புரட்டுவேன்!" என்று துக்கமும் திகிலும் தொண்டையை அடைக்கப் பேசினான் சுந்தரேசன்.

சுகந்தா திக்பிரமை யடைந்து நின்றிருந்தாள். திடீரென்று நினைத்துக் கொண்டவனாக, "உன் அப்பா மாதாமாதம் அனுப்பிய பணம் ஏதோ வைத்திருக்கிறாயே. அதைக் கொடுக்கிறாயா! இந்த



பண்டைக் காலத்துக் குருகுல வாச முறையில் சிறப்பாக நடைபெற்று வரும் வாலாஜாபாத் இந்துமத பாடசாலையைப் பற்றித் தமிழ்கூறும் நல்லுலகமெல்லாம் நன்கறியும். அந்தப் பாடசாலைக்குக் கல்வி அபிவிருத்தியில் கருத்துள்ள எத்தனையோ பிரமுகர்கள் நிதி வழங்கி யிருக்கின்றனர். சமீபத்தில் செங்கல்பட்டு முனிசிபல் சேர்மென், ராவ்பகதூர் மே. வேதாசல முதலியார் அவர்கள் மேற்படி பாடசாலைக்குப் பெரும் நன்கொடை வழங்கினார்கள். சென்ற ஜூலை 31-ந் தேதியன்று அந் நன்கொடையாளரின் உருவப் படத்தை டாக்டர் ஏ. லட்சுமண சுவாமி முதலியார் பாடசாலைக் கட்டடத்தில் திறந்து வைத்தார். ராஜேசுவரி அம்மையார் வழிபாட்டுக் கூடத்தின் கால்கோள் விழாவை நடத்தி வைத்த கோவைப் பிரமுகர் சி. எஸ். ரத்தின சபாபதி முதலியாரையும், சொற்பொழிவாற்றும் நன்கொடையாளர் திரு மே. வேதாசல முதலியாரையும், டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியாரையும் படத்தில் காணலாம்.

மாதத்திய வாடகைப் பணம்தான் என்னிடம் மீஞ்சி யிருக்கிறது. அதையும் சேர்த்துக் கொடுத்துக் கணக்கைத் தீர்த்து விடுகிறேன்'' என்றான் பிரகாசமடைந்த முகத்துடன்.

அதைக் கேட்டதும் சுகந்தா திடுக்கிட்டவளாக, ''அப்பா அனுப்பி வைத்த பணமா...! அவ்வளவு இருக்காதே......'' என்று மென்று விழுங்கினாள்.

''மாசம் பதினைந்து ரூபாய் கணக்கில் இப்போது கிட்டத்தட்ட அவ்வளவு இருக்குமே!''

சுகந்தா பயத்தாலும் வருத்தத்தாலும் கம்பிய குரலில் பேசினாள்.

''உங்களுக்குத் தெரியாமல் இப்படிச் செய்தது பற்றித் தயவு செய்து கோபிக்காதீர்கள். நீங்கள் வாடகையில் ஐந்து ரூபாய் குறைக்க மாட்டேனென்று சொன்னதை மறுநாள் வந்தபோது என் சிநேகிதியிடம் சொல்லக் கூசினேன் நான். உங்களைப் பற்றி என்ன நினைத்துக் கொண்டாலும் அக்கறையில்லை என்று நீங்கள் சொல்லி விட்டாலும் என் மனசு கேட்கவில்லை! உங்களை இரக்கமற்றவராக அவர்கள் எண்ணினால் அது எனக்கு வருத்தமில்லையா! அதனால் அவனிடம் நீங்கள் குறைத்து விட்டதாகச் சொல்லி விட்டு, அவன் மாதா மாதம் வாடகை கொடுத்தவுடன் என் பெட்டியிலிருந்து அப்பா அனுப்பி வைத்த பணத்தில் ஐந்தை எடுத்து அதில் சேர்த்து உங்கள் டிராயரில் வைத்தேன்'' என்றாள் சுகந்தா.

வியப்பினாலும், கோபத்தினாலும் பிரமித்து நின்றிருந்த கந்தரேசன், ''அப்படியா சமாசாரம்! வாடகையை அவன் கொண்டு வந்து கொடுப்பதும் நீ வாங்கி வைப்பதுமாக 'அல்லி ராஜ்ய'மாக இருக்கவே நீ தப்பினாய்! என்றைக்காவது ஒரு நாள் அவன் கணவனை நான் சந்தித்து அவன் விஷயமறியாது என்னிடம் நன்றி தெரிவித்திருந்தால் என்ன செய்திருப்பாய்! அதிகப் பிரசங்கி!'' என்றான்.


அந்தச் சமயம் வாசற் பக்கம் காலடியோசை கேட்டது. ''மிஸ்டர் கந்தரேசன்!'' என்றவாறே நுழைந்தான் குடியிருக்கும் கணேசன், மனைவி பத்மா பின்தொடர. கந்தரேசன், சுகந்தா இருவருக்கும் அவர்களது திடும்பிரவேசம் மிகுந்த வியப்பை யளித்தது.

''நமஸ்காரம், ஸார்! நீங்கள் எங்களுக்குச் செய்திருக்கும் பெரிய உதவிக்கு நாங்கள் எத்தனை தடவை நன்றி தெரிவித்தாலும் போதாது. வாடகையைக் குறைத்தது உங்களுக்கு அற்ப விஷயமாகத் தோன்றலாம். ஆனால் எங்களுக்கு அது பெரிய உதவி. ஆபீஸில் உங்களுக்கு ஏற்பட்டிருக்கும் தொல்லையைப் பற்றிக் கேள்விப்பட்டேன். சமயத்தில் உதவி செய்யா விட்டால் மனிதன் இருந்து என்ன பிரயோஜனம்! எங்கள் ஆபீஸில் மூன்று மாதம் 'போனஸ்' கொடுத்தார்கள். இதோ வாங்கிக் கொள்ளுங்கள். நானாக உங்கள் சொந்த விஷயத்தில் தலையிடுவது பற்றி மன்னிக்கவேண்டும்! முடிந்தபோது நீங்கள் திருப்பித் தரலாம்'' என்று கூறிப் பணத்தைக் கொடுத்தான்.

கந்தரேசனுக்கு அவமானத்தாலும், இகைப்பினாலும் வாயடைத்து விட்டது. கணேசன் கொடுத்த பணத்தைக் கை நீட்டி வாங்கிய போது அவன் கண்களில் நீர் துளித்தது.

''மிஸ்டர் கணேசன், நான் உங்களுக்குச் செய்த உதவியை விட நீங்கள் எனக்கு இப்பொழுது செய்யும் உதவிதான் மிகப் பெரியது. இதை நான் என்றும் மறக்க மாட்டேன். விரைவில் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்!'' என்று தழுதழுத்த குரலில் சொன்னான் கந்தரேசன். அச்சமயம் சுகந்தா அவனைப் பெருமிதத்துடன் பார்த்தாள்.

''உன்னாலல்லவா இந்தப் பெருமை யெல்லாம்......!'' என்ற பாவத்தில் கந்தரேசனின் கண்கள் சுகந்தாவுக்கு மட்டற்ற அன்பும் நன்றியும் தெரிவித்துக் கொண்டன.



புத்தம் புதியது-சுத்தமானது — ஏனெனில் இந்த பார்லி டின்னில் அடைக்கப்பட்டது!
ROBINSON'S PEARL BARLEY
ராபின்ஸன்ஸ் பேர்ல பார்லி எப்பொழுதும் உங்கள் நம்பிக்கைக்கு கந்தது. அது புஷ்டிமிக்க, உயர்தர ரக தானியங்களிலிருந்துத் தயாரிக்கப்பட்டு அவைகளின் புதுமையும் சுத்தமும் சிறிதளவும் கெடா வண்ணம் சுகாதார முறைப்படி காற்றுப்புகாமல் டின்களில் அடைக்கப்படுகின்றன. நோயாளிகள், குழந்தைகள், பாலூட்டும் தாய்மார்கள் முதலியவர்களுக்கு இது ஒரு முழு பாதுகாப்புள்ள உணவு.
ராபின்ஸன்ஸ் பேர்ல்
பார்லியையே
கேட்டு வாங்குங்கள்
முற்றிலும் சுத்தமானது
HPL 276



பெர்டுஸின் ''டெஷ்னர்''

சென்ற 60 வருஷ காலத்தில் கக்குவான் இருமல் உட்பட சகல விதமான இருமல்களினின்று அவதிப்படுபவர்களுக்கு பெர்டுஸின் துரித நிவாரணம் அளித்திருக்கிறது. ஆகவே நீங்களும் பெர்டுஸின் வாங்குங்கள்.

Infa

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கிறது.

இடாபா லிமிடெட், ஷான், லீசென்ஸ்டைன் ஸ்விஸ் கஸ்டம் அண்ட் இகனாமிக் டெரிடெரி இவர்களின் அனுமதியின் பேரில் இன்பா லிமிடெட் தபால் பெட்டி 1041, பம்பாய் - 1 இவர்களால் இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

ILT.7.TAM



வீடு முழுவதும் 'கீச் கீச்' என்ற சத்தம் போட்டுக் கொண்டிருந்தது பச்சைக் கிளி.

கீழே பட்டுப் பாயில் கிடத்தப்பட்டிருந்த குழந்தைக்காகத் தான் வாங்கிக் கொண்டு வந்திருந்த ரப்பர் கிளியைக் கொண்டு இப்படி விளையாட்டுக் காட்டிக் கொண்டிருந்தான் சாம்பசிவம். குழந்தை ஆறு மாசக் குழந்தை; அதன் எதிரே விளையாடிய அவனோ அதை விடவும் வயசில் இளைய குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்தான்.

தெருவை ஒட்டியிருந்த அறை அது. பெரிய ஜன்னல் தெருவைப் பார்க்க இருந்தது; அந்த எதிர் வீட்டின் எதிரிலேயும் இந்த வீட்டைப் போலவே ஜன்னலை ஒட்டிய அறை. அந்த அறையில் மின்சார விளக்கொளியின் வெள்ளம். அந்த எதிர் வீட்டு ஜன்னலோரத்திலே—அவள்! ரப்பர் கிளியின் கீச்சுக் குரலைக் கேட்டு ஜன்னலோரத்தில் வந்து நின்று கொண்டாளோ என்னவோ!

சாம்பசிவம் நிமிர்ந்தவன், நேரே அவளைப் பார்த்தான். அவனுக்கு அவனையும் அறியாமல் வெட்கம் வந்து விட்டது.

பேசாமல் அந்தக் கிளியை ஜன்னலோரத்தில் வைத்தான். ஆபீசிலிருந்து வந்திருந்தவன், அப்போதுதான் அவன் தன் சட்டையைக் கழற்றப் போனான்.

"எதற்காக இப்படிப் பணத்தை வீணாய்ச் செலவு பண்ணித் தினசரி ஏதாவது பொம்மை வாங்கிக் கொண்டு வருகிறாய் குழந்தைக்கு!" என்ற தன் மூத்த சகோதரியின் குரல் கேட்டுத் திரும்பினான் அவன்.

"பார்ப்பதற்கு அழகான பச்சைக் கிளியைப் போலவே இருந்தது, அக்கா! மொத்தம் இருபது கிளி வைத்திருந்தான். நம்ம குழந்தை பட்டுவின் ஞாபகம் வந்து விட்டது. ஒன்று வாங்கிக் கொண்டு வந்து பட்டுவுக் கெதிரே கத்திக் காட்டினால் தப்பா, அக்கா!" என்றான்.

இதற்கு அவன் அக்காள் சிவகாமு சிரித்த படி, "நாளைக்கு உனக்குக் கல்யாணமானால், பிறக்கும் குழந்தைக்கு அந்தக் கடையில் மீதமிருக்கும் கிளிகளை வாங்கி வந்து கொடுத்து விடு! சரிதானே!" என்றாள்.

அந்தச் சமயம் தன் படிப்பு அறையிலிருந்து வெளி வந்த பார்வதியைப் பார்த்ததும், "நான் சொன்னேன்! இந்தப் பெண்ணும் இதோ உன்னைக் கல்யாணம் பண்ணிக்கிறேன் என்று வந்து விட்டது!" என்றாள் சிவகாமு தொடர்ந்து.

பார்வதி பொய்க் கோபத்துடன், "உனக்கு எப்போதும் விளையாட்டுத்தான், அம்மா!" என்று சொல்லிவிட்டு, சாம்பசிவத்தின் அருகில் போய் நின்றுகொண்டு, "மாமா! இந்த முறை 'வாரப் பரீட்சையில்' நான்தான் 'முதல் மார்க்.' எதிர்த்த வீட்டு ராஜேசுவரி 'லெகண்ட் மார்க்' தான். எல்லாம் நீங்கள் சொல்லிக் கொடுத்ததனால் தான். இதை நான் ராஜேஸ்வரியிடம் சொன்னேன், மாமா! அவளுக்கு என்னிடம் எத்தனை பொறாமை, தெரியுமா!" என்றாள்.

"ஓஹோ" என்று சொல்லிக் கொண்டே டர்க்கி டவலால் முகத்தைத் துடைத்துக் கொண்டே சாப்பிடப் போனான் சாம்பசிவம்.

சாப்பிட்டு விட்டு வாசல் திண்ணையில் 'அப்பாடா' என்ற பெருமூச்சுடன் வந்து உட்கார்ந்தான் சாம்பசிவம். பக்கத்து அறையில் ஜன்னலோரத்தில் அவன் வைத்த பச்சைக் கிளி அவன் திருஷ்டியில் அப்போது பட்டது.

அறையில் ஒளி தந்து கொண்டிருந்த அறுபது வாட்ஸ் பல்பின் ஒளியில் அந்தச் சின்ன ரப்பர் கிளி புது வர்ணத்துடன் பிரகாசித்தது. உடனே அவனுக்கு அரை மணி நேரத்துக்கு முன்பு எதிர் வீட்டு ஜன்னலில் நின்று கொண்டிருந்த கிளியின் ஞாபகம் வந்து விட்டது.

சாம்பசிவத்தின் கண்ணுக் கெதிரில் அவன் அக்காள் மகள் பார்வதியும் எதிர் வீட்டுப் பெண் ராஜேசுவரியும் ஒன்றாய்த் தோன்றினார்கள். இருவரில் யார் அழகு என்று தோன்றிய தட்சணமே முடிவு செய்யச் சாம்பசிவத்துக்கு வெகு நேரம் ஆகாது. நிச்சயமாக ராஜேசுவரி பார்வதியை விடவும் நல்ல அழகிதான்.

சாம்பசிவத்துக்குப் பட்டணத்தில் வேலையாகி ஆறு மாதங்கள்தான் ஆகியிருந்தன. திருச்சிக் கல்லூரியில் பி. ஏ., பரீட்சை எழுதிய கையோடேயே, வெள்ளைக் காகிதங்களைத் தன் முத்து முத்தான கையெழுத்தால் நிரப்பி 'அப்ளிகேஷன்' மயமாக அனுப்பி வந்தான். பட்டணத்திலிருந்த அவன் சகோதரி சிவகாமுவின் கணவர் மூலமாக நல்லதொரு கம்பெனியில் உத்தியோகம் கிடைத்து, இப்போது தன் சகோதரியின் வீட்டிலேயே தங்கி உத்தியோகத்தையும் பார்த்து வந்தான் சாம்பசிவம்.

சிவகாமுவுக்குப் பார்வதி பிறந்து பதினெட்டு வருஷங்களுக்குப் பிறகு அப்போது ஒரு பெண் குழந்தை பிறந்திருந்தது. குழந்தை பட்டுவின் குடிக்கையான அழகில் சாம்பசிவம் லயித்துத் தானும் அவ்வப்போது குழந்தையாகிக் கொண்டு வந்தான்.

சிவகாமுவுக்கு அப்போது பெருமை பிடிபடாமலிருந்தது. தன் தம்பிக்குத் தன் கணவர் நல்ல உத்தியோகம் வாங்கிக் கொடுத்தார்; தான் தன்னுடைய பெண் பார்வதியை அவனுக்குக் கல்யாணம் செய்து கொடுத்துத் தம்பியின் குடித்தன மதிப்பை உயர்த்தப் போகிறோம் என்கிற பெருமைதான் அவளுக்கு.

சாம்பசிவத்தின் மனம் தூய பாலைப் போல் இருந்தது. கள்ளங் கபடு தெரியாதவன் அவன். ஆனால் சில சமயம் பாலை அடைத்து நிற்கும் ஏடைப் போல எதிர் வீட்டுப் பெண் ராஜேசுவரியின் அழகு அவன் சிந்தனையில் ஜகில்வரம் போடும். பாலில்லாமல் ஏடு இல்லை; ஏடு இல்லாமல் வேண்டுமானாலும் இருக்கலாம்; பாலில்லாமல் இருக்க முடியாது. ராஜேசுவரி

யின் அழகு இப்படித்தான் என்பதை அவனும் பூரணமாக உணர்ந்து கொள்ள முடியவில்லை.

அத்திம்பேரும் அக்காளும் அவன் வாழ்க்கையில் முக்கியமான திருப்பத்தில் ஈடு செய்ய தற்கரிய ஒத்தாசை செய்திருக்கிறார்கள்; நல்ல உத்தியோகம் வாங்கித் தந்திருக்கிறார்கள். 'பெண்ணைக் கொடுக்கலாம்' என்று அவர்களுக்கு இருக்கும் ஆசை சர்வ நியாயமானது.

பார்வதி அப்படி ஒன்றும் அழகில் குறைந்தவளல்ல. சுமாரான உயரம், சுமாரான பருமன், சுமாரான நிறம். இருந்தாலும் பார்வதியின் இடத்தில் லக்ஷ்மிக் களை தாண்டவமாடும். அவள் நடு வகிடும் சிவப்புக் குங்குமப் பொட்டும் அந்தராத்மாவைக் கொள்ளை கொள்ளும்.

ராஜேசுவரி!—அவளது பொன்னிறமே அவளுடைய அழகை உயர்த்திக் காட்டியது. சுருளான நீண்ட கேசம் யாருடைய இதயத்தையும் ஈர்க்கும் சாட்டையாயிருந்தது.

* * *

இரண்டு நாள் கழித்து ஒரு நாள் காலை நேரத்தில் ராஜேசுவரி, சிவகாமுவின் வீட்டுக்கு வந்தாள்.

அறைக்குள்ளே 'கீச் கீச்' என்ற சத்தம். ரப்பர் கிளியின் ஓலம். ராஜேசுவரி அறைக்குள் எட்டிப் பார்த்ததைச் சாம்பசிவம் பார்க்கவில்லை. குழந்தைக்குக் கிளியை அழுத்திக் காட்டிக் கொண்டிருந்தான். குழந்தையோ தன் மாமாவின் குழந்தைத்தனத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தது.

"தேவலையே கிளி!" என்று கனிவமான குரல் கேட்டுத் திரும்பினான் சாம்பசிவம்.

புன்னகையே உருவமாக நின்று கொண்டிருந்தாள் ராஜேசுவரி.

"குழந்தைக்கு..." என்று அசட்டுத் தனமான தடுமாறலுடன் சொன்னான் சாம்பசிவம்.

"ஆமாம்! அந்தக் குழந்தைக்காக இந்தக் குழந்தை வாங்கி விளையாடுகிறது!" என்று சிரித்துக் கொண்டே அவனருகில் வந்து அவன் கையிலிருந்து அந்தப் பச்சைக் கிளியைத் தன் கையில் வாங்கிக் கொண்டாள் ராஜேசுவரி.

அவளுடைய இந்தத் தைரியம், இந்தப் பேச்சு சாம்பசிவத்துக்குப் பிடித்த மாதிரி இருந்தது.

"என்ன விலைக்கு வாங்கினீர்கள்!"

"ஆறணா" என்றான்.

"நேற்றைக்கு உயிருள்ள பச்சைக் கிளியொன்றை நாலணாவுக்குப் பகிரங்கமாகத் தெருவில் விற்றுக் கொண்டு போனான் ஓர் ஏழைப் பையன். அந்தக் கிளியை வாங்கின பேர்வழி அதைச் சிறைப்படுத்த ஒரு கிளிக் கூண்டைச் சுமார் இரண்டு ரூபாய் கொடுத்தாவது வாங்கியிருப்பான்! நீங்கள் தேவலையே! பார்த்தால் நிஜக் கிளியைப் போலிருக்கிறது; கத்தினால் கிளி கொஞ்சுகிறது. இத்தனைக்கும் கூண்டு வேண்டாம், ஒரு பாதுகாப்பும் வேண்டாம்..." என்று அழகாய்ப் பேசிக் கொண்டே போனாள் ராஜேசுவரி.

அப்போது உள்ளே நுழைந்த பார்வதி, "நீ எப்போடி வந்தாய், ராஜேசுவரி!" என்று கேட்டுக் கொண்டே வந்தாள்.

"உன் மாமா எத்தனை அழகான ரப்பர் கிளியை வாங்கி வந்திருக்கிறார் என்று பார்த்துக் கொண்டிருந்தேன்! இந்தக் கிளிக்கு உயிரைக் கொடுக்க முடியாமல் இதைப் போட்டுக் கத்த அடித்துக் கொண்டிருக்கிறார், பாவம்!"

"அதுவும் உயிர் போகும்படியாய்க் கத்துகிறது!" என்று பார்வதி சொன்னவுடன் இரண்டு பேருமே சேர்ந்து சிரித்தார்கள்.

ஏதோ ஞாபகம் வந்தவளைப் போலப் பார்வதி சொன்னாள்: "மாமா! உங்களிடம் ஒன்று சொல்லவில்லையே! அதோ பாருங்கள், உத்தரத்துக்கு மேலே குருவிக் கூடு! அதிலிருக்கும் குருவிக்கு உங்கள் கிளியிடம் பரம பயம்......"



"இதென்னடி அதிசயம்!" என்று கேட்டாள் ராஜேசுவரி.

"இந்தக் கிளியை ஜன்னலோரத்தில் வைத்து விட்டால் போதும்; அந்தக் குருவி தயங்கித் தயங்கிப் பார்த்துக் கொண்டே ஓடிப் பறக்கிறது. இதைக் கத்த விட்டால் போதும்; அந்தக் குருவி பொறுமையின் உயரத்தில் கத்திக் கொண்டு, உயரப் பறந்தோடி விடுகிறது. நானும் இரண்டு நாளாய்க் கவனித்து வருகிறேன்" என்றாள் பார்வதி.


"நேற்று நான் ஒரு கதைப் புஸ்தகத்தில் படித்தேன்,"பாரு! 'அசல், போலியைக் கண்டு பயந்து சாகிறது' என்று அதில் போட்டிருக்கிறது. உன் மாமாவையே கேட்கிறேன். நீங்கள் சொல்லுங்கள்! அந்தப் புஸ்தகத்தில் எழுதியிருப்பது சரிதானே!' என்று ராஜேசுவரி சாம்பசிவத்தைப் பார்த்துக் கேட்டாள்.

அசலானது போலியைக் கண்டு பயந்தாலும், இறுதியில் செத்துப் போவது போலிதான், அசல் அல்ல என்பதை அவன் அறிவான். இருந்தாலும் ராஜேசுவரியின் மனம் புண்படலாமா!

"நீ சொல்வது சரி!" என்றான்.

பார்வதி 'பட்'டென்று சொன்னாள்:

"என்ன 'சரி' என்கிறீர்கள், மாமா! இந்த ரப்பர் கிளி நிஜக் கிளியாகி விடுமா! இன்னும் கொஞ்ச நாள் போனால் இந்த ரப்பர் கிளி—போலி—மறைந்து போகும். உத்தரத்தில் இருக்கும் குருவி மறைந்து போய் விடுமா என்ன!"





இந்த நூதன டூத்பேஸ்டினால்
குழந்தைகளின் பற்களை
பாதுகாருங்கள்
உங்கள் குழந்தைகளின் பற்கள் அரிய மதிப்புடையவை; அவற்றிற்கு விசேஷ கவனம் செலுத்த நீங்கள் விரும்புவது சகஜமே. ஆகையால்தான் நீங்கள் ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த 'கோலினாஸ்' உபயோகிப்பது அவசியமாகும். செழிப்பான நுரையுள்ள இந்த நூதன டூத்பேஸ்ட் பல் சிதைவிற்குக் காரணமான கிருமிகளை ஒழித்து, ஈறுகளை உறுதியாகவும் ஆரோக்கியமாகவும் வைத்திருக்க உதவுகிறது.
குழந்தைகள் இதன் இனிய பெப்பர்மின்ட் சுவையையும், புதுமைப் பச்சை நிறத்தையும் விரும்புவர். தவிர, 'கோலினாஸ்' அதிக சிக்கனமுடையதென்றும் உங்களுக்குத் தெரியவரும். ஈரமில்லாத பிரஷில் அரையங்குல அளவே போதுமானது.
இன்றே ஆக்டிவ் க்ளோரோபில் சேர்ந்த பச்சை 'கோலினாஸ்' டூத்பேஸ்டை உபயோகிக்கத் தொடங்கி உங்கள் பணத்திற்கு பரிபூரண பயன் பெறுங்கள்!
Kolynos
Chlorophyll
'கோலினாஸ்' புன்னகையில் ஆரோக்கியம் ததும்புகிறது
GK. 1172

இதற்குப் பதில் சொல்லுவது அறியாமல் திணறித் திண்டாடினான் சாம்பசிவம்.

"அது போகட்டும். நான் கேட்கும் ஒரு கேள்விக்குப் பதில் சொல்கிறீர்களா! எங்கள் இரண்டு பேரில் யார் இந்தக் கிளியைப்போலிருக்கிறோம்! யார் அந்தக் குருவியைப் போலிருக்கிறோம்!" என்று கேட்டாள் ராஜேசுவரி.

உண்மையிலேயே தவித்துப் போய்த் திணறிக் கொண்டிருந்தான் சாம்பசிவம். இப்போது என்ன சொல்வான்! யார் கிளி! யார் குருவி!

பார்வதியும், "என்ன, மாமா! தயங்குகிறீர்கள்! உங்கள் மனசுக்குப் பட்டதைத் தாராளமாய்ச் சொல்லலாம்!" என்றாள்.

அடுத்த நிமிஷம் சொன்னான் சாம்பசிவம். ராஜேசுவரியைப் பார்த்து, "நீதான் கிளி..." என்று கூறினான். ஆனால் மற்றவளைப் பார்த்து 'நீ குருவி' என்று அவன் சொல்லவில்லை.

ராஜேசுவரி ஆச்சரியப் பட்டவளாய், "ஏண்டீ பார்வதி! இவரையா நீ நம்பிக் கல்யாணம் பண்ணிக் கொள்ளப் போகிறாய்? உனக்கெதிரிலேயே இன்னொரு பெண்ணைப் போய்க் கிளி என்று சொல்ல வருகிறாரேயடி இவர்!" என்றாள்.

என்ன, என்ன, என்ன!

சாம்பசிவத்துக்கு ஒன்றுமே புரியவில்லை. இவள் என்ன இப்படிக் கசப்பான உண்மையைச் சொல்லி விட்டாள். ஆனால் உடனே பார்வதி அங்கேயிருந்து போய்விட்டாள். அவளைத் தொடர்ந்து ராஜேசுவரியும் போனாள்.

ஜன்னலோரம் இருந்த ரப்பர் கிளி அவனைப் பார்த்துச் சிரிப்பதைப் போலிருந்தது.

* * *

சாப்பிட்டுக் கொண்டிருந்தான் சாம்பசிவம். தாயுடன் சேர்ந்து பரிமாறும் பார்வதியைக் காணவில்லை.

"ஏன் அக்கா, பார்வதி இல்லையா!" என்று கேட்டான் சிவகாமுவை.

"அவள்தான் உன் கண்ணுக்குக் குருவியாச்சே!" என்றாள் சிவகாமு.

சாம்பசிவத்துக்குக் கோபம் வந்தது. 'தான் ஏதோ தவறு செய்து விட்டோம்' என்ற நினைவு அவன் உள்ளத்தில் பொங்கி வர, அந்தக் கோபம் அதிகமாயிற்று. ஆனால் அவன் ஒன்றும் பேசாமலிருந்தான்.

"இதோ பார், சாம்பு! அந்த எதிர் வீட்டுப் பெண்ணுடன் நீ பேசுகிற விதமும் அவள் உன்னுடன் பேசுகிற விதமும் எனக்குக் கட்டோடு பிடிக்கவில்லை. இன்றைக்கு நீ பார்வதியைக் குருவி என்று சொல்லி விட்டதால் ஒன்றும் மூழ்கிப் போய்விடவில்லை. ஆனால் கிளிக்கும் குருவிக்கும் வித்தியாசம் தெரியாமல் இப்படி ஒரு பிள்ளை இருப்பாயா என்றுதான் எனக்கு வருத்தமாயிருக்கிறது. அவர்களிடம் அந்தப் பெண்ணின் ஜாதகத்தைக் கேட்டு அப்பாவுக்கு அனுப்பி வைக்கட்டுமா!" என்று பேசிக்கொண்டே போனாள் சிவகாமு.

சாம்பசிவத்துக்குக் கோபம் உச்சத்துக்குப் போய் விட்டது. மோர் சாதம்கூடச் சாப்பிடாமல் கலத்தை விட்டு எழுந்து சமையலறையை விட்டு வெளியே போனான்.

"டேய், டேய்! இதற்காக மோர் சாதத்தின்பேரில் என்னடா கோபம்!" என்று பின்னால் அக்காள் கத்தியதையும் பொருட்படுத்தவில்லை அவன். கையலம்பிவிட்டு நேரே வாசல் முன் அறைக்குப் போனான். அவன் நடையில் கூடக் கோபம்; அவன் காலில் ஏதோ இடறியது. தொடர்ந்து— 'கிரீச்' சென்ற சத்தம்!

கீழே கிடந்த ரப்பர் கிளியின் மேல் காலை வைத்திருக்கிறான். அதன் ஓலம். அதைத் தன் காலாலேயே கோபத்துடன் உதைத்தான். அது சுவரின் மூலையில் போய் மோதியது. இப்போது அது சத்தமிடவில்லை. அவன் தன் காலால் அழுத்திய போதே அதோடு ஒட்டியிருந்த ஊதல்தான் தனியே வந்து விட்டதே!

இரவு ஒன்பது மணிக்கு அப்புறம், வீட்டுக்குப் பின்னால், மல்லிகைப் பந்தலுக்கடியில் ஈஸிசேரைப் போட்டுக் கொண்டு உட்கார்ந்திருந்தான் சாம்பசிவம்.

அவன் செய்தது தவறு என்று சதா அவன் மனம் சொல்லிக் கொண்டிருந்தது. ஓர் இளம் பெண்ணின் மனத்தை—அதிலும் தன் பேரில் இத்தனை அன்பும் பரிவும் கொண்டிருக்கும் ஒரு மனத்தை – அப்படிப் புண்படுத்தியது நியாயமில்லையென்றே அவனுக்குத் தோன்றியது.

"மாமா..." என்று பின்னால் பார்வதியின் குரல் கேட்டது.

கையில் நிலவின் ஒளியில் பளபளக்கும் 'எவர்ஸில்வர்' டம்ளருடன் நின்றாள் பார்வதி. அந்த நிலவில் தான் அவள் எத்தனை அழகாய்த் தெரிந்தாள்! ரப்பர் கிளிக்கென்ன, உயிருள்ள பச்சைக் கிளிக்குக்கூட அந்த அழகு வருமா!

"என்ன, பார்வதி!"

"மோர் சாதம்கூடச் சாப்பிட வில்லையாமே நீங்கள்! இந்தாருங்கள், இந்தப் பாலையாவது சாப்பிடுங்கள்" என்றாள் பார்வதி அன்புடன்.

சாம்பசிவம் அவளை நிமிர்ந்து பார்த்தான். அவள் இரு கண்களிலும், நிலவில் கண்ணீர்த் துளிகள் வைடூரியங்கள் போல ஒளி விட்டன.

'நீ என் பச்சைக் கிளிதான்' என்று அவளைப் பார்த்துச் சாம்பசிவத்தின் மனம் ஓலமிட்டாலும், வார்த்தைகள் ஏதும் வெளி வராமல் அவனை மௌனியாக்கி விட்டன.

ஐந்தாறு நாட்களுக்குப் பிறகு சாம்பசிவத்தின் அப்பாவிடமிருந்து அவருடைய மூத்த பெண் சிவகாமுவுக்கு ஒரு கடிதம் வந்தது. அதன் முக்கியமான பகுதியைக் கண்டு சிவகாமு மகிழ்ச்சிவாரிதியில் திளைத்தாள்.

"......பாவம், சாம்பு தன் விருப்பத்தைத் தெரிவித்து எழுத ரொம்பவும் சங்கோசப் பட்டிருந்தான். பார்வதி அவனுக்கு அப்படி என்ன சொக்குப்பொடி போட்டாளோ, தெரியவில்லை. சீக்கிரம் ஒரு முகூர்த்தம் பார்க்க வேண்டியதுதான்..."

தன் தோழியின் கல்யாண தினத்தன்று ராஜேசுவரி செய்த அட்டகாசம் கொஞ்சநஞ்சமல்ல. பார்வதிக்கு ஒரு ரப்பர் கிளியையே பரிசாக அளித்தாள் ராஜேசுவரி.

அத்தனை கும்மாளத்திலும் சாம்பசிவம் பார்வதியிடம், "பயப்படாதே, பார்வதி! அவள் கல்யாணத்தின்போது ஒரு குருவியை நாம் பரிசாக அளித்து விடுவோம். அதுவரைக்கும் நாம் பொறுத்திருக்க வேண்டியதுதான்!" என்றான்.

பார்வதி புரிந்த புன்னகை அவனுடைய அந்தராத்மாவோடு ஐக்கியமாகியது.



விளையாட்டு அரங்கம்

ஹாக்கி விளையாட்டு

"பந்து"

ஹாக்கி விளையாட்டிலே உலகத்தில் இந்தியா முதன்மை ஸ்தானம் வகிக்கிறது. ஆனால் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு மிகச் சில கோஷ்டிகளே இதுவரை பிரயாணம் செய்திருக்கின்றன. ஒவ்வொரு வருஷமும் கிரிக்கெட் கோஷ்டியினர் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு நாட்டுக்குப் பிரயாணம் செய்கின்றனர். ஹாக்கிக்கு மாத்திரம் ஏன் இந்தக் குறைந்த வரவேற்பு!

இந்தியாவிலிருந்து குறைந்த பட்சம் நான்கு அருமையான ஹாக்கிக் கட்சிகளை ஒவ்வொரு வருஷமும் பிறநாட்டுக்கு அனுப்ப முடியும்.

ஆனால் ஹாக்கியில்சிரத்தைகுறைந்திருக்கிறது என்று சொன்னால் பலருக்குக் கோபம் வந்து விடுகிறது. போன வருஷம் சென்னையில்தான் நமது முக்கிய அகில இந்திய ஹாக்கிப் போட்டி நடைபெற்றது. ஆட்டத்தைப் பார்க்க வந்த கூட்டம், சில நாட்களைத் தவிர, மிகக் குறைவு என்றுதான் சொல்லவேண்டும். சென்னை அகில இந்தியப் போட்டியில் வெற்றி பெற வேண்டுமானால் அதிக ஊக்கம் காண்பிக்க வேண்டும்; நிறையப் போட்டிகளை நடத்த வேண்டும்; நன்றாக விளையாடுபவர்களைப் பிடித்து அவர்களுக்கு ஊக்கம் அளிக்க வேண்டும்.

நீங்கள் ஒரு 'திடுக்கிடும்' செய்தியைச் சமீபத்தில் பார்த்திருப்பீர்கள். தில்லியிலிருந்து சென்றிருக்கும் ஹாக்கி கோஷ்டியினரை நியூஸிலாந்து தேசக் கட்சியினர் தோற்கடித்தனர். தில்லிக் கோஷ்டி என்று சொன்னாலும் அதில் உள்ளவர்கள் மிகத் திறமைசாலிகள். பல்பீர் சிங், பாபு, குருபசன்சிங் எல்லோரும் 'ஒலிம்பிக்'கில் விளையாடினார்கள். இந்தத் தோல்வியைப் பற்றி நாம் சிறிது சிந்திக்க வேண்டும். அடுத்த வருஷம் 'ஒலிம்பிக்' போட்டி மெல்போனில் நடக்கப் போகிறது. இதுவரை எந்த இந்திய கட்சியும் ஹாக்கி 'டெஸ்டில்' தோற்கடிக்கப் படவில்லை. இப்போது மட்டும் ஏன் தோல்வி! 'மழை பெய்ததால் விளையாட்டு மைதானம் சரியாக இல்லை. நமது விளையாட்டுக்காரர்களுக்கு அது ஒரு புது சோதனை' என்று குறிப்பிட்டிருக்கின்றனர். இருந்தாலும் அதைப் பூரணமாக ஒத்துக் கொள்ளுவதற்கில்லை. பிறநாடுகள் ஹாக்கியில் தேர்ச்சி பெறுகின்றன; முன்னேறி வருகின்றன. ஆனால் நாம் சிரத்தை காண்பிக்கவில்லை. இங்கிலாந்து, ஹாலந்து, பாகிஸ்தான் இந்த மூன்று தேசங்கள்தான் நமது கீர்த்தியைப் பங்கம் செய்யப் பிரயத்தனப் படுவார்கள் என்று இதுவரை நம்பியிருந்தோம். அந் நாடுகளில் தற்போது எவ்விதப் பயிற்சி செய்கின்றனர் என்பது பற்றி நமக்கு அதிகம் தெரியாது. இந்தச் சந்தர்ப்பத்தில்தான் இந்தத் தோல்வியைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.

இந்தியாவிலிருந்து மற்றொரு ஹாக்கி கோஷ்டியினர் சமீபத்தில் போலந்து தேசத்துக்குச் சென்றனர். இவர்கள் வார்சாவில் எட்டு பிற தேசக் கட்சியினருடன் போட்டி போட்டு வெற்றியடைந்திருக்கின்றனர். இந்தக் கோஷ்டியில் சென்னையிலிருந்து பிரான்ஸிஸ், குசைநாதன் இருவரும் தேர்ந்தெடுக்கப் பட்டுச் சென்றனர்.

ஹாக்கி தெரிந்தவர்களுக்கு பிரான்ஸிஸைப் பற்றி விஸ்தாரமாகச் சொல்ல வேண்டுமா! அவர் 'கோலை'க் காப்பார் என்றால் கொஞ்சமும் பயமில்லை. அவரில்லாவிட்டால் சென்னை அகில இந்தியப் போட்டியில் தோற்கடிக்கப்பட்டிருக்கும் என்று சொன்னால் மிகையாகாது. 'கோலை'க் காப்பதில் நிபுணர்; மிகவும் தைரியசாலி. 1948-ல் நடந்த லண்டன் 'ஒலிம்பிக்'கிலும், 1952-ல் நடைபெற்ற ஹெல்ஸிங்கி 'ஒலிம்பிக்'கிலும் தமது திறமையைக் காட்டி இந்தியாவுக்குப் புகழ் தேடி வைத்தார். அவர் சென்னை போலீஸில் வேலை பார்க்கிறார்.

குசைநாதனும் ஒரு போலீஸ்காரர். மிக அழகாக முன் வரிசையில் ஆடுவார். 1952-ல் இந்திய 'ஒலிம்பிக்' கட்சியினர் ஹெல்ஸிங்கிக்குப் போகு முன்னர் சென்னையில் விளையாடினர். சென்னை ராஜ்யக் கோஷ்டியினர் ஒரே ஒரு 'கோலால்' அவர்களைத் தோற்கடித்தனர். குசைநாதன்தான் அந்தக் 'கோலை'ப் போட்டார். இந்தியக் கட்சியின் காப்டன் பாபு, "குசைநாதன் சீக்கிரத்தில் உன்னத ஸ்தானத்தை அடைவார். அவருக்கு எல்லாக் குணங்களும் இருக்கின்றன" என்று சொன்னார். போன வருஷம் அவரை மலேயாவுக்கு இந்தியக் கட்சியுடன் அனுப்பினார்கள். இருபத்தைந்து 'கோல்கள்' போட்டார். சென்னை அகில இந்திய ஹாக்கி போட்டியில் உயர்ந்த ஸ்தானம் வகிக்கின்றதென்றால், அந்தக் கௌரவத்தில் குசைநாதனுக்கு ஒரு பங்கு உண்டு.



குசைநாதன்

போலந்து நாட்டில் நடைபெற்ற போட்டியிலும் குசைநாதனே மூன்று 'கோல்'கள் சேர்த்தாற் போல் போட்டு இந்தியாவின் புகழையும் சென்னையின் கௌரவத்தையும் நிலைநாட்டியிருக்கிறார்.

உங்களுடைய ஸான்பொரைஸ்ட் துணி உடம்புக்குப் பொருந்தாதபடி ஒரு பொழுதும் சுருங்காது என்பதை நாங்கள் எப்படி நிச்சயிக்கிறோம்


✻ உலகத்தில் எந்த இடத்திலும் தயார் செய்யப்படும் 'ஸான்பொரைஸ்ட்' (Sanforized) துணிக்குள்ள அதே சோதனைகளுக்கு உங்கள் துணி உள்ளாகிறது.

அதை நாங்கள் எவ்விதம் செய்கிறோம்?

இந்த ஏழு படங்கள் உங்களுக்கு விளக்கக்கூடும்:



இதோ எங்கள் 'ஸான்பொரைஸ்ட்' நிபுணர் ஒரு மில்லின் 'ஸான்பொரைஸ்ட்' சூப்பிரண்டுடன் துணிகளைச் சுருக்கம் செய்வதைப்பற்றி விளக்கிக்கொண்டிருக்கிறார். துணி விசேஷ முறைப்படி சுருக்கப்படும்.



எல்லா மில்களும் அவை தயாரிக்கும் 'ஸான்பொரைஸ்ட்' துணிகளின் விபரங்களை வைத்துக்கொள்ளுகின்றன. எங்கள் நிபுணர் அவைகளைக் கவனித்து தரத்தையும் மொத்த உற்பத்தியையும் ஆராய்கிறார்.



அவர் ஏதாவது 'ஸான்பொரைஸ்ட்' துணிகளை எதேச்சையாக எடுத்து பரிசோதனை செய்கிறார். அவர் அவைகளை சலவை செய்து முடிவுகளை மில்லின் சொந்த முடிவுகளுடன் ஒத்துவருகிறதா என்று பார்க்கிறார்.



'ஸான்பொரைஸ்ட்' சுருங்கக் கூடாது என்ற கடும் நியதிகளுக்கு ஒத்து வருகிறதா என்று நிர்ணயம் செய்ய, சலவைக்கு முன்பும், பின்பும் ஒவ்வொரு ஸாம்பிளையும், அவர் அளந்துபார்க்கிறார்.

விதியின் விசித்திரம்

எஸ். பி. மல்ஹோத்ரா

உருதுக் கதை: மொழிபெயர்ப்பு: ஜெயமணி

(சென்ற வாரத் தொடர்ச்சி)

சாப்பாட்டை முடித்துக் கொண்டு நாங்கள் தாமதமின்றி மீண்டும் எங்கள் யாத்திரையைத் தொடங்கினோம்.

காப்டன் ராயின் வார்த்தைகள் என் சிந்தனையைக் கிளற ஆரம்பித்தன. நான் அவருடன் பேச்சுக் கொடுக்காமல் மௌனமாக இருக்க வேண்டும் என்றுதான் நினைத்தேன். எனினும் எனக்கு அப்படி இருப்பது சாத்தியமாக இல்லை. எனவே, தயங்கித் தயங்கி அவருடன் பேசலானேன். என் மனத்தில் ஏற்பட்ட சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ள வேண்டும் அல்லவா!

"நான் கல்லூரியில் தத்துவ பாடம் எடுத்துக் கொண்டிருக்கிறேன். அதன் சம்பந்தமாக உங்களிடம் பல விஷயங்களைத் தெரிந்து கொள்ளலாம் என்று நினைக்கிறேன். எனவே, நான் தங்களிடம் சில கேள்விகள் கேட்கலாமா!" என்று கேட்டேன்.

"நன்றாகக் கேளுங்கள். எனக்குத் தெரிந்த வரையில் பதில் சொல்ல முயற்சிக்கிறேன்."

"வாழ்க்கை என்றால் என்ன!"

நான் இவ்விதம் கேட்டதும் காப்டன் ராய் சில விநாடி நேரம் சிந்தனையில் ஆழ்ந்திருப்பவர் போல் தோன்றினர். பிறகு நிதானமாகக் கூறத் தொடங்கினர்:

"வாழ்க்கை என்பது ஒரு கதை என்பதே என் கருத்து. அந்தக் கதை பெரும்பாலும் சோகத்தில் தான் முடிகிறது. இந்தப் பூமியில் பிறக்கும் ஒவ்வொருவரும் அவரவர் சொந்தக் கதையை எழுதுகிறார்கள். மன வேதனையும் கண்ணீர்த் துளிகளும் சிரிப்பு ஒலிகளும் அடங்கியதே அந்தக் கதையாகும்.

"வாழ்க்கை இரண்டு விதமானது: ஒன்று ஜீவனுள்ளது; மற்றொன்று ஜீவனற்றது. ஜீவன் உள்ள வாழ்க்கையையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: ஒன்று மானிட வாழ்க்கை; மற்றொன்று மிருக வாழ்க்கை.

"மானிடரின் வாழ்க்கையைக் காட்டிலும் மிருகங்களின் வாழ்க்கை எவ்வளவோ சிறந்தது. மிருகங்கள் கவலையற்றுத் திரிகின்றன; மானிடரோ ஆயுள் முழுவதும் கவலைக்கு இரையாகித் தவிக்கிறார்கள். மிருகங்கள் இயற்கையைக் கண்டு பயப்படுவதில்லை; நம்மைக் காற்றும், நீரும், நெருப்பும் நடுநடுங்க வைக்கின்றன. மிருகங்கள் இயற்கையின் மடியில் தஞ்சம் அடைகின்றன; நாம் இயற்கையுடன் போராட முற்படுகிறோம். மிருகங்கள் தங்களுக்குக் கிடைத்ததைக் கொண்டு திருப்தியடைகின்றன; நாம் எவ்வளவு கிடைத்தாலும், மேலும் மேலும் அதிகம் கிடைக்க வேண்டும் என்று பேராசைப் படுகிறோம். மிருகங்கள் அமைதியின்றித் தவிப்பதில்லை; நாமோ சதா சர்வகாலமும் மன அமைதியின்றி அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறோம்."

இச் சந்தர்ப்பத்தில் நான் இடைமறித்தேன்.

"நான் மானிட வாழ்க்கையைப் பற்றி உங்களைக் கேட்டேனே யன்றி மிருகங்களின் வாழ்க்கையைப் பற்றிக் கேட்கவில்லையே!" என்று என் நிலைமையை விளக்கினேன்.



"ஆம். ஆம். மானிடர் வாழ்க்கையிலும் இரண்டு அம்சங்கள் இருக்கின்றன: ஒன்று பெண், மற்றொன்று ஆண். இருவரும் மானிட வாழ்க்கையின் உருவங்கள் தான். பெண் புஷ்பத்தைப் போல் கனிவாக இருக்கிறாள். ஆடவரோ கல்லைப் போல் கடினமாக இருக்கிறார். அழகுதான் பெண்ணின் அணிகலன். ஆடவர் அழகு செய்து கொள்வதில்லை. பெண்ணை ஒரு காந்தம் எனலாம். அந்தக் காந்

தத்தினுல் ஆடவர் இழுக்கப்பட்டு விடுகிருர். ஒரு பெண் பொதுவாகத் தன் அபிலாஷைகளை விளம்பரப்படுத்திக் கொள்வதில்லை; ஆனுல், ஆடவருக்கு அச்சமும் நாணமும் இருக்க வேண்டிய அவசியமில்லை. எனினும் ஒரு விஷயத்தில் மாத்திரம் இருவரும் ஒரே விதமாக இருக்கிருர்கள். அதாவது பெண், ஆண் இருவரும் காதல் தெய்வத்தின் பக்தர்கள் எனலாம். அழகிய பெண்ணைக் கண்டு ஆடவனும், இடகாத்திரமுள்ள ஆடவனைக் கண்டு பெண்ணும் நிலைகுலைகின்றனர் அல்லவா!"

இவ்விதம் கூறிக்கொண்டே காப்டன் ராய் தன்னை மறந்தவராய் என் தோளின் மீது கையை வைத்தார். அப்போது என் தேகம் முழுதும் ஒருவித மின்சாரம் பாய்வதுபோல் இருந்தது. ஆனுல், உடனே அவர் தமது கையை அப்பால் எடுத்துக் கொண்டு விட்டார்.

"நான் கூறியது தெளிவாகப் புரிந்ததா!" என்று கேட்டார் ராய்.

எனக்கு மிகவும் கூச்சமாக இருந்தது. அந்தக் கேள்விக்கு என்ன பதில் சொல்லுவதென்று எனக்குத் தெரியவில்லை.

மோட்டாருக்கு வெளியே தோன்றிய இயற்கைக் காட்சி இன்ப மயமாக இருந்தது. சூரியன் மலை வாயில் விழும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. நாங்கள் குன்றின் வழியாக மேலே மேலே ஏறிக் கொண்டிருந்தோம்.

மலையில் நாங்கள் செல்லும் உயரம் அதிகமாக ஆகக் குளிரும் அதிகமாகிக் கொண்டிருந்தது. எனவே நான் கம்பளிச் சால்வையை எடுத்துப் போர்த்திக் கொண்டேன். காப்டன் ராய் குளிரைச் சிறிதும் லட்சியம் செய்யாமல் உணர்ச்சியற்று உட்கார்ந்திருப்பது போல் எனக்குத் தோன்றியது.

"குளிர் அதிகமாக இருக்கிறதே. உங்களுக்குத் தெரியவில்லையா!" என்று கேட்டேன்.

"உம்" என்ருர் காப்டன் ராய்.

அப்போதுதான் அவரது சிந்தனை கலைந்தது.

"உங்களுக்குக் குளிராக இல்லையா என்று கேட்டேன்" என்றேன் மறுபடியும்.

"ஆமாம், ஆமாம். நான் எங்கேயோ ஞாபகமாக இருந்து விட்டதால் குளிரைக் கவனிக்கவில்லை."

"நீங்கள் அடிக்கடி இப்படிச் சிந்தனையில் ஆழ்ந்து விடுகிறீர்கள்."

"நீங்கள் சொல்லுவது உண்மைதான்."

"எவ்விஷயத்தைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தீர்கள்!"

"இந்த உலகத்தைப் பற்றியும் என்னைப் பற்றியும்தான் சிந்தித்துக் கொண்டிருந்தேன். இந்த உலகத்தில் எனது நிலைமை என்ன! நான் சந்தோஷமாக இருக்கும் போது இந்த உலகில் என்னைப் போல் உயர்ந்தவர் எவருமே இல்லை என்று தோன்றுகிறது. அச்சமும் கலக்கமும் ஏமாற்றமும் என் மனத்தைச் சூழ்ந்து கொள்ளும்



போது நான் ஓர் இருண்ட படுபாதாளத்தில் விழுந்து விட்டவன்போல் எனக்குத்தோன்று கிறது. அத்தகைய சமயங்களில் என்னை உலகமே கைவிட்டு விட்டது என்ற எண்ணம் என் மனத்தை வாட்டுகிறது."

"நீங்கள் ஒரு தத்துவ ஞானிதான், சந்தேகமே இல்லை."

இவ்விதம் நான் சொன்னதும் காப்டன் ராய் உரக்கச் சிரித்து விட்டுக் கூறினார்.

"நானு தத்துவஞானி! என்னுடைய அர்த்த மற்ற உளறலைக் கேட்கும்போது, நான் தத்துவஞானியாக இருக்க வேண்டும் என்று உங்களுக்குத் தோன்றுகிறதா! ஆமாம். இந்த உலகில் அர்த்தமில்லாமல் மடத்தனமாகப் பேசுவோரைத் தத்துவ ஞானிகள் என்று குறும்பாகக் கூறுவது உண்டு!"

"இல்லை, இல்லை. நான் விளையாட்டாகவோ, குறும்பாகவோ அவ்விதம் கூற வில்லை. உண்மையாக என் மனத்தில் தோன்றியதைத் தான் சொன்னேன்."

"விமலா! நான் தத்துவ ஞானி இல்லவே இல்லை. தத்துவ ஞானத்துக்கும் எனக்கும் வெகு தூரம்! எல்லோரையும் போல் நானும் குற்றம் குறைகள் உள்ள ஒரு சாதாரண மனிதன்" என்றார் காப்டன் ராய்.

காப்டன் ராய் என்னை 'விமலா' என்று மிகவும் உரிமையுடன் அழைத்தது என் மனத்தை என்னவோ செய்தது. என்னை வெகு காலமாக அறிந்தவர்போல் அல்லவா 'விமலா' என்று கூப்பிடத் தொடங்கி விட்டார்! பேஷ்! இவரா சாதாரண மனிதர்!

சூரியன் மறைந்து உலகைச் சிறிது சிறிதாக இருள் சூழ்ந்துகொண் டிருந்தது. திடீரென்று நான் மேற்குத் திசையை நோக்கினேன். அத் திசையில் இருண்ட மேகங்கள் திரண்டு வந்து கொண் டிருந்தன.

இச் சந்தர்ப்பத்தில், "நாம் அடுத்த தங்கு மிடத்துக்கு வந்திருக்கிறோம். இதற்கு அடுத்த தங்குமிடம் வெகு தூரம் இருப்பதால் இரவு இங்கேயே இருந்து விட்டுச் செல்லுவதுதான் நல்லதென்று நினைக்கிறேன்" என்றார் டிரைவர்.

நானும் அவ்விதமே செய்ய இசைந்தேன். எனவே, இரவு நாங்கள் அங்குள்ள பிரயாணிகள் பங்களாவில் தங்கினோம்.

* * *

நான் முழுவதும் மோட்டாரில் உட்கார்ந்து வந்ததால், என் தேகத்தில் உள்ள ஒவ்வோர் உறுப்பும் வலிக்கத் தொடங்கியது.

எனவே, அந்தக் குளிர்ந்த வேளையில் சிறிது தூரம் உலாவி வந்தால், எவ்வளவு ஆனந்தமாக இருக்கும்! அத்துடன் நிலவு வெளிச்சத்தில் ஹிமயமலையின் இயற்கைக் காட்சிகளைப் பார்த்து ரசிக்க வேண்டும் என்ற ஆசையும் என் மனத்தில் எழுந்தது. அந்த அற்புதக் காட்சிகள் கண்களுக்குத் தெவிட்டாத விருந்தாக இருந்தன. அவை உடலின் சோர்வை மாத்திரமல்ல; உள்ளத்தின் சோர்வையும் அகற்றுபவையாக இருந்தன.

என் மனத்தில் எழுந்த இந்த எண்ணத்தை அறிந்தவர் போல், "வெளியே சிறிது நேரம் உலாவி விட்டு வரலாமா!" என்று கேட்டார் காப்டன் ராய்.

யாதொரு ஆட்சேபணையு மின்றி நான் உடனே அவருடன் புறப்பட்டேன்.

நாங்கள் பேசிக்கொண்டே குன்றின் வழியாக நேரம் போவதே தெரியாமல் சென்று கொண் டிருந்தோம்.

அச்சமயம் நான் திடீரென்று கீழே கிடந்த ஒரு பெரிய கல் தடுக்கி, உருட்டி யடித்துக் கொண்டு விழப் போகும் தருவாயில், காப்டன் ராய் என்னைப் பிடித்துக் கொண்டார். அவர் பிடித்துக் கொள்ளாவிடில் நான் கீழே விழுந்து எனக்குக் கடுமையான காயம் ஏற்பட்டிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

அப்போதுதான் நான் எதிர்பாராத சம்பவம் நிகழ்ந்தது. அவரது உதவியால் கீழே விழுந்து விடாமல் நின்ற என்னை, அவர் அப்படியே இறுக அணைத்துக் கொண்டார். நான் என்னை விடுவித்துக் கொள்ள முயற்சித்தபோது, அவரது பிடி மேலும் இறுகியது.

"சீ, நீங்கள் ஒரு மனிதரா!" என்று கூறி மேலும் என்னை விடுவித்துக் கொள்வதற்கு முயன்றேன்.

அப்போது அவர், "இதில் என்ன குற்றம், விமலா! இரண்டு இருதயங்கள் ஒன்றாக இணைய விரும்புவது இயற்கைதானே" என்று சமாதானம் கூறினார்.

அவரது வார்த்தைகள் என் ஆத்திரத்தை இன்னும் அதிகப்படுத்தி விட்டன.

"நீங்கள் மனிதரா, மிருகமா!" என்று கூறிக்கொண்டே, என் பலம் முழுவதையும் உபயோகித்து அவரை அப்பால் தள்ளினேன். நான் இப்படிச் செய்வேன் என்று அவர் எதிர்பார்க்கவில்லை போலும். அவர் கீழே விழுந்து உருண்டு, அருகில் இருந்த ஒரு சிறு பள்ளத்தில் போய்த் தொப்பென்று விழுந்தார்.

நான் உடனே திரும்பிப் பார்க்காமல் பங்களாவை நோக்கி ஓடினேன். காப்டன் ராயின் கதி என்னவானால் எனக்கு என்ன! தனிமையாக இருந்த என்னிடம் அவர் நடந்துகொண்டது மன்னிக்க முடியாத குற்றம் அல்லவா!


நான் பங்களாவுக்குச் சென்றதும் பெரு மழையுடன் மிகுந்த சப்தத்துடன் புயல் காற்று அடிக்கத் தொடங்கியது.


நான் பங்களாவுக்குள் சென்று ஓர் அறையில் படுத்துக் கொண்டேன்.

காப்டன் ராயின் கதி என்ன ஆகியிருக்கும்! அவரை மறந்துவிட நான் எவ்வளவோ முயற்சித்தும் என்னால் அது முடியவில்லை. என் மனம் அமைதியின்றித் தவித்தது.

ஒரு மணி நேரத்துக்குப் பிறகு வாயிற்புறத்தில் திடீரென்று ஏதோ சப்தம் கேட்டது.

நான் திடுக்கிட்டு எழுந்தேன். பிறகு டிரைவர், பங்களா, வேலைக்காரன் இவர்களுடன் நான் வெளியே சென்றபோது, கதவுக்கு அருகில் காப்டன் ராய் விழுந்து கிடந்தார்.


பார்வைக்கும்
சுகத்திற்கும் அடையாளம்...
TWO BY TWO
FULL VOILE
ராஜ்ரேகா
ராஜ்லக்ஷ்மி
ராஜ்ஷோபா
ராஜ்சுந்தரி
சூபர்பைன்
மெர்ஸிரைஸ் செய்யப்பட்டது
பயனீர் பீஸ்குடன் கம்பெனி
மாபத்லால் பைன் மில்ஸ்
நவ்ஸாரி



ஆயிரத்துத் தொள்ளாயிரத்து ஐம்பத்து நான்கு ஆண்டுகளுக்கு முன் நடந்தது அது. ஜெருசலத்தில் உள்ள சிறு மாட்டுக் கொட்டிலில் பிறந்ததில் இருந்தே பல கஷ்டங்களுக்கு உள்ளாகிறார் ஏசுநாதர். எல்லாக் கஷ்டங்களையும் தாண்டி வளர்ந்து மக்களுக்கு அன்பு உபதேசம் செய்கிறார். நீதியற்ற ஆட்சியில் உள்ள கொடுமைகளை விளக்கிக் கூறி அன்பு ஆட்சி மலரச் செய்கிறார். அவருக்குச் சீடனாக இருந்த ஒருவனே இயேசுவைக் காட்டிக் கொடுக்கிறான். அந்தக் காலத்து மன்னன் இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்றுவிட உத்தரவிட்டு விடுகிறான். இந்தக் காட்சிகள் எல்லாம் மூன்று மணி நேரத்தில் நம் கண் முன் நிகழ்கின்றன. இந்த அற்புத நாடகத்தை நவாப் ராஜமாணிக்கம் கோஷ்டியார் சென்னை ஒற்றைவாடைத் தியேட்டரில் நடித்துக் காட்டி வருகிறார்கள். பக்தியும், கடவுள் தத்துவமும் ஒன்றை ஒன்று பின்னிப் பிணைந்து கொண்டு செல்கிறது நாடகம். இந்த நாடகத்துக்கு 'கல்கி' ஆசிரியர் திரு சோமு அவர்கள் சென்ற மூன்றாந் தேதி தலைமை வகித்தபோது நவாப் ராஜமாணிக்கம் ராஜ உடையிலே வந்து திரு சோமு அவர்களுக்கு மலர் மாலை அணிவிப்பதை மேலே படத்தில் காணலாம்.

எனக்குப் பகீர் என்றது. அவரது உடைகள் எல்லாம் சொட்டச் சொட்ட நனைந்திருந்தன. அவரது உடம்பு பனிக்கட்டியைப் போல் ஜில்லென்று இருந்தது. அவரது கை, கால்களில் உணர்ச்சியில்லை. அவரது உடல் இறந்தவரைப்போல் விறைத்திருந்தது.

நான் பதறிவிட்டேன். உடனே அவரை உள்ளே தூக்கிச் சென்றோம். நனைந்திருந்த அவரது உடைகளைக் களைந்த பின், என் கம்பளிப் போர்வையை அவர்மீது போட்டேன். ராயின்மீது உஷ்ணப்படுவதற்காக அடுப்பை அருகில் கொண்டு வரும்படி சொன்னேன்.

அச்சமயம் என் மனச் சாட்சி என்னை இடிக்கத் தொடங்கியது.

"காப்டன் ராயின் மரணத்துக்கு நீதான் காரணம். உண்மையிலே உன்னிடம் காதல் கொண்ட ஒருவனை நீ கொன்று விட்டாய். 'நான் இறந்தால், என்னைப் பற்றி விசாரிப்பவர் இந்த உலகில் ஒருவருமே இல்லை' என்று ராய் கூறிய வார்த்தைகள் உன் கல் மனத்தை உருக்கவில்லை. உற்றார் உறவினர் எவருமற்ற அவரது மனம் உன்னை நாடியதில் தவறு என்ன!" என்றது என்னுடைய மனச் சாட்சி.

நான் நடுநடுங்கி விட்டேன். காப்டன் ராயை நான் பிடித்துத் தள்ளியதால் அவரது நெற்றியில் காயமேற்பட்டு உதிரமும் வழிந்துகொண்டிருந்தது. அதைக் கண்டதும் என் கண்களில் நீர் ததும்பியது.

அப்படியே காப்டன் ராயை அணைத்துக் கொண்டு வெகு நேரம் திக்பிரமை பிடித்து உட்கார்ந்திருந்தேன். காப்டன் ராயின் உடல் சிறிதும் அசையவே இல்லை.

அவ்வாறு ஒரு மணி நேரம் நரகவேதனையாகக் கழிந்தது. கடைசியில், நான் அவரை அணைத்துகொண்டிருந்ததால் ஏற்பட்ட உஷ்ணத்தினால்தானோ என்னவோ, அவரது உடல் சிறிது அசையத் தொடங்கியது. உடனே நான் அவரது கைகளையும் கால்களையும் பிடித்து விட்டேன். உணர்ச்சியற்று, பனிக்கட்டிபோல் 'ஜில்' என்றிருந்த அவரது உறுப்புக்களில் சிறிது சிறிதாக உஷ்ணம் ஏற்படத் தொடங்கியது.

அதன் பலனாக காப்டன் ராய்க்குக் கொஞ்சம் கொஞ்சமாக உயிர் வரலாயிற்று. அவர் புரண்டு படுத்தார். அதைக் கண்ட எனக்கும் போன உயிர் திரும்பிவருவது போல் இருந்தது.

கடைசியாக, காப்டன் ராய் மெதுவாகக் கண்களைத் திறந்தார்.

அப்போது அவர் கண்ட காட்சியை அவரால் நம்ப முடியவில்லை போலும். எனவே, "நான் எங்கு இருக்கிறேன்!" என்று தயங்கிக் கொண்டே கேட்டார்.

"என்னுடன் இருக்கிறீர்கள்!" என்றேன்.

"நீ யார்!"

"நான்தான் விமலா. உங்களுக்குத் தெரியவில்லையா!"

"விமலா!......நீயா! உண்மையாகவா!"

இவ்வாறாக, சில மணி நேரத்துக்குள் என் வாழ்க்கையிலேயே எதிர்பாராத மாறுதல் ஏற்பட்டது. இந்த உலகில் உற்றார் உறவினர் எவருமே இல்லாத காப்டன் ராய்க்கு நான் ஆயுள் முழுவதும் வாழ்க்கைத் துணைவியானேன். இது விதியின் விசித்திரம் அல்லவா!



6. எங்கே போனான்?

மதுரநாயகம் கேட்ட கேள்விக்கு ரமணி கண் கலங்கப் பின்வருமாறு கூறினான். "எனக்கு ஒருவரின் கீழ் வேலை செய்யக் கூடாது என்பது இல்லை, சார். யாரேனும் வேலை கொடுத்தால், கொடுத்த வேலையை ஒழுங்காகச் செய்வேன். பொய் சொல்ல மாட்டேன். என்னைப் பற்றி நானே சொல்லுகிறேனே என்று நினைக்காதீர்கள். சிபாரிசு செய்ய எனக்கு வேறு யார் இருக்கிறார்கள்? நானோ அனாதை!"

உடனே மதுரநாயகம், "சரி, வருத்தப்படாதே! எங்கள் சபா முதலாளியிடம் சொல்லிப் பார்க்கிறேன். அவர் உன்னை எடுத்துக் கொள்ளலாம். இதற்காகத்தான் உன்னை இங்கே வரச் சொன்னேன்" என்றார்.

அன்றே முதலாளி மோகனரங்கத்திடம் ரமணியை அழைத்துச் சென்றார். அவனை நாடக சபாவில் சேர்த்துக் கொள்ள அனுமதி கேட்டார். ரமணி ஒரு அனாதை என்பதைக் கேட்டதும் முதலில் அவர் சேர்த்துக் கொள்ள மறுத்தார். மதுரநாயகம் மிகவும் சிபாரிசு செய்யவே, "சரி, உனக்கு நடிக்கத் தெரியுமா? இதற்கு முன் எங்கேனும் நடித்திருக்கிறாயா?" என்று ரமணியைக் கேட்டார்.

"இல்லை சார். சொல்லிக் கொடுத்தால் பழகிக் கொள்ளுவேன்" என்று சொன்னான் ரமணி.

"அதெல்லாம் இப்போது வேண்டாம். ஆபீஸ் பையனாக வேலை பார்த்த ஞானமுத்து ஒரு வார லீவில் ஊருக்குப் போனவன் இன்னும் திரும்பி வரவில்லை. பதினைந்து நாளாகிறது. தகவலும் இல்லை... மதுரநாயகம், அவன் இனிமேல் வந்தால் 'வேண்டாம்' என்று சொல்லி அனுப்பி விடுங்கள். அவனுக்குப் பதிலாக இவனைச் சேர்த்து விடுங்கள். நாடகத்திலே மற்றப் பையன்கள் எப்படி நடிக்கிறார்கள் என்று சும்மா இருக்கும் போது பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும். ஒரு வருஷம் கழிந்து நடிப்பதைப் பற்றி யோசிக்கலாம்" என்றார் முதலாளி.


ரமணி அன்றே பத்து ரூபாய் சம்பளத்தில் ஆபீஸ் பையனாகச் சேர்ந்து விட்டான். பொய் சொல்லாமல், திருடாமல் யோக்கியனாகவே இதுவரை அவன் நடந்து வந்திருக்கிறான். அப்படிப்பட்டவன் இப்போது பட்டுத் துணியைத் திருடி விட்டான் என்றால், மதுரநாயகத்தால் அதை உடனே நம்பி விட முடியுமா?

* * *

மாலை மணி ஆறு அடித்தது. ரமணியைப் பற்றி யோசித்துக் கொண்டே அறையில் உட்கார்ந்திருந்த மதுரநாயகம் மெதுவாக எழுந்தார். அறையை விட்டு வெளியே வந்தார். அங்கிருந்து தெருவுக்குச் சென்றார். தெருவில் ரமணி நிற்கிறானா என்று சுற்றுமுற்றும் பார்த்தார். காணவில்லை. 'ஒருவேளை வீட்டுக்குப் போயிருப்பானோ!' என்ற சந்தேகம் அவருக்குத் தோன்றியது. உடனே, நேராக வீட்டை நோக்கி நடந்தார். போகும்போதே வழியில் ரமணி நிற்கிறானா என்று பார்த்துக் கொண்டுதான் போனார். அவனைக் காணோம்!

வீட்டுக்குள் நுழைந்ததும் முதல் கேள்வியாக, "ரமணி இங்கே வந்தானா?" என்றுதான் கேட்டார்.

"இல்லையே! அவன் எங்கே போனானோ? ஏன் அவனைத் தேடு



ஒட்டகம் அணிலாக மாறும்.
திருப்பிப் பாருங்கள்!

கிறீர்கள்?" என்று கேட்டாள் மதுர நாயகத்தின் மனைவி கமலாதேவி.

"ஒன்றுமில்லை. சும்மாதான் கேட்டேன்" என்று கூறிவிட்டு நேராகத் தமது அறைக்குள் சென்றார். சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டு, பனியனுக்கு மேல் அங்கவஸ்திரம் ஒன்றை எடுத்துப் போர்த்துக் கொண்டார். அப்படியே போய் வாசலில் நின்றார். இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டேயிருந்தார். ரமணி வரவில்லை.

'எங்கே போயிருப்பான்? அவனைத் தனியாகப் பார்த்துப் பேசினால்தான் உண்மை தெரியும்' என்று நினைத்துக் கொண்டே வாசலில் நின்றார். அவரால் சிறிது நேரம் கூடப் பொறுமையாக நிற்க முடியவில்லை. வாசலை விட்டுக் கீழே இறங்கினார். 'விடு விடு' என்று நடந்து கடைவீதிப் பக்கமாகச் சென்றார். ரமணியைத் தேடித் தேடிப் பார்த்தார். சுமார் ஒரு மணி நேரம் தேடியும் அவன் அகப்படவில்லை!

"சரி, வீட்டுக்குப் போவோம். இரவு எப்படியும் சாப்பிட வந்து விடுவான்" என்ற எண்ணத்துடன் வீடு திரும்பினார். வீட்டுக்குள் சென்றதும், "இன்னும் ரமணி வரவில்லையா?" என்று மனைவியிடம் கேட்டார்.

"நீங்கள் பார்க்கவில்லையா? அரை மணி நேரத்துக்கு முன்பு இங்கு வந்தானே! உடனே போய் விட்டான் போலிருக்கிறது. நான் அடுக்களையில் இருந்தேன்" என்றாள் கமலாதேவி.

"அடடே! அப்படியா! நான் அவனையல்லவா தேடி விட்டு வருகிறேன். அவன் ஏதாகிலும் சொன்னானா?"

"ஒன்றும் சொல்லவில்லையே?" என்றாள் அவர் மனைவி.

"அவன் எவ்வளவு நல்லவனாக, யோக்கியனாக நடந்து கொள்கிறான்! அவன் மேல் வீண் பழி சுமத்துகிறார் எங்கள் முதலாளி! அவன் திருடனாம்; அயோக்கியனாம்!" என்றார் அவர்.

"அதற்கு நீங்கள் என்ன சொன்னீர்கள்? 'என் ரமணி திருடனும் இல்லை; அயோக்கியனும் இல்லை. தங்கக் கம்பி' என்று உங்கள் முதலாளியின் தலையில் அடித்துக் கூறினீர்களாக்கும். ஆமாம், அவன் எதைத் திருடி விட்டான்?" என்று கேட்டாள்.


"உனக்கு எல்லாம் வேடிக்கையாகத்தான் இருக்கும். பாவம், நாடகத்துக்கு வாங்கி வைத்த மூன்று கெஜம் பட்டுத் துணியைத் திருடி விற்கப் பார்த்ததாக ரமணி மீது பழி போடுகிறார்கள்!"

"உங்களுக்கு எல்லாமே ஒன்றுதான். வெண்ணெய்க்கும் சுண்ணாம்புக்கும் வித்தியாசம் தெரியாது! உங்களை ஏமாற்றுவது சுலபம் என்று அந்த ரமணிக்குக் கூடத் தெரிந்திருக்கிறது. எந்தப் புற்றில் எந்தப் பாம்பு இருக்குமோ?" என்று எரிச்சலோடு கூறினாள் கமலாதேவி. ரமணிக்கு இலவசமாகச் சாப்பாடு போட்டு, வீட்டிலேயே வசிக்க இடமும் கொடுத்தது ஆரம்பத்திலிருந்தே அவளுக்குக்கொஞ்சமும்பிடிக்கவில்லை. இது தான் நல்ல சமயம் என்று நினைத்து அவள் அவனைத் தாக்கிப் பேச ஆரம்பித்து விட்டாள்!

"கமலா, ரமணியைப் பற்றி உனக்குச் சரியாகத் தெரியாது. அவன் இப்படி எல்லாம் தவறான வழியில் போகவே மாட்டான். நேர் வழியில்தான் செல்வான்" என்றார் மதுரநாயகம்.

"ஆமாம். திரும்ப வேண்டிய இடத்திலே கூடத் திரும்பாமல் நேராகப் போய் எதிரிலே இருக்கும் சுவரிலே முட்டிக் கொள்வான். அப்படித்தானே!" என்றாள்.

"கமலா, வீணாக அவனைச் சந்தேகிக்காதே! பாவம், அவனுக்குத் தீயவர்களைக் கண்டால் கூடப் பிடிக்காது. நாடகங்களில் கூடக் கெட்ட குணங்களைக் கற்றுக் கொடுக்கும் நாடகங்களை அவன் விரும்ப மாட்டான். கமலா, அவனைப் பற்றி ஒன்றே ஒன்று சொல்லுகிறேன். கொஞ்சம் பொறுமையாகக் கேள். கிருஷ்ணலீலா, துருவன், பிரஹலாதா போன்ற நாடகங்களுடன் புதுமையாகவும் பல குழந்தை நாடகங்கள் போட வேண்டுமென்று கருதி, நல்ல நாடகங்களை எழுதித் தருகிறவர்களுக்குப் பரிசு தருவதாக விளம்பரம்



'அனஸின்'

விஞ்ஞான முறையில் நான்கு மருந்துகளின் ஒரு கலப்பு.



'அனஸின்' விஞ்ஞான முறைப்படி சேர்க்கப்பட்ட நான்கு மருந்துகளின் கலப்பாகும். அவை நரம்புகளின் முக்கிய சேர்க்கை பாகங்களில் கூட்டாக வேலை செய்து விரைவில் வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி, மற்றும் தசை நார்களில் நோவு இவற்றை நீக்கும். அனஸினில் அடங்கிய சில நான்கு மருந்துகள் —

1. கொயினா: ஜுரத்தடுப்பு குணமும், பலவிருத்தி செய்வதாகும் பிரசித்தி பெற்றது. ஜுரத்தைக் குறைப்பதில் மிகத் துரிதமானது.
2. காப்பீன்: பலஹீனத்திற்கும், மனச்சோர்வுக்கும் மிதமான தூண்டுகோல் மருந்தாக விதிக்கப்பட்டிருக்கிறது.
3. பினஸிடின்: ஜுரத்தடுப்பு, வலி நிவாரணத் தன்மைகளுக்கு பெயர் பெற்றது.
4. அஸிடில் ஸலிஸிலிக் ஆஸிட்: தலைவலி அது போன்ற எல்லா வலிகளையும் போக்குவதற்கு மிகவும் உபயோகமுள்ளது.



அனஸினிலுள்ள இந்த நான்கு மருந்துகளும் ஒரு டாக்டரின் குறிப்புக்கு ஒப்பாகும். 'அனஸின்' இருதயத்திற்கு தீங்கு விளைவிப்பதோ அல்லது வயிற்றுக்கு கோளாறு உண்டாக்குவதோ கிடையாது. வலி, தலைவலி, ஜலதோஷம், ஜுரம், பல்வலி மற்றும் தசைகளில் வலி முதலியவற்றிலிருந்து விரைவிலும், பத்திரமாகவும், நிச்சயமாகவும் நிவாரணம் பெற எப்பொழுதும் அனஸினையே கேட்டு வாங்குங்கள்.

லக்ஷக்கணக்கான மக்களுக்கு நிவாரணம் அளிக்கின்றது.

A-42

செய்தோம். உடனே ஏராளமான நாடகங்கள் வந்தன. அவற்றை நான் இரவு வெகு நேரம் வரை படிப்பது உனக்குத் தெரியும். இதை அவனும் கவனித்திருக்கிறான். ஒரு நாள்—நீ உன் தாயார் வீட்டுக்குப் போயிருந்த சமயம் என்று நினைக்கிறேன் — அவன் என்னிடம் வந்து, 'சார், நானும் இந்த நாடகங்களைப் படித்துப் பார்க்கலாமா?' என்று கேட்டான். 'சரி' என்று கூறி இரண்டு நாடகங்களை அவனிடம் கொடுத்தேன். அந்த இரண்டையும் அவன் படித்துப் பார்த்தான். கடைசியில் அந்த இரண்டிலே ஒன்றை என்னிடம் கொடுத்து, 'இது நன்றாக யிருக்கிறது. இன்னொன்று மோசம்' என்றான். 'ஏன், அது உனக்குப் பிடிக்க வில்லையா?' என்று கேட்டேன். 'ஆமாம். பொய் சொல்வது, திருடுவது—இப்படிப்பட்ட பழக்கங்களைக் கற்றுக் கொடுக்கும் நாடகமாகவே அது இருக்கிறது. அதை மேடையில் பார்த்தால் பலர் கெட்டு விடுவார்களே என்று பயந்து தான் ஒதுக்கி விட்டேன்' என்றான். உடனே நானும் அந்த இரு நாடகங்களையும் படித்துப் பார்த்தேன். அவன் சொன்னது முற்றிலும் சரியாகவே இருந்தது. நாடகத்தில் கூடத் தீமையை விரும்பாதவன் ரமணி! அவனா திருடியிருப்பான்?'' என்று கேட்டார்.

"இப்போதுதான் புரிகிறது! அது போல் திருட்டு நாடகங்களைப் படித்துப் படித்துத்தான் அவனும் திருடப் பழகியிருக்கிறான் போலிருக்கிறது! தனக்கு மட்டும் அது தெரிந்தால் போதும், மற்றவர்களுக்கும் தெரிய வேண்டாம் என்று நினைத்துத் தான் அப்படிச் சொல்லியிருக்கிறான்.''

"கமலா, வீணாக அவன்மீது குற்றத்தைச் சுமத்தாதே! நான் தினமும் பேனா, கடிகாரம், மணிபர்ஸ் முதலியவற்றை மேஜைமேல் தானே வைக்கிறேன்? அவன் நினைத்திருந்தால் எதை வேண்டுமானாலும் எடுத்திருக்கலாமே!'' என்றார் மதுரநாயகம்.

"உங்களுக்குத்தான் ஞாபக மறதி அதிகமாயிற்றே! மணிபர்ஸில் முதலில் எவ்வளவு வைத்தோம் என்பது தெரிந்தால் அல்லவா குறையும் போதும் எவ்வளவு குறைகிறது என்று தெரியும்?'' என்றாள் கமலா.

"கமலா, நீ சொல்வதைத்தான் திருப்பித் திருப்பிச் சொல்லுவாய்.''

"ஆமாம். நீங்கள் மட்டும் புதிதாகச் சொல்லுகிறீர்களாக்கும்! அவன் எக்கேடு கெட்டால் எனக்கு என்ன? நேரமாகிறது, சாப்பிட வாருங்கள்'' என்று கூறிவிட்டு அடுக்களைக்குச் சென்றாள் கமலா தேவி.

மதுரநாயகம் சாப்பிடும் போதெல்லாம் ரமணியைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தார். இரவு தூக்கம் கூட வரவில்லை! 'எங்கே போயிருப்பான்? சாப்பிடக்கூட வரவில்லையே!' என்ற யோசனையிலே இருந்தார். (தொடரும்)

டி.கே.சி.யின் கடிதங்கள்

மீனம்பாக்கம், சென்னை.
14-1-41

இப்போது ஒரு பாட்டைத் திருத்தத்துடன் சொல்லுகிறேன்.

வாணனுடைய அரசன் ரொம்பவும் பராக்கிரமம் உள்ளவன். அவனுக்குக் கீழ்ப் படிந்து விட்டால் மற்ற அரசர்கள் காரியம் க்ஷேமந்தான். "வாணா எங்களை மன்னிக்க வேண்டும், காக்க வேண்டும்'' என்று பணியாதவர்கள் பாடு கஷ்டந்தான், என்பது பாவம். அவனுடைய சேனைகள் படையெடுத்து எதிர்த்தவர்களுடைய நாட்டை நாசக்கோட்டை செய்து விடும். சோலையெல்லாம் அழிந்து போகும்: நகரமெல்லாம் தூள் தூளாகச் சிந்திப்போகும், அணைகளையும் கரைகளையும் இடித்தெறிந்து விடுவார்கள். பிறகு தண்ணீர் வருவதேது, பயிர் செய்கிறதென்றும் பயிரைப் பேணுகிறதென்றும் உண்டா? இப்படியெல்லாம் பாலையாய்ப் போய் மழை பெய்கிற தென்பதும் இல்லாமற் போய் விடுமாம்:

தீய்ந்து பொழிலாக,
[1][சிந்தி] நகராக
தூர்ந்து மணிநீர்த்
துறையாக,—ஏந்து[2] [பயிர்]
[3][பே]ணாக, மாரி
[4][பெய]லாக! பொன்னெடுந்தேர்
வாணா! கா என்னாதார்
மண்.

பெருந்தொகை 1163-ம் செய்யுளின் திருத்தம் இது. புஸ்தகத்தில் பாடம்:

(1) "போந்து" (3) "பூ"
(2) "ஏந்துமுலை" (4) "விழலாக"

டி. கே. சிதம்பரநாதன்

தெம்பூட்டுகிறது, மணமூட்டுகிறது!

மலரின் பனித்துளிகள் போல புதுமையையும், ரம்மிய மணத்தையும் உங்கள் மேனியில் பெய்கிறது எக்லா டால்க். குளித்தபின், உடை யணியுமுன் உடம்பில் எக்லா டால்கம் பவுடரைப் பூசுங்கள்.



வெப்ப நாளிலும் குளுமை, இதம் அளிப்பது எக்லா. அது வியர் வையை உறிஞ்சும். மெல்லிய எக்லா ஒரு லட்சிய முகப்பவுடரும் கூட.

கால்கேட்


எக்லா

டால்க்பவுடர்



இந்தியா விரும்பும் நறுமண டால்க்

EC/G/I



19. உஸ்தாத் மகள்

"மிஸ்டர் ரவீந்திரன்!" என்றார் டாக்டர் சுரேஷ். படபடப்போடு கல்யாணியின் பேச்சிலே மனம் பொங்குகின்ற ரவீந்திரன் டாக்டரைப் பார்த்தான். கல்யாணி அப்படியே திகைத்துப் போய் நின்றாள்.

"ஸ்கங்க் என்பதாக வட அமெரிக்கக் காடுகளில் ஒரு மிருகம் இருக்கிறது கேள்விப்பட்டிருக்கிறீர்களா?" என்று பேச்சை ஆரம்பித்தார் டாக்டர்.

"கேள்விப்பட்டதில்லையே!" என்றான் ரவீந்திரன்.

"அதற்குக் கோபம் வந்தால் என்ன ஆகும் தெரியுமோ? உடனே அதைச் சுற்றி ஒரு துர்காற்றம் உண்டாகும். அதைத் தாக்க வருகிற மிருகங்களால் சகிக்க முடியாதபடி இருக்கும் அது. அப்படியே எதிரி ஓடியே போய் விடும்!"

ரவீந்திரனுக்கு முகம் கருங்கியது. இதை எதற்கு டாக்டர் இப்பொழுது சொல்லுகிறார் என்று அவனுக்குப் புரியவில்லை. சுரேஷ் தொடர்ந்து பேசினார்:

"மனிதர்களும் அந்த மாதிரி ஸ்கங்குகளாகத் தங்களை மாற்றிக்கொண்டு விட்டால் பிறகு எதிரி மட்டுமில்லை, நண்பர்களுமே அவர்களை நெருங்க முடியாது தான்!" என்றார் டாக்டர்.

அப்புலிங்கத்துக்கு டாக்டரின் பேச்சில் அபஸ்வரம் விழுவது போல் பட்டது. ஆனாலும் யோசனையில்லாமல் பேச மாட்டாரே என்று உடனேயே ஒரு திகைப்பும் உண்டாயிற்று.

"நாகரத்தினம் இந்த மாதிரி ஒரு காட்டுப் பிராணியாக நடந்து கொள்வதால் தான் அவளுக்கு நண்பர்களோ பகைவர்களோ நிலைத்து நிற்பதில்லை. பகைவர்கள் கூட அவளுக்குப் பக்கத்திலே போய்ச் சண்டை போடக் கூசுவார்கள். உண்மையில் நம்முடைய உணர்ச்சிகளை அடக்கிப் பேசக் கற்றுக் கொண்டு விட்டோமானால் அதுவே பெரிய கலை!"

எங்கோ ஆரம்பித்து எப்படியோ வட்டம் சுற்றினார் டாக்டர். அப்புலிங்கத்துக்கு இப்பொழுது விஷயம் புரிந்தது. கல்யாணியின் பேச்சைத் தொடர்ந்து இனி வரப் போகும் யோசனைகளையும் முடிவுகளையும் ரவீந்திரன் பொறுமையோடு செவி கொடுத்துக் கேட்க வேண்டும் என்பதற்காகவே இப்படி ஒரு கூர்மையான குத்தல் வார்த்தையைப் போட்டு டாக்டர் ரவீந்திரனை உலுக்கினார் என்று அப்புலிங்கம் புரிந்து கொண்டான். ரவீந்திரனுடைய முகத்தைப் பார்த்தான். கருங்கிய முகத்தில் இப்பொழுது நாகரத்தினத்தைப் பற்றி டாக்டர் செய்த விமர்சனம் ஒரு மலர்ச்சியைக் கொடுத்தது. ரவி சொன்னான்:

"டாக்டர், நீங்கள் பேச்சை ஆரம்பித்ததைப் பார்த்தால் என்னைத்தான் அந்த அமெரிக்கக் காட்டு மிருகம் என்று சொல்லப் போகிறீர்களோ என்று பயந்தேன் —"

"மிஸ்டர் ரவி! யோசித்துப் பார்த்தால் நாம் ஒவ்வொருவருமே அந்த மிரு

கத்தைப் போலத்தான் ஒரொரு சமயம் நடந்து கொள்ளுகிறோம். யார்தான் 'ஸ்கங்க்' இல்லை? சொல்லுங்கள். மனிதனுடைய இயற்கை அது. ஆனால் அந்த இயற்கையைக் கட்டுப்படுத்தி, மனசில் எழுகிற கோபத்தை அடக்கிக் கொண்டு நிதானம் தவறாமல் பேசுவதிலும், நடந்து கொள்வதிலுந்தான் மனிதன் மிருகத்திலிருந்து மாறுபடுகிறான். அதான் சொன்னேனே அப்படிக் கட்டுப்பாட்டோடு பேசுவது ஒரு கலை யென்று. புல்லாங்குழல் வாசிப்பதைப் போல! அபஸ்வரந்தான் மனிதனுடைய இயற்கை. அதை அடக்குவதிலும், ஆரோஹணை அவரோஹணைக் கிரமத்தில் சஞ்சரிப்பதிலும்தானே உங்களுடைய கலைத்திறமை இருக்கிறது!" என்று ஒரு போடு போட்டார் டாக்டர் சுரேஷ்!



கோபமும் ஆனந்தமும் ஒன்றை யொன்று சமன் செய்து விடுகிற முறையிலே இருந்தன ரவீந்திரனுக்கு டாக்டரின் வார்த்தைகள்! மௌனமாக இருந்தான்.

"மிஸ்டர் ரவி! ஒன்று மட்டும் சொல்கிறேன். முன்கோபத்தை அடக்கி சுஸ்வரமாகப் பேசுகிற கலை இருக்கிறதே அது, புல்லாங்குழல் வாசிப்பதைவிட ஒன்றும் கஷ்டமான கலை இல்லை! சங்கீதம் என்ற நுண் கலையே ஒருவருக்கு அபாரமாக வந்திருக்கும் போது, வேறு எதுதான் கஷ்டம்!"

ரவீந்திரனுக்கு இந்த இடத்தில் சிரிப்பு வந்து விட்டது. அப்புலிங்கம் சொன்னான்: "ஆகையினால் ஸ்ரீமான் ரவீந்திரன் அவர்கள் பொறுமையோடு இருக்க வேண்டும் என்பதாக இந்தச் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளுகிறேன்!"

இரண்டு கைகளையும் தட்டிக்கொண்டே "நான் அதை ஆமோதிக்கிறேன்!" என்று சொல்லி மீண்டும் கைகளைப் பலமாகத் தட்டினார் டாக்டர் சுரேஷ்.

"டாக்டர்! அப்படி யென்றால் இந்த வீட்டைக் காலி பண்ண வேண்டும் என்று நீங்களும் சொல்கிறீர்கள். அப்படித்தானே?" என்றான் ரவீந்திரன். மீண்டும் அவனுக்கு முகம் சிவந்தது.

"மிஸ்டர் ரவீந்திரன்! பார்த்தீர்களா? மறுபடியும் கோபம் எட்டிப் பார்க்கிறதே. கொஞ்சம், கொஞ்சம், கொஞ்சம் பொறுமையாக இருங்கள்!" என்றார் டாக்டர் சுரேஷ்.

"அதற்குச் சொல்லவில்லை, டாக்டர்! பாம்பு வந்தது. அதனால் வீட்டைக் காலி பண்ண வேண்டும் என்ற அர்த்தமற்ற ஒரு மூட நம்பிக்கைக்கு நானும் உடன்படுவதாக இருந்தால், பிறகு—"

"இல்லை. அதற்காக உடன்பட வேண்டாம். வேறு காரணங்களுக்காக நீங்கள் வேறு வீடு பார்த்துப் போக நேர்ந்தால், அந்தச் சமயத்திலும் இந்த மூட நம்பிக்கையை எதிர்ப்பதற்காக என்றே, நீங்கள் இந்த வீட்டிலேயே இருந்துதான் தீருவது என்று பிடிவாதம் பிடிக்கக் கூடாது அல்லவா?" என்றார் டாக்டர் சுரேஷ்.

"அப்படிச் சொல்லவில்லையே நான். இந்த வீட்டைமாற்றுவதற்கு எத்தகைய காரணமும் இல்லை என்பதுதான் என்னுடைய கருத்து."

"அப்படி வாருங்கள் வழிக்கு. இனி மேல் நான் சொல்லட்டுமா, இந்த வீட்டை மாற்ற வேண்டும் என்பதற்கான காரணங்களை?" என்று கேட்டார் சுரேஷ். ரவீந்திரன் அவரையேபார்த்தான்.

"மிஸ்டர் ரவி! ஒவ்வொரு காரணமாக விரல் விட்டு எண்ணிக் கொண்டு வாருங்கள் இரண்டு கையாலும் எண்ணுங்கள். ஒன்று, இந்த வீடு நாலு பேர் வரப் போக இடைஞ்சலான இடத்தில் இருக்கிறது. இரண்டு, இந்த வீடு அத்தனை பந்தோபஸ்தான முறையில் இல்லை. மூன்று, திருடத் தெரியாத அப்பாவித் திருடன்கூட வெகு எளிதில் ஏறிக் குதித்து விடக் கூடிய மொட்டை மாடியிலே இருந்துதான் நீங்கள் சங்கீதம் பழக வேண்டியதிருக்கிறது. நாலு, அந்த மொட்டை மாடியை யொட்டிய ஒரு சிறு அறையைத்தவிர வீடு என்று சொல்வதற்கு இங்கே வேறு இடம் கிடையாது. ஐந்து, காற்றோட்டம் என்பது இந் வீட்டில் மருந்துக்குக்கூட இல்லை. டாக்டர் என்ற முறையில் உங்கள் மனைவியின் ஆரோக்கியத்தை உத்தேசித்து இதைப் பலமாக ஆட்சேபிக்கிறேன். இனி, ஆறு— அடுத்த கைவிரல்களை மடக்க ஆரம்பியுங்கள் — ஆறாவது காரணம் நண்பர் அப்புலிங்கம் மாதிரி உங்களோடு சதா ஒரு நண்பர் இன்னும் கொஞ்ச நாளைக்காவது ஒத்தாசைக்கு இருக்க வேண்டும். ஆனால் அவர் இருக்கிற இடமோ எட்டி யிருக்கிறது. ஏழு, இந்தத் தெருவில் உள்ள உங்களுடைய ஒரே நண்பர் ராமநாதன்.

அவரும் இப்பொழுது வடக்கே உத்தியோகமாகிப் போகிறார். எட்டு ...''

ரவீந்திரனுக்கு இதற்கு மேல் கேட்டுக் கொண்டிருக்க முடியவில்லை.

''டாக்டர், தயவுசெய்து என்னை இப்படியெல்லாம் நச்சரிக்காதீர்கள். உங்களுக்கு என்னிடம் உள்ள அன்பு எனக்கு நன்றாகத் தெரியும். சுற்றி வளைக்காமல் சொல்லுங்கள்......''

''மிஸ்டர் ரவி, இன்று மாலையில் நான் அப்புலிங்கம் வீட்டுக்குப் போனபோது அவர் ஒரு யோசனை யதேச்சையாகச் சொன்னார். நீங்கள் இருவருமாகப் பேசி அது சம்பந்தமாய் ஒரு முடிவுக்கு வாருங்கள். நான் ஆஸ்பத்திரிப் பக்கம் போகிறேன். நாளைக் காலையில் மறுபடி வருகிறேன்'' என்று சொல்லி விட்டு, ஸ்டெதஸ்கோப்புடன் உள்ளே சென்று கல்யாணி அம்மாளைப் பரிசோதித்தார்.

''காலையிலேதான் சொன்னேனே, உங்கள் மனைவிக்கு உடம்பெல்லாம் சரியாகத்தான் இருக்கிறது. மனசுக்குத்தான் கொஞ்சம் ஓய்வு வேண்டும். நாலு பேரோடு பேசப் பழக வசதியாக ஒரு சூழ்நிலை இருந்தால் சரியாகப் போகும். எல்லாம் அப்புலிங்கம் சொல்லுவார். நான் வருகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டு டாக்டர் புறப்பட்டார்.

பகோரான் வீட்டிலோ?...

* * *

''உஸ்தாத் இந்த நேரத்தில் இங்கே பகோரான் வீட்டுக்கு வரவேண்டிய காரணம் என்ன? 'வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தது' என்று சொல்லுவார்களே, அப்படி ஆகிவிடுமோ நம்முடைய திட்டம்? இந்தப் பகோரானை எத்தனை சிரமப்பட்டு ஒரு வகையாகச் சரிக்கட்டி வைத்திருக்கிறோம்! இந்த நேரத்தில் உஸ்தாத் வந்து தொலைத்திருக்கிறாரே! நாம் வேறு அவருடைய கண்ணில் பட்டு வைக்கக் கூடாதே?''—இவ்வாறு நூறு எண்ணங்கள் நாகரத்தினத்தின் மனத்தில் வேலை செய்தன.

''பகோரான்! தயவு செய்து என்னைக் காட்டிக் கொடுத்து விடாதே!'' என்று சொல்லிக் கொண்டே நாகரத்தினம் 'மள மள' வென்று பகோரான் வீட்டு மாடிப் படிகளில் ஏறி மேல் அறைக்குள்ளே சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டு நார்க் கட்டிலில் உட்கார்ந்தான். அவனுடைய நெஞ்சு 'திக்குத் திக்கு' என்று அடித்துக் கொண்டது.

பகோரான் வாசலுக்கு வந்து உடம்பை வளைத்து உஸ்தாதுக்கு மிக்க மரியாதையோடு 'சலாம்' செய்தான். பயபக்தியோடு அவரை வீட்டுக்குள்ளே மெதுவாக அழைத்து வந்தான்.

நாகரத்தினம் மாடியிலே போய் ஒளிந்து கொள்ளவில்லையென்றால், பகோரான் உஸ்தாதை நேரே மாடிக்குத்தான் அழைத்துச் சென்றிருப்பான். அந்த மெஸ்மெரிஸ அறைக்குள்ளே உஸ்தாதை அழைத்துச் சென்றால் ஆயிரம் கேள்விகளுக்குப் பதில் சொல்லியாக வேண்டும் என்பது பகோரானுக்கு நன்றாகத் தெரியும். எனவே, அவன் உஸ்தாதை மெதுவாக வீட்டுக்குள்ளே அழைத்துச் சென்று கொண்டே சற்றுத் தயங்கினான். உஸ்தாதிடமிருந்து ஒரு காரியத்தை மறைப்பது இதுவரையில்லாத ஒரு புதிய பழக்கம் அவனுக்கு!

''தம்பி! உன்னோடு தனியாகக் கொஞ்சம் பேச வேண்டும். முக்கியமான விஷயம்!'' என்றார் உஸ்தாத்.

''தோட்டத்துக்கே போய்விடுவோமா?'' என்று கேட்டான் பகோரான்.

''சரி'' என்றார் உஸ்தாத்.

இருவரும் பகோரான் வீட்டுக்குப் பின்புறம் இருந்த விசாலமான தோட்டத்துக்குச் சென்றார்கள்.

''பகோரான்! குருவுக்குத் துரோகம் செய்கிற சீடனுக்கு அல்லாஹ் என்ன தண்டனை விதிப்பான் தெரியுமா?'' என்று பேச்சை ஆரம்பித்தார் மீரான். பகோரா

னுக்கு உடம்பெல்லாம் அப்படியே ஒரு விநாடி புல்லரித்தது. பதில் சொல்ல வார்த்தை வரவில்லை.

“திடீரென்று இப்படிக் கேட்கிறேனே என்று உனக்குத் திகைப்பாக இருக்கும். என்னுடைய வாழ்க்கையில் இது நாள் வரை இல்லாதபடி இப்பொழுது அப்படி ஒரு பெரிய சம்பவம் நடந்திருக்கிறது. துரோகம் செய்தவன் யாரென்று தெரிந்தால் உனக்குத் தூக்கிவாரிப் போடும்!” என்றார் மீரான்.

இப்பொழுது பகேரானுக்கு நின்ற மூச்சுத் திரும்ப வந்தது. உஸ்தாத் சொல்ல ஆரம்பிப்பது வேறு விஷயம் என்று நிதானித்துக் கொண்டான். ஆனாலும் படபடப்புத் தீரவில்லை!

தோட்டத்தில் ஒரு மூலையில் நின்ற கொய்யா மரத்துக்குப் பக்கத்தில் மீரானும் பகேரானும் நின்று கொண்டார்கள்.

“உஸ்தாத்! நீங்கள் சொல்வது விசித்திரமாக இருக்கிறது. தங்களுக்குத் துரோகம் செய்யக் கூடிய அளவுக்கு யாரும் இது வரை துணிந்ததில்லை. ஒரு வேளை அறிவு கெட்டு ஆத்திரத்தில் யாராவது எதுவும் செய்திருந்தால்கூட......”



“பகேரான்! விஷயத்தைக் கேட்டு விட்டுப் பிறகு பேசு!” என்றார் உஸ்தாத். பகேரான் மௌனமாகிவிட்டான். உஸ்தாத் அப்துல் மஜீதைப் பற்றிப் பேச ஆரம்பித்தார்.

“ஆமினா எத்தனையோ நல்ல பெண். எவ்வளவோ பிரியத்தோடு அவளை வளர்த்தேன். கடைசியில் அவளே இப்படி நடந்து கொண்டு விட்டாள். இதையெல்லாம் பார்க்கும்போது, மகளாவது தகப்பனாவது என்று தோன்றி விடுகிறது. ஒரு தகப்பன் எத்தனை பாசமாக இருந்தாலும் கூடப் பருவம் வரும்போது, பெண்ணுக்கு அவளுடைய தகப்பனுமே அன்னியனாகி விடுகிறான்! அல்லாஹ்த்தாலாவின் படைப்பு இரகசியம் அது! காஜியார்தான் சொன்னாரே, அது ஆமினாவின் தவறு இல்லை, பருவத்தின் தவறு என்று!”

இப்படிச் சொல்லிக் கொண்டே உஸ்தாத் பெருமூச்சு விட்டார். பகேரானுக்கும் பெருமூச்சு வந்தது. தன்னுடைய குருநாதரின் கம்பீரமான முகத்தில் இதற்கு முன்பு இத்தனை சோகத்தை அவன் பார்த்ததில்லை.

“உஸ்தாத்! இப்பொழுது என்ன செய்ய வேண்டும்? மஜீத் எனக்குச் சொந்தக்காரப் பையன் என்பது உங்களுக்குத் தெரியும். அவனுடைய குடும்பம் ஒரு ஹபீஸ் குடும்பம். பெரிய மனிதர்களுக்குத் தெரிந்தால் அவன் செய்த இந்தக் காரியத்துக்கு அவனை என்ன வகையில் தண்டிப்பார்களோ, சொல்ல முடியாது. பாவம், திருக்குர்ஆன் எத்தனை உருக்கமாகப் படிப்பான் மஜீத்! கடைசியில் அவனுடைய புத்தி இப்படியா போக வேண்டும். கேட்கவே கஷ்டமாக இருக்கிறது உஸ்தாத்!”

பகேரானுடைய குரலில் மெய்யான வருத்தம் தொனித்தது. உஸ்தாத் சொன்னார்:

“பகேரான்! மஜீதைப் பற்றி எனக்குத் தெரியாதா என்ன! எத்தனையோ நல்ல பிள்ளைதான். அவனைக் குற்றம் சொல்ல மாட்டேன். உண்மையில் இந்த மாதிரி விஷயங்களில் எல்லாம் ஆண்களைக் குற்றம் சொல்லுவதே பிசகு. பொதுவாக ஒரு பெண் ஒரு ஆடவனுக்கு இடம் கொடுத்து இசைவாக நடந்து கொண்டால் ஒழிய ஒரு பொழுதும் ஆண்மகனுக்குத் துணிச்சல் உண்டாகாது. இது தான் மனித சுபாவம். இசையாத பெண்ணிடம் பலவந்தப்படுத்தி நடந்து கொள்ளுகிற மிருக மனிதர்கள் மிக மிகக் குறைவு. மகளிடமுள்ள பாசத்தினால் இந்த உண்மையைநான் மறந்துவிடக் கூடாது!” என்றார் உஸ்தாத்.

“அப்படிச் சொல்லாதீர்கள் உஸ்தாத்! ஆமினாவுக்கு என்ன தெரியும் பாவம்! சிறு குழந்தை. அவளுடைய மனசை அவ்வளவு தூரம் கெடுத்திருக்கிறான் இந்தப் போக்கிரி......”

“பகேரான்! கொஞ்ச நேரத்துக்கு முன்தானே மஜீதை நல்லவன் என்றாய். அதற்குள் இப்படிப் பேசுகிறாயே! தப்பு அது. மஜீத் உண்மையிலேயே நல்லவன். குற்றம் எல்லாம் ஆமினாவின் பேரிலேதான். அவள் ஆரம்பத்திலேயே மஜீதிடம் கடுகடுப்பாக நடந்து கொண்டிருந்தால், விஷயம் இத்தனை தூரத்துக்கு முற்றுமா? சிறு பிள்ளை என்கிறாய். அதைப்போல் முட்டாள்தனமான பேச்சு வேறு இல்லை. பருவமான ஒரு பெண்ணுக்கு இம்மாதிரி யோசனைகளில் தோன்றுகிற புத்தி. ஒரு வயதான ஆண்மகனுக்குக் கூட ஏற்படாது. ‘புத்தி அறிகிற பருவம்’ என்றே தெற்குப் பக்கங்களில் ஒரு வார்த்தை இருக்கிறது.



தெரியுமா? பெண்களுடைய மன இயல்பு தெரியாதவர்கள்தான் உன்னை மாதிரிப் பேசுவார்கள். உண்மையில் ஒரு நாயகனை அடைய வேண்டும் என்று ஒரு பெண் உறுதி செய்து விட்டாள் என்றால், அந்த உறுதியிலே அவளுக்குத் தோன்றுகிற யோசனைகள், ஒரு கலாசாலைப் பிரின்ஸிப லுக்குக் கூடத் தோன்றாது!'' என்றார் உஸ்தாத். எப்பொழுதுமே அவருடைய மதிப்பில் ஒரு காலேஜ் பிரின்ஸிபல்தான் அறிவின் எல்லைக் கோடு.

பகோரான் என்ன பதில் சொல்வது என்று தோன்றாமல் பேசாது நின்றான்.

''பகோரான்! என்னென்னவோ சொல்லி உன்னைத் திணற அடிக்கிறேன் போலிருக்கிறது. பரவாயில்லை. யார்மேல் குற்றம் இருந்தாலும் இனிமேல் அதை ஆராய்வதில் அர்த்தம் கிடையாது. காஜியாருக்கு மனசுக்குள்ளே மஜீதிடம் ஒரு பிரியம் இருக்கிறது. எனக்கும் அவனிடத்தில் வேறு எந்த வகையான வெறுப்பும் கிடையாது. நான் நினைத்தது ஆமினாவுக்கு ஒரு படித்த மாப்பிள்ளையாகப் பார்க்கலாமே என்றுதான். இந்தச் சிலம்ப வித்தையெல்லாம் நம்மோடு போகட்டும். நம்முடைய வீட்டுக்கு வருகிற மாப்பிள்ளையாவது குச்சியைப் பிடிப்பதற்குப் பதில் சுவடியைப் பிடிக்கட்டுமே என்று நினைத்தேன். ஆனால், சிலம்பக்காரன் மகளுக்குச் சிலம்பத்திலேதான் மனம் கவிகிறது! இதற்கு என்ன செய்ய!''

இவ்வாறு சொல்லிக் கொண்டு சிரித்தார் உஸ்தாத் மீரான். அந்தச் சிரிப்பில் வேதனை குலுங்கியது.

''உஸ்தாத்! உங்களுடைய மனசு எனக்குத் தெரியும். நீங்கள் எவ்வளவு கவலையில் இருக்கிறீர்கள் என்பது உங்களுடைய பேச்சில் நன்றாக—''

''பகோரான்! கவலைப் படுகிறவனைப் பார்த்து அல்லாஹ் சிரிப்பான்! சிரிப்பவனைப் பார்த்து அல்லாஹ் கவலைப் படுவான்! இரண்டும் இல்லாமல் நிதானத்தோடு இருக்கிறானே அவன்தான் அல்லாஹ்வுக்குப் பிரியமானவன். இனிமேல் நான் அப்படியிருக்க ஆசைப்படுகிறேன். ஆமினாவின் நிக்காஹை முடித்து விட்டு, மூதூர்ப் பண்ணையாருக்குக் கொடுத்த வாக்குறுதி ஒன்று இருக்கிறது.—அதையும் நிறைவேற்றி வைத்து விட்டால் பிறகு சிலம்பப் பள்ளிக்கூடத்துக்கே ஒரு 'சலாம்' போட்டு விடலாம். பள்ளி வாசல் இருக்கவே இருக்கிறது. அதைத் தினந்தோறும் கூட்டித் தண்ணீர் தெளித்துக் கொண்டிருந்தாலுங் கூடப் போதும். அல்லாஹா~த்தாலாவின் மனம் குளிரும்!''

பண்ணையாருக்குக் கொடுத்த வாக்குறுதி என்று உஸ்தாத் தமது பேச்சுக்கு மத்தியில் ஒரு வார்த்தையைச் சொருகியது பகோரானுக்கு என்னவென்று புரியவில்லை. ஆனாலும் இந்தச் சந்தர்ப்பத்தில் அதைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்வதற்கு மனம் ஓடவில்லை.

''உஸ்தாத்! நீங்கள் இவ்வளவு மனச் சோர்வோடு பேசி இது வரை நான்



கேட்டதில்லை. மஜீத் விஷயத்தில் இப்பொழுது நான் என்ன செய்ய வேண்டும் என்று கட்டளை இடுங்கள். செய்து முடித்துவிட்டு வந்து சொல்லுகிறேன்!"

இப்படிப் பேசும்போது பகோரானுடைய குரலில் ஒரு ஆவேசம் இருந்தது. மாடியிலே போய் ஒளிந்துகொண்டு நின்ற நாகரத்தினம் இந்தக் கட்டத்தில் மெதுவாக ஜன்னலைத் திறந்து பார்த்தாள்.

'பகோரானுக்குத் தான் தன்னுடைய உஸ்தாதிடம் எத்தனை பக்தி! இந்தப் பக்தியை எப்படியாவது மாற்றியாக வேண்டுமே! இல்லாவிட்டால் நம்முடைய திட்டம் நிறைவேறாதே! ஏ ஜிகிஜும், ஜிங்கிட ஜும்மே! நீதான் இதற்கு ஒரு வழி செய்ய வேண்டும்!' என்று பிரார்த்தனை செய்துகொண்டாள் நாகரத்தினம். பிரார்த்தனை என்பது நல்லவர்களுக்கு மட்டுமே உரிய தனி உடைமையா என்ன?

பகோரானிடம் உஸ்தாத் சொன்னார்: "தம்பி காஜியார் மசூதியிலே சொன்ன வார்த்தைகளுக்குப் பிறகு என்னுடைய மனம் மாறி விட்டது. நடந்து போன விஷயங்களுக்காக வருத்தப்படுகிறேனே தவிர, இனி அதைத் தடுத்து நிறுத்தி விரோதமாக நிற்க நான் இஷ்டப்படவில்லை. அது விவேகம் ஆகாது. இன்றிராத்திரி மூதூர்ப் பண்ணை அப்புலிங்கத்தை நம்முடைய வீட்டுக்கு வரச் சொல்லியிருக்கிறேன். ஆமினாவின் நிக்காவைப் பற்றிய என்னுடைய முடிவை அந்தத் தம்பியிடம் தெரிவித்தாக வேண்டும். நமக்கு எந்த விசேஷத்துக்கும் ஒத்தாசை செய்கிற குடும்பம் அந்தப் பண்ணை வீடு ஒன்றுதான். அதனால்தான் உன்னிடம் இத்தனை அவசரமாக வந்தேன்!" என்றார் உஸ்தாத்.

வார்த்தை அரைகுறையாக மாடியிலே நின்ற நாகரத்தினத்தின் காதில் விழுந்தது. தன்னைப் பற்றிய விஷயம் ஒன்றுமில்லை என்று தெரிந்து கொண்டதில் நாகரத்தினத்துக்கு ஒரு நிம்மதி. ஆனாலும் அப்புலிங்கத்தின் பெயரைக் கேட்டதும் கிலேசம் உண்டாயிற்று.

"பகோரான்! நீ மஜீதைத் தனியாகச்சந்தித்து என்னுடைய மன நிலைமையைச் சொல்லு. பிள்ளைப் பாசம் என்று ஒன்று இத்தனைக்கு மத்தியிலும் என்னை வேதனைப்படுத்துகிறது. மஜீத் ஆமினாவை நிக்காஹ் செய்து கொள்ளட்டும். ஆனால் அவன் இதுவரை ஊரைச் சுற்றி வந்தது போல் இனிமேல் இருக்க முடியாது. ஏதாவது தொழில் செய்தாக வேண்டும். வேறு ஒன்றும் இல்லாவிட்டாலும், ஒரு சிறு சிலம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கட்டும். நாலு பிள்ளைகளுக்கு வித்தை சொல்லிக் கொடுத்து இரண்டு காசு சம்பாதித்தாலும் போதும். எனக்குத் திருப்திதான். மற்றப்படி மஜீத் வேறு என்ன தொழில் செய்ய ஆகும்? என்னுடைய ஆமினாவின் புருஷன் ஒரு காலேஜ் ப்ரொபசராக இருப்பான் என்று எல்லாரிடமும் சொல்லி வந்தேன். அந்த வார்த்தைக்கு இனிமேல் முழு மதிப்பு இல்லாவிட்டாலும், ஏதோ நூற்றுக்குப் பத்து பழுதில்லாத வகையில் மஜீதை ஒரு குட்டி உஸ்தாதாகவாவது ஆக்கிப் பார்த்து விட்டால் போதும். இது விஷயத்தில் நீயும் அவனோடு ஒத்துழைக்கத் தயாராக இருந்தால் சொல்லு. மஜீதிடம் இப்பொழுதே போய்க் கலந்து பேசி நிக்காஹுக்கு நாள் நிச்சயம் பண்ணி விடலாம்!"

பகோரானுக்கு முகம் மலர்ந்தது. மாடியிலே நின்ற நாகரத்தினமோ அப்படியே கைகளை உதறினாள்.

"உஸ்தாத்! நானே ஒரு சிலம்பப் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டும் என்றும், உங்களிடம் அது விஷயமாய்க் கேட்க வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அல்லாஹ் கிருபையில் நீங்களே சொல்லி விட்டீர்கள்!"

"பகோரான்! மஜீதும் நீயும் சம ஜோடிகள். உண்மையில் எனக்குத் திருப்தியாக வித்தையைப் படித்துக் கொண்டவர்கள் நம்முடைய பள்ளிக்கூடத்திலேயே நீங்கள் இரண்டு பேருந்தான். மற்றப்படி யாரும் இல்லை. குப்பு



சாமி தொழில் தெரிந்தவன். ஆனால் விசுவாசம் இல்லாதவன். விசுவாசம் இல்லாதவனிடத்தில் வித்தை விளங்காது. அல்லாமல் அந்த வித்தையை வளர்க்க மாட்டான். நீதான் சொல்லேன். இந்தக் குப்புசாமி இதுவரை சுய புத்தியோடு ஏதாவது ஒரு காரியம் செய்திருக்கிறானா?"

நாகரத்தினம் ஜன்னல் கதவை இன்னும் நன்றாகத் திறந்து வைத்துக் கொண்டு காதை மட்டும் கம்பிகளின் இடைவெளியிலே வைத்தவாறு, முகத்தை அறைக்குள்ளே திருப்பிக் கொண்டு நின்றான். குப்புசாமி என்ற வார்த்தை அந்தக் காதை அப்படி ஜன்னல் – கம்பிகளிலே கொண்டு ஒட்ட வைத்தது!

"பகீரான்! குரங்காட்டி வித்தை பார்த்திருக்கிறாயா? அந்தக் குரங்கு மாதிரித்தான் குப்புசாமி. இல்லை இல்லை, அது கூடத் தவறு. குரங்காவது கொஞ்சம் புத்தியோடு நடந்து கொள்ளுமே. அப்படிக்கூட இல்லை குப்புசாமி. அந்தக் குரங்கு ஏறிச் சவாரி செய்யும் அல்லவா, "குத்தா" அது மாதிரித்தான் குப்புசாமி. இப்பொழுது சவாரி செய்வது நாகரத்தினம்! இந்த இரண்டையுமே பிடித்து ஆட்டி வைக்கிறது சைத்தான்."

"எந்த நாகரத்தினத்தைச் சொல்கிறீர்கள், உஸ்தாத்!" என்று கேட்டான் பகீரான். மாடியிலே நின்ற நாகரத்தினத்துக்கு உடம்பு வியர்த்தது.

"லால்குடி மிராசுதாரின் நல்ல பெயரைக் கெடுப்பதற்கு என்று பிறந்திருக்கிறானே அந்தப் பையன்தான். நம்முடைய பள்ளிக்கூடத்திலே கூடக் கொஞ்ச நாள் மண்ணைவாரிப் போட்டானே—உனக்குத்தான் அவனை நன்றாகத் தெரியுமே, பகீரான்!" என்றார் உஸ்தாத். பகீரானுக்கு இந்த இடத்தில் இதயம் துடித்தது. "மாடியிலேதான் இருக்கிறான்!" என்று சொல்லி விடலாமா என்று கூடப் பட்டது. ஆனால் அடக்கிக் கொண்டான். என்றாலும் உஸ்தாதுக்கு நாகரத்தினத்திடம் இத்தனை தூரம் கோபம் ஏற்படுவானேன் என்று அவனுக்குப் புரியவில்லை. கலங்கி நின்றான். உஸ்தாத் சொன்னார்: "நாகரத்தினமும் குப்புசாமியும் இப்பொழுது இரட்டைப் பிள்ளைகள்! அது ஒரு பெரிய கதை. சாவகாசமாகச் சொல்லுகிறேன். நீ மஜீதை எப்பொழுது பார்க்கிறாய், அதைச் சொல்லு!" என்றார் உஸ்தாத் மீரான்.

"இன்றைக்கு ராத்திரியே பார்க்கிறேன். ஆனால் ஒரே ஒரு சந்தேகம். புதிய பள்ளிக்கூடத்தில் நாகரத்தினமும் குப்புசாமியும் நம்மோடு சேர்வதா யிருந்தால் வேண்டாம் என்று சொல்கிறீர்கள்!"

"பகீரான்! என்னுடைய சொந்த விருப்பு வெறுப்புக்களை உங்கள் பேரிலும் திணிக்கிறவன் இல்லை இந்த உஸ்தாத். சீடர்களுக்கு உரிமை கொடுத்துப் பார்ப்பதிலேதான் எனக்கு ஆனந்தம். ஆனால் அந்த இரண்டு பேரையும் பற்றிய விஷயத்தை முழுதும் தெரிந்து கொண்டு அதன் பிறகு நீயும், மஜீதும் ஒரு தீர்மானத்துக்கு வரவேண்டும் என்பதுதான் என் ஆசை. எல்லாவற்றிற்கும் நீ மஜீதைப் பார்த்துப் பேசி விடு. நான் புறப்படுகிறேன்!" என்றார் உஸ்தாத்.

மாடிக்கு வெளியே யிருந்த மேடைத் தாழ்வாரத்துக்கு வந்து வளைவுச் சுவருக்கு அருகிலே நின்றவாறு உஸ்தாதையும், அவரை வழியனுப்ப வாசல் வரை சென்ற பகீரானையும் கூர்ந்து பார்த்தான் நாகரத்தினம். அப்படியே ஸ்தம்பித்துப் போய் நின்று விட்டான்.

ஆமாம்; அது 'லிலி ஒட் அவுஸ்'தான்! அவள் அருகே நின்றது அவளுடைய தகப்பனார் மிஸ்டர் ஒட் அவுஸ்தான்! அவளுடைய கண்ணிலேதான் எத்தனை குறுகுறுப்பு! அந்த ஒய்யாரமான கவுனும், அவளுடைய கேசத்தின் கருணும் தெளிவும், மேனியின் மிடுக்கும் எத்தனை கவர்ச்சியாக இருக்கின்றன. சாதாரணமாக நமக்கெல்லாம் வருஷத்துக்கு ஒரு வயது அதிகரிக்கிறது, இந்த லிலிக்கு மட்டும் ஒரு வருஷத்துக்கு ஒரு வயது குறைகிறதா—

நாகரத்தினம் கிறங்கிப் போனான்! பழைய 'டெலிபோன் எக்ஸ்சேஞ்'சும், காஜா மலையும் அப்படியே கண் முன்னால் மாறி மாறி வந்து சுழன்றன! இவர்கள் ஏன் இந்த நேரத்தில் இங்கு வரவேண்டும்? உஸ்தாதுக்கு ஒரு பெரிய சலாம் போடுகிறாரே மிஸ்டர் ஒட் அவுஸ்! இதோ லிலி கூட எத்தனை அழகாக உடம்பை வளைத்து உஸ்தாதுக்கு சலாம் செய்கிறாள்! அதோ இவர்கள் இருவருக்கும் பின்னால் பதுங்கிப் பதுங்கி நுழைகிறானே ஒரு சிறுவன். காலையிலே "ஜிங்கிடஜும்"முக்கு எதிரே நின்று மயங்கி விழுந்தானே அந்தப் பையன் அல்லவா இவன்? இவன் எங்கே இவர்களோடு வருகிறான்? பகீரான் வீட்டுக்கு இவர்கள் இத்தனை பேரும் ஒருமித்து வரக் காரணம் என்ன? உஸ்தாதும் இவர்களைத் தெரிந்த மாதிரி முகம் மலர்ந்து சிரிக்கிறாரே!

நாகரத்தினம் வளைவுச் சுவரிலே சாய்ந்தவாறு மனம் குழம்பினான். (தொடரும்)

Printed & Published by T. Sadasivam at the "Kalki" Press, No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras-10. Editor: Mi. Pa. Somasundaram.

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon